

கல்கி
KALKI 11.4.2004 ரூ.6.00
கல்கி
அரசியல் நாயகர்கள்!
தேர்தல் ஸ்பெஷல்
- இணைப்புப் புத்தகம்!
பா.ம.க பேச்சு கா!
உள்ளே...
உத்யோகம் 'பொருத்த' லட்சணம்!
மினி கல்கி
கல்கி

ஐம்பத்தியிரண்டு வருடங்களுக்குப் பிறகு வசப்பட்டிருக்கிறது இந்த வெற்றி! பாகிஸ்தான் மண்ணில் இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றி என்பது மாமாங்கத்தை விட அபூர்வம். ஆனால் முல்தானில் நடைபெற்ற பந்தயத்தில் பாக்.கிற்கு ஃபாலோ ஆனைக் கொடுத்து இந்திய அணி பெற்ற வெற்றி, சரித்திரத்தில் இடம் பெறவேண்டிய ஒன்றுதான். இந்தியப் பந்து வீச்சாளர்கள் இந்த அளவுக்குத் திறமை காட்டுவார்கள் என்று யாரும் எதிர்பார்த்தார்களா என்ன? முக்கியமாக இர்ஃபான் பதான்,



வசப்பட்ட வெற்றி!

முதல் இன்னிங்ஸில் எடுத்த நான்கு விக்கெட்டுகளும் அபாரமானவை. அனில் கும்ப்ளேவும் முழுத் திறமையையும் காட்டினார். ''மிகவும் தண்டமான பிட்ச்'' என்று சில பாகிஸ்தானிய விமர்சகர்கள் கசப்பு வழியப் பேசினார்கள். ''மிகவும் தண்டமான அணி'' என்று பல பாகிஸ்தானிய ரசிகர்கள் ஓவராகப் படபடக்கிறார்கள். உண்மைகளை வெல்லும் உணர்வுகள்!

'இன்னும் ஒரு நான்கு ரன்கள் எடுக்க அனுமதித்து, சச்சினை டபுள் சென்சுரி எடுக்கவிட்டிருக்கலாம் ட்ராவிட்' என்பது குறித்து இருவேறு கருத்துகள் நிலவினாலும், ஷேவாக்கின் சிறப்பான ஆட்டம் பற்றி எல்லோரும் புகழ்கிறார்கள்.

ஷேவாக் ஆடிய முதல் ஆட்டம் பாகிஸ்தானுக்கெதிரானது. 1998-99ல் பெப்சி கோப்பைப் பந்தயத்தில் ஒரே ரன்னில் அவுட்டானார். பிறகு மூன்று ஓவர்கள் பந்து வீசினார். அதில் 35 ரன்களைத் தானமளிக்க, அதைத் தொடர்ந்து, கொஞ்ச காலம் அணியிலிருந்து ஓரம் கட்டப் பட்டார் ஷேவாக்.



அருள்வாக்கு



நதியின் மேல் பாலம் போட்டிருக்கிறது. அதில் பல வளைவுகள் இருக்கின்றன. எல்லா வளைவுகளும் ஒரே அளவாகக் கட்டப்பட்டவைதாம். ஆனால் ஒவ்வொரு வளைவுக்கும் கிட்டத்தில் இருப்பவனுக்கு அந்தந்த வளைவே பெரிதாகவும், மற்றவை சின்னதாகவும் தெரியும். இப்படியே அந்தந்த மதஸ்தர்களுக்கும் தங்கள் மதமே பெரிதாகத் தெரிவதால், பிறரை அதற்கு அழைக்கிறார்கள். ஆனால் எல்லா வளைவுகளும் ஒரே அளவுதான். யாரும் தாங்கள் பிறந்த மதத்தைவிட்டு விலக வேண்டியதில்லை.

மதங்களுக்கிடையே கோட்பாடுகளிலும் அநுஷ்டானங்களிலும் சில வித்தியாசங்கள் இருப்பதில் தவறில்லை. எல்லா மதங்களையும் ஒரே போல் ஆக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரே மாதிரி ஆக்காமலே, எல்லா மதஸ்தர்களும் மனத்தில் ஒற்றுமையோடு, இருப்பதுதான் அவசியம். 'யூனிஃபார்மிடி' அவசியமில்லை. 'யூனிடி' இருப்பதே அவசியம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

ஆனால் இப்போது பாகிஸ்தானுக்கெதிராக 309 ரன்களைக் குவித்து, இனிமையாகப் பழி தீர்த்துக் கொண்டிருக்கிறார் ஷேவாக்.

இரண்டாவது நாள் 228 ரன்கள் எடுத்து முடிந்திருந்த நிலையில், அன்றிரவு அவரது அம்மா தொலைபேசியில் பேசினாராம். "இரவில் நன்றாக ஓய்வெடுத்துக் கொள். நாளைக்கு முன்னூறு ரன்களைத் தாண்டு" என்றாராம். கிரிக்கெட் ஆர்வமிக்க அத்தனை இந்தியத் தாய்மார்களின் விருப்பமல்லவா அது? நிறைவேற்றி விட்டார் தலை நகரத்தின் தன்னிகரில்லாத விளையாட்டு வீரராகத் தற்போது விளங்கும் ஷேவாக். (மற்றொரு டெல்லிக்காரர் நெஹ்ரா).

'இப்போது யாருடைய சாதனையை முறியடித்திருக்கிறீர்கள் என்பது தெரியுமா?' என்று இரண்டாம் நாள் முடிவில் கேட்டார் மஞ்ச்ரேக்கர். "தெரியாதே. நான் பாட்டுக்கு பேட்டிங்கில் மட்டுமே கவனம் செலுத்திக் கொண்டிருந்தேன்" என்றார் ஷேவாக்.

சற்றுக் கூர்மையாக அவர் கவனித்திருந்தால், ''பாகிஸ்தானுக்கெதிரான அதிகபட்ச ரன் எடுத்த இந்தியர் என்ற என்னுடைய சாதனையைத்

தான் நீ முறியடித்திருக்கிறாய்" என்ற அவரது செய்தியைப் படித்திருக்க முடியும்.

ஆட்டத்தின் நடுவே தம்முடைய பேட்டால் அக்தரின் வயிற்றுப் பகுதியை மெல்ல அழுத்தியபடியே எங்கோ பார்த்தபடி ஷேவாக் நடக்க (அறியாமல் செய்ததாகவே நம்புவோம்) அக்தர் 'இதென்ன அக்கிரமம்' என்பதுபோல் இரு கைகளையும் விரித்து நியாயம் கேட்க, இன்ஸமாம் உல் ஹக் சமாதானம் செய்து வைத்ததும் சுவை.

ஏற்கெனவே 'குறைவான உயரம், சுருட்டை முடி' என்பது போன்ற காரணங்களினால், சச்சினை ஷேவாக்குடன் இணைத்து விமர்சகர்கள் எழுதியதுண்டு (ஷேவாக்கின் பெற்றோர் கூட, அவர்களைப் பார்க்கும்போது இரட்டையர்களைப் பார்ப்பது போல் தோன்றும் என்றிருக்கிறார்கள்). இனி ஆட்டத் திறமைக்கும் இந்த ஒப்பிடல் தொடரும்.

ஒன்று நிச்சயம். ஒரு நாள் பந்தயம், டெஸ்ட் தொடர் இரண்டிலுமே வென்று வந்தால், வரும் தேர்தலில் வென்று பிரதமராகும் நபரை விட, நாடு திரும்பும் இந்திய அணிக்கு அதிக வரவேற்பு கிடைக்கும் என்பது நிச்சயம்!

- குல்லூ

'சிரித்து வாழ வேண்டும்'

- அடுத்த வாரம்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

"பா.ம.க. போட்டியிடும் ஆறு தொகுதிகளிலும் அதைத் தோற்கடிக்க வேண்டும்" என்று மன்றத் தோழர்களுக்கு ரஜினி கட்டளையிட்டதை அடுத்து, தமிழகத் தேர்தல் களம் சூடு பிடித்திருக்கிறது. "இந்த ஆறு தொகுதிகளில், மூன்றில் பா.ம.க.வை எதிர்த்து அ.தி.மு.க. போட்டியிடுகிறதே. அதை எப்படி ஆதரிப்பது?" என்று ரஜினி ரசிகர் மன்றத்தினரிடையே ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. பா.ஜ.க. எதிர்த்து நிற்கும் மீதி மூன்று தொகுதிகளில், சில இடங்களில் ரசிகர் மன்றங்கள் கலைக்கப் பட்டிருக்கின்றன. இந்த ரசிகர் மன்றத் தோழர்கள் என்னதான் நினைக்கிறார்கள் என்ற உண்மை நிலையைக் கண்டறிய, பா.ம.க.வும், அ.தி.மு.க.வும் மோதும் செங்கல்பட்டுத் தொகுதிக்குச் சென்றோம்.

வண்டலூர் மிருகக் காட்சி சாலையை ஒட்டி பிரியும் சாலை, கேளம்பாக்கத்துக்குச் செல்கிறது. வழியில் கொளப்பாக்கம், மேலக் கோட்டையூர், கீழக் கோட்டையூர் ஆகிய இடங்களில் ரஜினி ரசிகர் மன்ற போர்




* ஹேமநாதன்



* ஏழுமலை

டுகள் எதுவும் காணப்படவில்லை. சற்றுப் பெரிய கிராமமான மாம்பாக்கத்தில் விசாரித்தோம். "இங்க பத்து வருடத்துக்கு முன்பு மன்றம் வைத்திருந்தோம். கலைத்து விட்டோம். ஆனால் ரஜினி ரசிகர்கள் இங்கு நிறையவே இருக்கிறார்கள்" என்றார் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆருண். "ரஜினி முடிவைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"ரஜினியே எதுவும் அறிவிக்கவில்லையே. அவரிடமிருந்து அறிக்கை வரட்டும், பார்க்கலாம். பொதுவா ரஜினி சொன்னால் ரசிகர்கள் கேட்பார்கள். அதேபோல் தான் 1996ல் அவரது பேச்சைக் கேட்டோம். இப்போது நிலைமை மாறியிருக்கிறது. ரசிகர்கள் கொஞ்சம் குழப்பமாகத்தான் இருக்கோம். பா.ம.க. வேட்பாளர் ஏ.கே. மூர்த்திக்கு, மக்களிடம் நல்ல பெயர். எனவே யோசிக்க வேண்டும்" என்றார் ஆருண்.



* ஜி.கே. மணி

திருப்போரூருக்கு முந்தைய கிராமம் கன்னகப்பட்டு. இங்கு காலனிப் பகுதியில் ரஜினி நற்பணி மன்றம் உள்ளது. நாற்பது உறுப்பினர்கள், இருப்பதாகச் சொன்னார்கள். தலைவர் ஏழுமலையும், செயலாளர் பொன்னுரங்கமும். "தலைவர் சொல்லிட்டாருங்க. பா.ம.க.வை தோற்கடித்தே தீரணும். பாபா படம் சரியாக ஓடாததற்கு, டாக்டர் ராமதாஸ்தான் காரணம். அவர் ஏன் எங்கத் தலைவர்கிட்ட மோதணும்? ரஜினிக்கு முன்னரே, நிறைய நடிகர்கள் மது குடிப்பது போன்றும், சிகரெட் குடிப்பது போன்றும் நடித்துள்ளார்

பா.ம.க



* மோகன்

கள். அவர்களை ஏன் ராமதாஸ் கண்டிக்கவில்லை? இந்தத் தேர்தலில் பா.ம.க.வைத் தோற்கடிக்காவிட்டால், அதன் பிறகு ரஜினி மீது நேரடியாகவே அவர் பாய்வார். எனவே பா.ம.க. வேட்பாளர் நல்லவரோ, கெட்டவரோ, எதிரணியில் நிற்கும் வேட்பாளரை வெற்றி பெற வைக்க முழு முயற்சி செய்வோம்" என்றார்கள்.

திருப்போரூரில் நாம் சந்தித்த ரஜினி

-கலகலக்கும் ரஜினி மன்றங்கள்!

"ஆன்மிக நாட்டம் இருப்பதாகச் சொல்பவருக்கு இது அழகா...?"



பேச்சு கா!

மன்றத் தலைவரான ஹேமநாதன், "தலைவர் எடுத்த முடிவு தப்பு. அரசியல் ஒரு சாக்கடை என்று சொல்லி விட்டு, அதில் குதித்தால் எப்படி? இங்கு ரசிகர் மன்றங்களில் பெரும்பாலும் எல்லா ஜாதியினரும் இருக்கிறோம். அரசியலில் வரணும் என்றால் தலைவர் தனியாக வரட்டும், உயிரைக் கொடுக்கிறோம்" என்கிறார். இவரது மன்றத்தில் நாற்பது உறுப்பினர்கள் இருக்கிறார்களாம். தம் வீட்டுக்கு எதிரில் சுவரில் வரைந்திருந்த பாபா பட ரஜினியை, அழிக்கவும் துவங்கிவிட்டார் ஹேமநாதன்!

மாமல்லபுரத்துக்கு முன் உள்ள சிறிய கிராமம் பையனூர். இங்கு ரஜினி ரசிகர்களான ஆட்டோ மோகன், சீனுவாசன், ரூபன்குமார், வெங்கடேசன் ஆகியோரைச் சந்தித்தோம். "தலைவர் செய்தது சரியில்லீங்க" என்றார்கள் ஒரே குரலில்.

"அமைதியாக இருந்திருக்கலாம். நாங்க ரஜினி ரசிகர்கள் தான். ஆனால் ஒவ்வொருவருக்கும், ஒரு கட்சி, தலைவர் அபிமானம் இருக்கு. தலைவர் தனியே வந்து நிற்கட்டும். அப்ப பாருங்க. ஜமாய்ப்போம்" என்றார் ஆட்டோ மோகன். அருகே உள்ள பூஞ்சேரி, திருக்கழுகுன்றம் ஆகிய இடங்களிலும், ரசிகர் மன்றத்தினர் குழம்பிப் போயிருக்கிறார்கள்.



• சத்திய நாராயணா

சத்திய நாராயணாவைச் சந்தித்தோம். "ஆங்காங்கே சில சின்ன சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. மற்றபடி ரஜினி ஸார் என்ன சொல்கிறாரோ, அதை அப்படியே கேட்கக் கூடியவர்கள் ரசிகர்கள். ரஜினி ஆறு தொகுதிகளைப் பற்றி செய்திருக்கும் அறிவிப்பு என்பது, ரஜினி ரசிகர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததால் எடுக்கப்பட்ட முடிவுதான். 'பாபா' பட ரிலீஸ் சமயத்தில் பிரச்னை வந்தபோது, ஜனநாயக ரீதியில் பா.ம.க.வைச் சந்திப்போம் என்றார் ரஜினி. அந்த அடிப்படையில் இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

மற்ற முப்பத்தி நான்கு

தொகுதிகளில் என்ன செய்யப் போகிறீர்கள்?

அது பற்றி ரஜினி ஸார் இன்னும் சில நாட்களில் முடிவு செய்வார்

கலைஞர் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கும் ரஜினி, தி.மு.க. வேட்பாளர்களைத் தோற்கடிக்க ரசிகர்களை வேலை செய்யச் சொல்வாரா?

"இது பற்றி எல்லாம் எதுவும் சொல்ல முடியாது. ஆனால் எதிரிகள் யாரென்று தீர்மானித்து அவர்களை முறியடிக்க வேலை செய்யும்போது, காலத்தின் கட்டாயமாகச் சில விஷயங்கள் நடந்து விடுகின்றன."

பா.ம.க. போட்டியிடும் தொகுதிகளுக்குச் சென்று பணிகளை ஒழுங்கு படுத்தி வருகிறார் சத்தியநாராயணா.

இதற்கிடையில் மதுரையில் ராமதாஸுக்குக் கறுப்புக்கொடி காட்ட முயன்ற ரசிகர்கள் தாக்கப்பட்டதால், ரஜினி ரசிகர்களின் எதிர்ப்பு மேலும் வலுப்பட்டிருக்கிறது. ரஜினியின் தரப்புக்கு இத் தாக்குதல் நியாயம் சேர்க்கும் என்கிறார்கள்.

ரஜினியின் நிலைப்பாடு தங்கள் கட்சியின் வெற்றி வாய்ப்பை பாதிக்குமா? கூட்டுமா? என்று சில கட்சியினரிடம் கேட்டோம்.

"மற்றத் தொகுதிகளிலும் ரஜினி எங்களை ஆதரித்து, எங்கள் வெற்றி வாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்' என்கிறார் பா.ஜ.க.வின் இல. கணேசன்.

அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை வெளிப்படையாக எவரும் கருத்து சொல்லத் தயங்குகிறார்கள். காரணம், 'அம்மா' இந்த விஷயத்தில் மௌனம் சாதிப்பதுதான். விழுப்புரம் கூட்டத்துக்கு ரஜினி ரசிகர்கள் திரளாக வந்தும், அது பற்றி தமது பேச்சில் ஜெ. ஏதும் சொல்லவில்லை என்பதால், வாய் திறக்காமல் இருப்பதே நல்லது என்று நினைக்கிறது இரட்டை இலை வட்டாரம்.

"ரஜினியின் அறிவிப்பு எங்களுக்கு அதிர்ச்சியாக இல்லை. அதற்கு நாங்கள் முக்கியத்துவம் தரவுமில்லை. எங்கள் வெற்றி வாய்ப்பை இந்த அறிவிப்பு பாதிக்கப் போவதுமில்லை" என்கிறார் பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி.

தி.மு.க.வைப் பொறுத்தவரை இந்த விஷயம் குறித்து, அடக்கி வாசிக்கவே நினைக்கிறது. "அது ரஜினி மன்றத்தின் கருத்து. அதைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கு இல்லை. இந்த முடிவால் எங்கள் கூட்டணிக்குப் பாதிப்பு இருக்காது" என்று கலைஞர் சொல்லிவிட்டார். இரண்டாம் கட்டத் தலைவர்கள் வாய்திறக்க மறுக்கிறார்கள்.

சினிமாக்காரர்களிலே மிகவும் வித்தியாசமான மனிதர் ரஜினிகாந்த். சினிமா சென்ட்மென்ட், பக்தி என்ற சினிமா உலக வட்டத்திலிருந்து ஆன்மிகம் என்ற மேம்பட்ட தளத்துக்கு தம்மை உயர்த்திக் கொண்டவர்.

கல்கி பேட்டியில்கூட, 'ஆன்மிகம் எனது வாழ்க்கை; சினிமா எனது தொழில்' என்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே கூறி, அதை இன்றளவும் கடைப்பிடித்து வரும் மனிதர்.

அப்படிப்பட்ட ரஜினிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் வருகிறது? ஆன்மிக நாட்டம் இருப்பதாகச் சொல்பவருக்கு இது அழகா? அரசியல் ரீதியாக ஒருவருக்கு ஆதரவு தெரிவிப்பது என்பது வேறு விஷயம். ஆனால், ரஜினி போன்ற ஒரு மனிதர் இப்படி ஒரு நெகடிவ் நோக்கத்துடன் அரசியலில் ஈடுபடுவது சரியா? என்ற கேள்வி அனைவரையும் இன்று குடைந்தெடுக்கத்தான் செய்கிறது.

- ப்ரியன், மௌலி

அட்டை, படங்கள்:
மீடியா ராமு

"தலைவருக்கு எப்போதும் தேர்தல் ஞாபகம்தான்."

"எப்படிச் சொல்றே?"

"சாலை விபத்தில் பலியான ஐந்து வோட்டுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்'னு அறிக்கை விட்டிருக்கார்."

– வி. கிருஷ்ணகுமார்



"சந்திரரே சூரியரே சாமி பகவானே
இந்திரரை நோக்கித் தானே
எடுத்து வைத்தேன் இள முடியை!"
(நெற்கதிரை)
நாத்து நட்டு நடவு நட்டு
நான் படுற வெசனம் என்னா
அறுவடைக்கு வந்த நெல்லு
அரசாங்கக் கடன் அடைக்க
அடுப்பங்கரைச் சுள்ளியிலே
எங்கண்ணீரு சரம் தொடுக்க
அடுப்பெரிக்க வழியுமில்லே
அடுத்த வேளை சோறுமில்லே!"

பாக்கியம் என்கிற அறுவடைக் கூலிப் பெண்ணின் அவலக் குரல், அந்த வயல் வெளிப் பிரதேசம் முழுவதுமாக வெகு நேரமாய் எதிரொலித்தது.

தண்ணீரில் பாசனம் செய்தது போய், சாக்கடைத் தண்ணீரில் பாசனம் செய்தால், இப்படியான சோக கீதம் வராதாயென்ன?

திருச்சி மாநகராட்சி எல்லைக்குள் ளேயே மாவட்ட ஆட்சியர் அலுவலகத் துக்குப் பின்புறம் உள்ள பாசனப் பகுதி, பெரியகுளத்து வயல். ஒரு காலத்தில் இதன் பாசனப் பகுதி முன்னூறு ஏக்கர். புதிதாய்க் கிளம்பிய புறநகர்ப் பகுதி வீடுகள், தரிசு நிலங்கள் என குறைந்து போக, தற்சமயம் விளைநிலமாய் இருப்பது நூறு ஏக்கர்! அதில் இருபது ஏக்கர் வாழை. எண்பது ஏக்கரில் நெல் சாகுபடி.

இந்த வயல்களுக்கான நீராதாரம், அதனை ஒட்டியே ஓடிக் கொண்டிருக்கும் கோரையாறு மற்றும் உய்யக் கொண்டான் வாய்க்கால். முன்பெல்லாம் ஓர் ஆண்டில் பதினொரு மாதங்கள் தவறாது தண்ணீர் ஓடி வந்த பாசன வாய்க்கால்கள். குறுவை, சம்பா மற்றும் கோடைப் பயிர் என, எப் போதும் முப்போக சாகுபடியாகும் வயல்கள். கடந்த மூன்றாண்டுகளாக வாய்க்காலில் போதுமான தண்ணீர் வரத்து இல்லாது போனதால், முப்போகம் இரு போகமாகி, ஒரு போகமாய்த் தேய்ந்து, இன்று சாக்கடைத் தண்ணீரை நம்பியிருக்கும் சங்கடம் மிகுந்த சாகுபடியாக ஆகியிருக் கிறது.

கடந்த ஐப்பசி முதல் வாரத்தில் சில நாட்கள் மழை பெய்தது. வாய்க்காலிலும் தண்ணீர் வந்தது. விவசாயிகள் மனத்தில் நம்பிக்கை துளிர் விட்டது. கார்த்திகை மாத இறுதியில் நடவு நட்டு, சம்பா சாகுபடிப் பயிருக்கு அடித்தளமிட்டனர். கடந்த மூன்று மாதங்களாகத் தொடர்ந்து கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட, சுமார் முப்பது ஏக்கர் நெற்பயிர்கள் கருகிப் போயின. மீதமுள்ள ஐம்பது ஏக்கர் வயல் காரர்கள் சமயோசிதமாக, மேற்குறிப்பிட்ட வாய்க்காலில் ஓடி வரும் சாக்கடைத் தண்ணீரை வயலுக்குப் பாய்ச்சி, பாதி உயிர் தந்து வைத்துள்ளனர் நெற் பயிர்களுக்கு. இதற்கான செலவுகள், 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்கிற பழமொழியை மெய்ப்பித்துள்ளது.

இயல்பாகத் தண்ணீர் வரத்து உள்ள காலங்களில், சாகுபடிச் செலவு ஓர் ஏக்கருக்கு ஏழாயிரம் ரூபாய் ஆகுமென சொல்லப்படுகின்றது. தற்போது டீசல் மோட்டார் மூலம் வாரம் ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சியதில், ஏக்கருக்குக் கூடுதலாக ஐந்தாயிரம் ரூபாய் அதிகமாகச் செலவாகியுள்ளது. சாதாரணக் காலங்களில் ஓர் ஏக்கருக்கு முப்பது மூட்டை நெல் காணும். தற்போது இத்தனைச் செலவுகள் செய்தும், பதினைந்து மூட்டை நெல் கிடைக்குமா? என்பதே கேள்விக்குறி.

ஒரு ஏக்கர், பாசன விவசாயி ஒண்டி முத்து. நாம் சென்றிருந்த சமயம் அவரது வயலில் அறுவடை! வெள்ளைப் பொன்னியை விதைத்தால் தண்ணீர் அதிகம் தேவைப்படுமென்பதால், ஆந்திரப் பொன்னியை விதைத்து அறுவடை செய்துள் ளார். அந்த ஓர் ஏக்கரில் பத்து மூட்டை நெல் தேறுமா என்பதே அவருக்குச் சந் தேகமாக இருக்கிறது. நல்ல தண்ணீரைவிட, சாக்கடைத் தண்ணீருக்கு பயிர் விளைச்

சாக்கடைத் தண்ணீரில்

– தவிக்குப்

சலில் பாதியளவுக்குக் கீழேதான் பலன் காண முடியும் என்கிறார் அவர். "வயல்ல பாதிக் கதிரு வெங்கறுக்காய்யா போயிடிச்சி. சாக்கடைத் தண்ணீரை வயல்ல வுட்டு அறுவடைக்கு ஏங்கி நிக்கிறோம் நாங்க. நம்ப நாட்டுல விவசாயம்தான் முக்கியத் தொழிலுன்னு சொல்றாங்க. ஆனா அதுக்கு ஆதாரமா இருக்கற தண்ணீர்ப் பிரச்னை





• ஒண்டிமுத்து

சாகுபடி!

விவசாயிகள்!



யில, எல்லா அரசியல்வாதிகளும் ஒரு பொது வான நோக்கில செயல்பட மாட்டேங்கு றாங்க. இப்போ எங்களைப் போல விவ சாயிங்கதான் நெலை குலைஞ்சிப் போயி நிக்கிறோம்'' என்கிறார் அவர்.

வாழை விவசாயிகளின் வேதனை வேறு விதம். ஒரு ஏக்கர் வாழை விவசாயி எஸ். பழனிச்சாமி, நேந்திரம் அரை ஏக்கர், கற்பூரவல்லி அரை ஏக்கர். இரண்டும் சூம்பிப் போயுள்ளன. நல்ல விளைச்சலற்ற வாழைத் தார்கள் பழனிச்சாமியை பய முறுத்திக் கொண்டிருக்கின்றன. இதுவரை செய்த செலவுக்காவது தேறுமா எனக் கவலை கொள்கிறார். இந்த அரைகுறை விளைச்சலும் சாக்கடைத் தண்ணீரின் உபயம். அதுவும் இல்லையேல், அத்தனையும் அம்பேல்!

உய்யக்கொண்டான் வாய்க்காலில் கரு மண்டபம், செல்வநகர், காஜாமலை காலனி பகுதி சாக்கடைத் தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. பஞ்சப்பூரிலிருந்து ஓடி வரும் சாக்கடைத் தண்ணீர், கோரை யாற்றில் ஆங்காங்கே குட்டைகள் போலத் தேங்கி நிற்கிறது. செலவு அதிகமானாலும் பரவாயில்லை, நட்ட பயிர்களை அரை குறையாகவாவது காப்பாற்றி வைப்போம் என சாக்கடைத் தண்ணீரைப் பாய்ச்சி வந் துள்ளனர், பெரியகுளத்து வயல் விவ சாயிகள்.

கட்டுரை; படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

**கல்கி வாசகர்களுக்கு சென்னை மைலாப்பூர் B.M. சில்க் சாரிஸின்
தமிழ் (தாரண வருஷம்) புத்தாண்டு வாழ்த்துகள்**

உண்மை, உழைப்பு, நேர்மை ஆகிய இம் மூன்றுக்கும் ஈடு இணை ஏதும் இல்லை. ஏனென்றால் இம்மூன்றையும் கொள்கையாக கொண்டு யார் ஒருவர் வாழ்க்கையிலோ அல்லது வியாபாரத்திலோ பின்பற்றி



ஏ. சந்திரசேகரன்

தரமே தாரக மந்திரம்!

வருவார்களேயானால் அவர்கள் முதலாவது இடத்தில் மிக உன்னதமான நிலையை அடைந்து அவரை சார்ந்து உள்ளவர்களால் போற்றப்படுபவர். அதே போல் வியாபாரியாக இருந்தால் மேலே குறிப்பிட்டுள்ள மூன்று கொள்கைகளுடன் தரம், நாணயம், நம்பிக்கை ஆகிய மூன்றையும் தாரக மந்திரமாக பின்பற்றினால் இப்பொழுது உள்ள கவர்ச்சிகரமான ஆடம்பரமான தள்ளுபடி மற்றும் விளம்பரம் ஆகியன நிறைந்துள்ள இந்த நேரத்திலும் வாடிக்கையாளர்களை அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாது என்பது அனுபவ பூர்வமான உண்மை :

இப்பொழுது தான் நம் மக்கள் தள்ளுபடி என்ற மாயையிலிருந்து சற்று விலகி நியாயமான விலையில் தரமாக உள்ளதா என்று அலசி பார்த்து வாங்க ஆரம்பித்து உள்ளார்கள். அதற்கு தகுந்தாற்போல் அலசி பார்த்து வாங்க வ்ரும் மக்களின் தன்மையை புரிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல் கடந்த 14 ஆண்டு காலமாக சென்னை மைலாப்பூர் நெ.5 வடக்கு மாடவீதியில் உள்ள **B.M. சில்க் சாரிஸ்** என்ற நிறுவனம் நிரந்தர வாடிக்கையாளர்களின் ஆதரவினால் நடைபெற்று வருகின்றது. அவர்களுக்கு விளம்பரம், கவர்ச்சிகரமான தள்ளுபடி போன்றவற்றில் நம்பிக்கை இல்லை, ஏனென்றால் ஒவ்வொரு நிரந்தர வாடிக்கை யாளர்களும் தினந்தோறும் அவர்களது உறவினர்களையோ, நண்பர் களையோ, அவர்களுக்கு அறிமுகப் படுத்துகிறார்கள். அவர்கள்

B.M. சில்க் சாரிஸ் சென்றவுடன் அங்கு உள்ள கணக்கிலடங்கா டிசைன்களையும், நியாயமான விலையையும், எல்லாவற்றுக்கும் மேலாக, அங்கு பணி புரியும் விற்பனையாளர்கள் கொடுக்கும் விளக்கங்களும், ஆகியவற்றால் அவர்கள் முழுத் திருப்தியுடன் நிரந்தர வாடிக்கை யாளர்களாக ஆகிவிடுகிறார்கள் என்பதே உண்மை.



ஒருமுறை எங்களது ஷோரூமிற்கு வருகை தந்து சேலை எடுத்தவர்கள் அதை உபயோகித்து மனத் திருப்தி அடைந்தவுடன் உறவினர்கள், நண்பர்கள் என்று அனைவரையும் எங்களுக்கு சிபாரிசு செய்வது என்பது எங்களது ஷோரூமின் தனிச் சிறப்பு. இதனால் எங்களின் வாடிக்கையாளர்களே விளம்பரமாக இருப்பதால் எங்களுக்கு செலவுகள் குறைந்து விலை குறைவாக விற்பனை செய்ய முடிகிறது என்பதை மீண்டும் ஒருமுறை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாடிக்கையாளர்களின் பரிபூரண திருப்தியே எங்களது குறிக்கோள்.

இதற்கு சான்று : ஒரு சில வாடிக்கையாளர்கள் எழுதிய குறிப்பு :

Name R. Ramani
Address 1C Eswar Dev Apts. 18. 8th Cross St. Sastri nagar Chennai 20. Ph 4901941

Comments Reasonable rate. Good quality. To be worn and tested. It [illegible] a good shop for purchase

Dt. 18/10/[illegible]

Very good collection and nice varieties at reasonable price.

Mrs. Viji Shankar, 35A, Raaji Flats,
Canal Bank Road, Adyar,
Chennai - 600 020.

B.M. Silk Sarees,

5, North Mada Street, Mylapore, Chennai - 600 004.

Ph : (044) 24640291

ADVT

ரிமோட்



• ரோகிணி



சாமர்த்தியமா? இரட்டை வேடமா?

ஹாங்காங்கைப் பொறுத்தவரை பல விஷயங்கள் சத்தமில்லாமல்தான் நடந்தன. போரைத் தொடர்ந்த உடன்படிக்கையின் படி சத்தமில்லாமல் சீனாவிடமிருந்து பிரிட்டனுக்குக் கைமாறியது. குத்தகைக் காலம் முடிவடைந்தபிறகு, எந்த ஒரு பெரிய பிரச்னையும் இல்லாமல், மீண்டும் சீனாவின் கைக்கே வந்து சேர்ந்தது. ஆனால் இப்போது ஹாங்காங்கில் "சத்தம்" கேட்கத் தொடங்கியிருக்கிறது. பி.பி.சி.யில் ஆயிரக்கணக்கான ஹாங்காங் மக்கள் கையில் விளக்குகளை ஏந்தியபடி வீதியில் போராட்டம் நடத்துவதைக் காண்பித்தார்கள். ஹாங்காங்கில் உள்ள சுயாட்சி உரிமையைப் பாதிக்கும் வகையில், சீனா தனது அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றப் போகிறது என்று காதுக்கு எட்டிய தகவல்தான் காரணம். இரு தரப்பினரும் கலந்துபேசி, அமைதிக்குப் பங்கம் வராமலேயே பிரச்னையை முடித்துக் கொள்வார்கள் என்று நம்பலாமா?

"கேள்விகள் ஆயிரம்" (ஸ்டார் விஜய்) பகுதியில், ரோகிணி தன் கோபத்தை சட்சட்டென்று காட்டுவது நிகழ்ச்சி நடத்துபவரின் தர்மத்துக்கு ஏற்றதல்ல என்றாலும், வெகு இயல்பானதாக இருக்கிறது. எண் கணிதத்தைப் பற்றி இரு வேறு பிரிவினரின் வாதங்கள் நடைபெற்றன. "ஆங்கிலேயன் நம்மை விட்டுப் போனாலும் தமிழ்ப் பெயரைக் கூட ஆங்கிலத்தில் எழுதி, அதற்கு ஒரு பலன் என்று கூறுவது அபத்தமில்லையா? தவிர ஆங்கிலேயர்கள் எல்லாம் தங்கள் பெயரில் ஒரு அதிகப்படியான "A" அல்லது "E"யை சேர்த்துக் கொள்ளாத போது, நமக்கு மட்டும் ஏன் விதிவிலக்கு?" போன்ற கேள்விகள் சுவையானதாக இருந்தாலும், வளவளவென்று டெக்னிகலாக நிபுணர்கள் விஷயத்தை இழுத்தார்கள். ஸ்கூல் டீச்சர்போல 'நீங்க சொல்றது ஒண்ணும் விளங்கமாட்டேங்குது. நான் நேரடியாவே கேக்கறேன். தெளிவாவும் ஒரே வாக்கியத்திலும் பதில் சொல்லுங்க" என்று ரோகிணி அவ்வப்போது அதட்டியும் பலனில்லை.

ஏப்ரல் ஒன்றாம் தேதியை வாஜ்பாய் பயன்படுத்திக் கொண்டார். மும்பையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சோனியாவை வெளிநாட்டுப் பெண் என்று விமர்சித்த சரத்பவார் அவருடன் கூட்டுச் சேர்ந்தது, மக்களை முட்டாளாக்கும் செயல் என்றார். வாஜ்பாயால் நேரடியாக சோனியாவின் வெளிநாட்டுப் பிறப்பை விமர்சிக்கவும் முடியவில்லை, தேர்தல் காரணமாக அந்தப் பிரச்னையைத் தொடாமலும் இருக்க முடியவில்லை. "இது குறித்த ஒரு பொது விவாதம் நடத்தப்படவேண்டும்" என்று அவர் கூறியது, சாமர்த்தியமா? அல்லது இரட்டை வேடமா!

- ஜி.எஸ்.எஸ்



பா.ஜ.கவின் உள்நோக்கு ஆவணம்!

பாரதிய ஜனதா கட்சி வெளியிட்டுள்ள தொலைநோக்கு ஆவணம், அக் கட்சியின் தொலைநோக்கைக் காட்டிலும் உள்நோக்கத்தையே பிரகடனப்படுத்துகிறது.

நாடாளுமன்றத்தில் முந்நூறு இடங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பது பா.ஜ.கவின் செயல்திட்டம். அதற்கான ஆள் பலமும் உறுதியும் அக்கட்சியினிடத்தில் உண்டு. ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பி. தொண்டர்கள் பா.ஜ.கவுக்காக உழைக்கிறார்கள்; தேர்தல் நெருங்க, மேலும் உழைப்பார்கள். ஆர்.எஸ்.எஸ்ஸைச் சேர்ந்தவர்களுக்கு, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தொகுதி (பா.ஜ.க வலிமை பெற்று விளங்கும், வெற்றி நிச்சயம் என்பதான தொகுதி) ஒதுக்கப்பட்டு விட்டது. பிற தொகுதிகளில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுக்களிலும் ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள் இடம் பெறுகிறார்கள். ஆகவே, இத் தேர்தலில் பா.ஜ.க ஜெயிப்பது என்பது, ஆர்.எஸ்.எஸ்ஸும் அதன் சகோதர அமைப்புகளும் ஜெயிப்பதற்கு நிகரானதுதான்.

இந்தப் பின்னணியில்தான் நாம் பா.ஜ.கவின் தொலைநோக்குத் திட்டத்தை ஆராய வேண்டும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விஷயங்கள் என்னென்ன...?

- அன்னிய நாட்டவருக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகிக்க வாய்ப்பு மறுக்கப்பட சட்டத்தில் வகை செய்யப்படும்.
- பொது சிவில் சட்டம் அமலாகும்.
- நாடு தழுவிய மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்படும்.
- காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியல் சாசனத்தின் 370வது பிரிவு ரத்தாகும்.
- அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும்.




கல்கி



2004 ஏப்ரல் 11
சுபானு பங்குனி 29
மலர் : 62
இதழ் : 37

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



இந்த இலக்குகள் யாவுமே ஹிந்துத்வா செயல்திட்டத்தின் அம்சங்கள்தாம்.

மதச் சார்பின்மையின் தோற்றத்தை இச் செயல்திட்டத்திற்கு வழங்குவதற்காக, 'சிறுபான்மையினரின் கல்வி, பொருளாதாரம், உயர் பதவி வாய்ப்புகள் அதிகரிக்கப்படும்...' என்ற ஓர் அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது. முந்நூறு இடங்களைப் பெற்றுவிட்டால், இந்தச் 'சமாதான - சமரஸ' அம்சம் மூலையில் தூக்கிப் போடப்படும் என்பதில் சந்தேகமே இல்லை. முந்நூறு இடங்களுக்கு வழி செய்த ஆர்.எஸ்.எஸ் சகோதரர்கள், அதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். அத்துடன் கூடவே தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையும் கிடப்பில் போடப்படும். பா.ஜ.க.வின் இந்தத் தொலைநோக்கு ஆவணமே, அரசின் செயல்திட்டமாகவும் அமையும் என்பது உறுதி.

பாரத் உதய் யாத்திரையை மேற்கொண்டுள்ள அத்வானியேகூட, காந்திநகரில் (குஜராத்) ஒரு தொனியிலும் அலிகரில் வேறு தொனியிலும்தான் பேசுகிறார். அவர் அதை எவ்வளவுதான் மறைத்தாலும், அதுதான் உண்மை. இஸ்லாமியர்கள் வாழும் பகுதியில், ராமர் கோயில் கட்டுவது பற்றி அவர் மூச்சு விடுவதில்லை! தப்பித் தவறி பேசினாலும் மழுப்பலாகப் பேசுகிறார்.


இந்த இரட்டைப் பேச்சைவிட அபாயமானது 'ஹிந்துத்வாதான் மெய்யான மதச்சார்பின்மை' என தற்போது எழுந்துள்ள விசித்திர விளக்கம்!

ஹிந்துத்வாதான் மெய்யான மதச்சார்பின்மை எனில், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது பா.ஜ.க.வின் தொலைநோக்கு ஆவணத்தில் ஏன் இடம் பெற வேண்டும்?

கோயில் கட்டுவதும், அதற்கான இயக்கம் நடத்துவதும், ஒரு ஜனநாயக அரசின் பணி அல்ல. அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் திட்டம், பாரதிய ஜனதா கட்சியினுடைய ஹிந்து அடிப்படைவாதத்தின் வெளிப்பாடே அன்றி வேறில்லை.

இதைச் செய்தே தீருவது என்று முடிவெடுத்த பிறகு, 'நாங்கள் மதச்சார்பின்மையை ஏற்கவில்லை; ஹிந்துத்வாவைத்தான் ஏற்கிறோம்' என்று உண்மையை உறுதிபடக் கூறி, தங்கள் நிலைக்கு அக்கட்சியினர் தர்க்க ரீதியாக பலம் தேடிக் கொள்ளலாம். அதை விடுத்து, ஹிந்துத்வாதான் மெய்யான மதச்சார்பின்மை என்று மக்களைக் குழப்புவது கோயபெல்ஸ் பிரசாரமே ஆகும்.

ஹிந்து மதம், அனைத்து மதங்களையும் மதித்து ஏற்கும் பக்குவம் பெற்ற உயர்தர்மம்.



அதையும், ஹிந்துத்வா என்ற குறுகிய நோக்குடைய கோட்பாடையும் போட்டுக் குழப்புகிறது பா.ஜ.க; மக்களையும் குழப்புகிறது.

இதனால், கடந்த ஐந்தாண்டுகளில் பா.ஜ.க வழங்கிய ஆட்சியில், இந்தியா முன்னேறவில்லை என்று ஆகிவிடாது. நாம் முன்னேற்றம் கண்டிருப்பதும், பொருளாதாரம் மிக முன்னேறியிருப்பதும் உண்மை. அதே சமயத்தில், விவசாயத் துறையும் விவசாயத் தொழிலாளிகளும் இன்னும் பின் தங்கியிருக்கிறார்கள் என்பதும் உண்மைதான். இதை உணர்ந்துதான் பா.ஜ.க.வும் இந்தத் திசையில் அதிக கவனம் செலுத்தப் போவதாகத் தொலைநோக்கு ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக் கால பொருளாதார முன்னேற்றத்துக்கு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட அஸ்திவாரமும், அறிமுகமான பொருளாதாரச் சீர்திருத்தங்களுமே முக்கியக் காரணம் என்பதையும் பா.ஜ.க ஒப்புக் கொண்டால், எதிர்க்கட்சியினர்கூட வாயடைத்துப் போவார்கள். ஆனால், இத்தகைய பெருந்தன்மையை இந்திய அரசியலில், இன்று யாரிடமுமே எதிர்பார்க்க முடியாது.

"மாற்றுக் கட்சியான காங்கிரஸ், எந்த வகையில் பா.ஜ.கவைக் காட்டிலும் இன்று சிறந்து விளங்குகிறது?" என்று கேட்டால், பதிலளிப்பது கஷ்டம்தான். லஞ்ச - ஊழல் என்று எடுத்துக் கொண்டால், இந்திய அரசியல்வாதிகளும், அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவரில்லை என்று கடந்த பல ஆண்டுகளாகவே நிரூபித்து வருகிறார்கள்.

உட்கட்சிப் பூசல் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறது. பொருளதார ரீதியான கோட்பாடுகள் என்று பார்த்தால், இன்று கம்யூனிஸ்டுகள்கூட அரசின் கட்டுபாடற்ற சுதந்திரப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். இதிலும் கட்சிகளிடையே அதிக வித்தியாசமில்லை.

பிறகு...?

பா.ஜ.க -கூட்டணிக்கும், காங்கிரஸ் கூட்டணிக்கும் இடையே மிக அடிப்படையான வேறுபாடு, இன்றைக்கு மதச்சார்பின்மை என்ற அம்சத்தில்தான் எழுகிறது. இந்த நாட்டின் பெரும்பான்மையினரான ஹிந்துக்களுக்கு, ஹிந்துத்வா என்ற சொல்லே பெருமிதத்தை அளிக்கலாம்; பா.ஜ.கவின் தொலைநோக்கு ஆவணம் உணர்வுபூர்வமான பாதுகாப்பையும் அவர்களுக்கு அளிக்கலாம். ஆனால், நாட்டின் பாதுகாப்புக்கும், எதிர்காலத்துக்கும் இந்தக் கொள்கை உகந்ததல்ல என்பதே கசப்பான உண்மை. ○



● வாணம் வசப்படும் - கார்த்திக் குமார் - பூங்கோதை



● சதுரங்கம் - ஸ்ரீகாந்த், சோனியா

அலைபாயும் துப்பட்டா!

"தமிழ் சினிமாவுல எந்தக் கதையும் புதுசில்லை. ஒரு சில கதைகள் புதுசா வந்தா வரவேற்கப்பட வேண்டியதுதான். என்னோட பார்த்திபன் கனவு படத்திலயும் புதுக்கதையில்லை. ஒரு கதையை சுவாரஸ்யமா, நல்ல திரைக்கதையோடு சொல்ல முயற்சிப்பதுதான் இப்போதைய சினிமா ட்ரெண்ட். அந்த அடிப்படையில 'சதுரங்கம்' படத்தை எடுத்திருக்கோம். இனிமையான காதல் கதை."

- இப்படி ஓபன் ஸ்டேட்மெண்ட் விடும் இயக்குனர் கரு. பழனியப்பனைக் கண்டிப்பாகப் பாராட்டலாம். பின்னே, கோடம்பாக்கத்தில் பல இயக்குனர்கள் 'சூப்பர் கதை', 'தமிழ் சினிமாவுக்கு இது புதுசு' என்று கதைவிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் இவர் உண்மையை ஒப்புக் கொள்கிறாரே!

ஊரெல்லாம் வண்ணங்களில் போஸ்டரடித்து ஒட்டிக் கொண்டிருக்க, 'சதுரங்கத்'துக்கு மட்டும் ஏன் கறுப்பு வெள்ளை போஸ்டர்கள்?

"மக்களை 'டக்'குனு திரும்பிப் பார்க்க வைக்கறதுக்குத்தான். இது ஒரு காரணமா இருந்தாலும், சதுரங்கமே கறுப்பு வெள்ளைத்தானே, அதனால்தான்" என்கிறார் பழனியப்பன்.

மணி ரத்னத்தின் 'ஆய்த எழுத்து' வெளியாகும் அதே வேளையில், வரிந்து கட்டிக் கொண்டு வருகிறது 'வானம் வசப்படும்' படம். மணியின் வளர்ச்சியில் பெருந்துணையாகக் கைகொடுத்த கேமரா விஞ்ஞானி பி.சியின் இயக்கத்தில் பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கும் படம். இந்தியாவிலேயே முதல் முறையாக டிஜிட்டல் முறையில் எடுத்து முடித்திருக்கிறார். புதிய தொழில்நுட்பம் ஒருபுறம் இருக்க, தம்மை உயர்தர இயக்குனராக அடையாளப் படுத்திக் கொள்ள, ஒவ்வொரு பிரேமையும் செதுக்கி இருக்கிறாராம். அலைபாயும் துப்பட்டாவிற்குள் வானத்தை தேடும், கார்த்திக் குமார் - பூங்கோதை ஜோடியை பார்த்தாலே தெரிகிறதா பி.சியின் உழைப்பு?

கார் ரேஸுக்காக வெளிநாட்டுக்குப் பறந்துவிட்டார் அஜீத்! ஸ்பான்ஸர்கள் யாரும் வராததால், தாமே முதற்கட்டமாக ஒன்றரைக் கோடி ரூபாய் கார் ரேஸுக்காக கட்டியிருக்கிறாராம். "நடிகனாக இருக்கற எனக்கே ஸ்பான்ஸர்கள் கிடைக்கலைங்கறது கஷ்டமாக இருக்கு. பிறகெப்படி புதிய இளைஞர்கள் முன் வருவாங்க. எஃப்.3 ரேஸ்ங்கறது எவ்வளவு பெரிய விஷயம்னு, ரேஸ்ல இருக்கறவங்களுக்குத்தான் தெரியும்!" என்று வருத்தப் படுகிறார் அஜீத்!

அக்டோபர் மூன்றாம் தேதி வரை ரேஸ் இருப்பதால், தாம் நடிக்கும் ஜனா, படத்தை முடித்து விட்டாராம்.

ஜி, அட்டகாசம் ஆகிய படங்களில் கொஞ்சம் வேலை இருப்பதால், ரேஸிலிருந்து அவ்வப்போது வந்து வந்து போவாராம்.

- ரவுண்ட்ஸ் பாய்



● அஜித்

உங்கள் மூட்டுவலியை தொலைப்பது எப்படி?

அறுபது வயது பெரியவர் ஒருவர் 'ஆர்தோக்யூர்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டே உயரே குதிக்கும் ஒரு விளம்பரம்தான் இப்போது டி.வி.யில் பிரபலம். அது 'ஆர்தோக்யூர்' என்ற மூட்டு வலி மாத்திரைக் கான விளம்பரம்.

கடந்த சில ஆண்டுகளாக இந்த 'ஆர்தோக்யூர்' மாத்திரைகள் மற்றும் ஆயிலை மார்க்கெட்டிங் செய்துவரும் 'க்யூர்வெல் ஃபார்மா' நிறுவனத்தின் நிறுவனத் தலைவர் திரு. ஆர்.பி. சம்பத்குமார் அவர்களிடம் அவர்களது தயாரிப்புகள் குறித்து பேசினோம்.

மூட்டுவலி ஏன் வருகிறது?

பொதுவாக வயதான காரணத்தினால் மூட்டு களில் ஏற்படும் தேய்மானத்தினாலும், மூட்டுகளில் இருக்கும் லூப்ரிகேன்ட் திரவம் வற்றிப் போவதாலும், மூட்டுகளிடையே யூரிக் ஆசிட்



கிரிஸ்டல் உருவாகிறது. இதனால் மூட்டுகளுக்கு அதிக உராய்வு ஏற்பட்டு மூட்டுவலி வருகிறது.

இதற்கு என்ன சிகிச்சை?

சில மருத்துவ சிகிச்சைகள் இருந்தாலும், பொதுவாக மூட்டுவலியை குறைக்கும் மாத்திரைகள் மற்றும் ஆயில்களை உபயோகப்படுத்தி வலியில் இருந்து நிவாரணம் பெற முடியும்.

*உங்களுடைய '**ஆர்தோக்யூர்**' மாத்திரை எப்படி செயல்படுகிறது?*

எங்கள் தயாரிப்பான '**ஆர்தோக்யூர்**' மாத்திரைகள் 'செலரி விதை'யின் சாரத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இதன் முக்கியக் குணமே மூட்டுகளுக்கு இடையே உருவாகும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்களை கரைப்பதுதான். இந்த கிரிஸ்டல்கள் கரைந்து விடுவதால் மூட்டு வலி வெகுவாக குறைகிறது.

*தற்போதுள்ள மார்க்கெட்டில் உள்ள பல அலோபதி மருந்துகளைவிட ஆயுர்வேத **ஆர்தோக்யூர்** எப்படிச் சிறந்தது?*

ஆங்கில மருந்துகளை உபயோகிப்பதால் வாயுத் தொல்லை, வயிற்றில் எரிச்சல் போன்ற வேறு பல தொல்லைகள் வர வாய்ப்புண்டு. அதோடு சிறிது நாட்கள் கழித்து இந்த ஆங்கில மருந்துகளின் செயல்படும் திறனும் குறைந்துவிடும். மேற்கூறிய எந்த பாதிப்பும் இல்லாமல் வாழ்நாள் முழுவதும் மூட்டுவலித் தொல்லையிலிருந்து விடுபட, '**ஆர்தோக்யூர்**' மாத்திரைகளே சிறந்தது.

***ஆர்தோக்யூர்** மாத்திரைகள் எவ்வளவு சாப்பிட வேண்டும்?*

சாதாரணமாக முதல் மாதத்தில் தினமும் மூன்று வேளைக்கும் வேளைக்கு ஒன்று என்ற அடிப்படையில் மூன்று மாத்திரைகளும், இரண்டாம் மாதம் காலை மற்றும் இரவு என்று இரண்டு மாத்திரைகளும் சாப்பிட்டால் போதும். முதல் 15 நாட்களிலேயே வலியின் தீவிரம் குறையத் தொடங்கிவிடும். இரண்டு மாதங்களுக்குப் பிறகு 'மெயின்டனன்ஸ் டோஸ்' ஆக தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தாலே மூட்டுவலி குறைந்து போய்விடும்.

இந்த மாத்திரைகளால் பக்க விளைவுகள் உண்டா?

இந்த மாத்திரைகள் 100 சதவீதம் ஆயுர் வேதத் தயாரிப்பு என்பதால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஆயுர்வேதம் என்பதால் நிவாரணம் கிடைக்க நீண்ட காலம் ஆகும் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் நாங்கள் இதன் மூலப் பொருட்களை அப்படியே பயன்படுத்தாமல், மூலப் பொருட்களில் இருந்து 'எக்ஸ்ட்ராக்ட்' எடுத்துத்தான் பயன்படுத்துகிறோம். அதாவது 10 கிலோ மூலப் பொருட்களில் இருந்து ஒரு கிலோ எக்ஸ்ட்ராக்ட் மட்டுமே கிடைக்கும். இதனால் இந்த மாத்திரையின் செயல்திறன் மிகவும் அதிகம். அதனால்தான் எங்கள் விளம்பரங்களில் கூட 'ஆயுர்வேதம், திறனோ அதிவேகம்' என்ற வாசகத்தைப் பயன்படுத்துகிறோம்.

இதில் உட்கொள்ளும் மாத்திரைகள் மட்டும் இல்லாமல் மூட்டுகளில் தடவும் '**ஆர்தோக்யூர்**' ஆயிலும் உள்ளது. எங்கள் நிறுவனத் தயாரிப்புகள் தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. பல பிரபல மருத்துவர்களும் தங்கள் நோயாளிகளுக்கு மூட்டுவலிக்கான மருந்தாக, எங்களது '**ஆர்தோக்யூர்**' மாத்திரைகளை சிபாரிசு செய்கிறார்கள்.

மேலும் இப்போது '**ஆர்தோக்யூர்**' மாத்திரைகள் தென் இந்தியா முழுவதும் கிடைக்கும்.

காலம் காலமாக மூட்டு வலியால் அவதிப்பட்டு வந்தவர்கள் முகத்தில் இனி நிம்மதியைப் பார்க்கலாம்.




பாலைவனச் சோலை!

✉ தூக்கம் பற்றி இத்தனை விஷயங்களா? பிரமித்தே போய் விட்டேன்! ஆயுர்வேதச் சிறப்பிதழ் வாசகர்களுக்குக் கோடையில் கிடைத்த ஒரு பாலைவனச் சோலை!
பள்ளப்பட்டி, த. அசாருதீன்.

✉ அருண் சரண்யாவின் 'மேகங்களின் நண்பர்கள்' சிறுகதை படித்ததும், கண்கள் குளமாகின. அன்பிற்கான, அங்கீகாரத்திற்கானத் தேடல் குழந்தைகளுக்கு எவ்வளவு வலியைக் கொடுக்கிறது?
பேராவூரணி, கே.விஜி.

✉ நஸரத்பேட்டையிலுள்ள ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஆயுர்வேதக் கல்லூரி பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். அக் கல்லூரி வளாகம், எனது கணவர் சி.என். வரதப்பன் நன்கொடையாக வழங்கிய நாற்பது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்கி சதாசிவம், கல்கி கிருஷ்ணமூர்த்தி இருவரும் அறிவுறுத்தியதன் பேரில், சம்ஸ்கிருத கல்விக் கழகத்துக்கு அந் நிலத்தை வழங்கினார் என் கணவர். காஞ்சி பரமாச்சார்யார், சி.பி.கே. பாலசுப்ரமண்ய அய்யர், எனது தந்தை கே. பக்தவத்ஸலம் ஆகியோர் முன்னிலையில் நிலம் வழங்கப்பட்டது. இன்று அவ்விடத்தில் ஆயுர்வேதக் கல்லூரி ஆல்போல் தழைத்திருப்பதைக் கண்டிருந்தால், அவர் மிகவும் மகிழ்ந்திருப்பார்.
சென்னை - 4, சரோஜினி வரதப்பன்.


• வரதப்பன்

✉ நடிப்பில் மட்டுமல்ல, அரசியல் விஷயத்திலும் சூர்யா மிகத் தெளிவாக இருக்கிறார். சமுதாயச் சாடலில் அவருக்கு இருக்கும் கோபம், நியாயமானது மட்டும் அல்ல, யதார்த்தமானதும் கூட!
திருநெல்வேலி - 11, ராதா ராமஸ்வாமி.

✉ யதார்த்தமான நிலையை மறைத்து விட்டு, 'இந்தியா ஒளிர்கிறது' என மார் தட்டி வரும் பா.ஜ.க, ஒட்டு மொத்த இந்தியாவையும் ஏமாற்றி வருவது வெட்கக்கேடு. தலையங்கம் சரியான சமயத்தில் சரியான வழிகாட்டி.
திருவாரூர், எஸ். பாலச்சந்தர்.

✉ 'செய்திகள் திரிப்பது செம்பியன்' பகுதி சக்கைப் போடு போடுகிறது. ராவல்பிண்டியிலிருந்து கார்டன் வரைக்கும் அசத்திப்புட்டார் சாம்பியன். ஸாரி, செம்பியன்!
திசையன்விளை, ஆர்.ஜி. அம்பிகைராமன்.

✉ தி.மு.க எம்.எல்.ஏ உசேனும், பா.ஜ.க மகளிரணித் தலைவர் லலிதா சுபாஷும் கலந்து கொண்ட விவாதம், சுவையாக இருந்தது.
காரைக்கால், நவோதயா செந்தில்.

✉ ஆயுர்வேதச் சிறப்பிதழ் அருமை! பக்கத்துக்குப் பக்கம் பயனுள்ள தொகுப்புகள். மலரை முழுவதும் படித்த பின்பு, வீட்டில் ஒரு டாக்டர் என்ற மனநிறைவைத் தந்தது.
தூத்துக்குடி, ஏ.எஸ். காந்தி.

💻 இயற்கையான தூக்கத்தைப் பற்றிய மினி கல்கி பிரமிப்பூட்டியது. இத்தனை விவரங்களை நான் எங்கும் வாசிக்கவேயில்லை. கல்கிக்குப் பாராட்டுகள்!
- ஈமெயிலில் வித்யா.

வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள வாருங்கள்!

வாருங்கள். தாரண தமிழ்ப் புத்தாண்டில், சிறப்பான வாழ்க்கை நிலைக்கு உயர்ந்து, உங்கள் குடும்பத்தில் சந்தோஷமும், செழிப்பும் நிறைய வழி கோலுங்கள்.




ஸ்ரீராம் சீட்டுத் திட்டம்: மாதந்தோறும் சேமித்து, அதிலிருந்தே கடன் பெறவும் வகை செய்யும் இருவழி சேமிப்பு முதலீட்டுத் திட்டம். சீட்டு ஏல உச்ச வரம்பு 40% ஆனதால் ஈவுத் தொகை (Dividend) உயர்ந்து வருகிறது.

இன்றே ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். சிறுகச் சேமித்து செல்வச் செழிப்பு பெறும் கலையையும், குறைந்த வட்டியில் கடன் பெறும் நுட்பத்தையும் அறிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்: ◆ 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டி ◆ ரூ.12,000 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா ◆ பலருக்கு வேலை வாய்ப்பு ◆ தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

தாரண சித்திரை விழாவிற்கு தன்னிகரற்ற பரிசுகள்!



ப்ரெஸ்டீஜ் ஹீரோ மிக்ஸி (ரூ.5,00,000 சீட்டு) | செல்லோ எக்ஸிகியூட்டிவ் லஞ்ச்செட் (ரூ.3,00,000 சீட்டு) | செல்லோ பிரேக்ஃபாஸ்ட் செட் (ரூ.2,00,000 & ரூ.1,50,000 சீட்டு) | காஸி எஸ்.எஸ். குக்வேர் (ரூ.1,00,000 சீட்டு)



எஸ்.எஸ். டப் கன்டெய்னர் (ரூ.75,000 சீட்டு) | பிரைம் ஸ்டோர்வெல் (ரூ.50,000 சீட்டு) | செல்லோ யுனிவர்சல் செட் (4) (ரூ.30,000 & ரூ.25,000 சீட்டு) | எஸ்.எஸ். மீல்ஸ் பிளேட் (ரூ.20,000 & ரூ.15,000 சீட்டு)

சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசுகள்
ரூ.15,000	எஸ்.எஸ். மீல்ஸ் பிளேட்
ரூ.20,000	எஸ்.எஸ். மீல்ஸ் பிளேட்
ரூ.25,000	செல்லோ யுனிவர்சல் செட் (4)
ரூ.30,000	செல்லோ யுனிவர்சல் செட் (4)
ரூ.50,000	பிரைம் ஸ்டோர்வெல்
ரூ.75,000	எஸ்.எஸ். டப் கன்டெய்னர்
ரூ.1,00,000	காஸி எஸ்.எஸ். குக்வேர்
ரூ.1,50,000	செல்லோ பிரேக்ஃபாஸ்ட் செட்
ரூ.2,00,000	செல்லோ பிரேக்ஃபாஸ்ட் செட்
ரூ.3,00,000	செல்லோ எக்ஸிகியூட்டிவ் லஞ்ச்செட்
ரூ.5,00,000	ப்ரெஸ்டீஜ் ஹீரோ மிக்ஸி

◆ நுழைவுக் கட்டணம் தனி ◆ முன் அனுமதி பெறப்பட்டது
◆ நேரடியாக சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு

ரூ.1.5 லட்சம் இன்சூரன்ஸ் இலவசம்!*

ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட சீட்டுகளில் சேரும் சந்தாதாரர்களுக்கு திருட்டு, தீ விபத்து, தனி நபர் விபத்து ஆகியவற்றுக்கு, 1 ஆண்டுக்கு, தலா ரூ.50,000 காப்பீடு அளிக்கும் ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியின் ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள இன்சூரன்ஸ் பாலிசி இலவசம்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை - 2. போன்: 5201 1833

WORDCRAFTS

சுதா மூர்த்தி



உள்ளங்கையில் உலகம்!

எனக்குப் பன்னிரண்டு வயதாக இருந்தபோது, தாத்தா பாட்டியுடன் வட கர்நாடக கிராமம் ஒன்றில் வசித்து வந்தேன். அப்போதெல்லாம் போக்குவரத்து வசதி குறைவு. காலையில் வரும் செய்தித்தாள் பிற்பகலில்தான் கிடைக்கும். வாரப் பத்திரிகைகூட, ஒரு நாள் தாமதமாகத்தான் கிடைக்கும். நாங்கள் எல்லோருமே தினசரி - வாரப் பத்திரிகைகளைச் சுமந்து வரும் பஸ்ஸுக்காக ஆவலுடன் காத்திருப்போம்.

அப்போது கன்னட மொழியில் பிரபல எழுத்தாளராக திரிவேணி இருந்தார். அந்தப் பெண்மணி ஓர் அபூர்வமான எழுத்தாளர். அவர் நடை எளிமையாகவும், சரளமாகவும், படிக்கிறவரை நம்ப வைப்பதாகவும் இருக்கும். பெரும்பாலும் உளவியல் சார்ந்த பிரச்னைகளையே அவர் எழுதியதால், எல்லோருமே ஏற்றுக் கொள்ளும்படியாக இருந்தது. கன்னட இலக்கியத்தின் துரதிர்ஷ்டம், அவர் இளமையிலேயே காலமானார். நாற்பது வருடங்களுக்குப் பிறகு, இப்போதும்கூட, மக்கள் அவர் நாவல்களைப் பாராட்டுகின்றனர்.

'கர்மவீர' என்ற கன்னட வார இதழில், அவருடைய நாவல்களில் ஒன்றான 'காசி யாத்திரை' தொடராக வெளிவந்து கொண்டிருந்தது. வயதான கிழவி ஒருத்தி, காசிக்கு யாத்திரை போக வேண்டும் என்று விரும்புகிறாள் என்பதுதான் கதை. காசிக்குப் போவதும், விசுவநாதரை வணங்குவதும் புண்ணியம் தரும், என்று இந்துக்களில் பலர் நம்புகிறார்கள். இந்தக் கிழவியும் அவர்களில் ஒருத்தி. அதற்காக அவள் படும் அவஸ்தையைத்தான் நாவல் விவரித்தது. அந்தக் கதையில் வரும் ஓர் இளம் அநாதைப் பெண், ஓர் இளைஞனைக் காதலிப்பாள்; ஆனால் திருமணம் செய்து கொள்ளப் பணம் இருக்காது. கடைசியில், காசிக்குப் போக வேண்டும் என்று சேர்த்து வைத்திருந்த பணத்தை எல்லாம் கிழவி அவளுக்குக் கொடுத்து விடுகிறாள். "இந்த அநாதைப் பெண் அடையும் சந்தோஷம், நான் காசிக்குப் போய் விசுவநாதரை வணங்குவதால் கிட்டும் மகிழ்ச்சியைவிட மிக முக்கியமானது" என்கிறாள் கிழவி.

என் பாட்டி கிருஷ்டக்கா பள்ளிக்கூடமே போனதில்லை. எனவே அவளால் படிக்க முடியாது. புதன்கிழமை தோறும் அந்த வாரப் பத்திரிகை வந்தவுடன், அந்தத் தொடர்கதையைப் பாட்டிக்குப் படித்துக் காட்டுவேன். அவள் வேறு எல்லாவற்றையும் மறந்துவிட்டு, கதையை உன்னிப்பாகக் கேட்பாள். அந்த அத்தியாயமே அவளுக்கு மனப்பாடம் ஆகிவிடும். என் பாட்டியும் காசிக்குப் போனதில்லை. எனவே நாவலில் வரும் கிழவியின் பாத்திரத்தில் தன்னை அடையாளம் கண்டாள். அதனாலேயே மற்ற எவரையும்விட, நாவலில் அடுத்து என்ன வரும் என்பதில் அவளது ஆர்வம் அதிகமாக இருந்தது. எனவே முதலில் அவளிடம் தொடரைப் படித்துக் காட்டச் சொல்லுவாள். மிக நன்றாக எழுதப்பட்ட ஒரு நாவல்,

1


எப்படி வாசகரைக் கவர்ந்து விடுகிறது என்று எனக்குப் புரிந்தது. சிறுமியாக இருந்தபோது, பாட்டிக்குக் கதையைப் படித்துக் காட்டி விட்டு, உடனே வெளியே விளையாடப் போய்விடுவேன். பாட்டியும் பக்கத்துக் கோயிலுக்கு வந்து, அவளுடைய தோழிகளைச் சந்திப்பாள். நாங்கள், எல்லாச் சிறுமிகளும் ஒளிந்து விளையாடுவோம்; நாவலைப் பற்றியும் பேசுவோம். அந்தக் கதை ஏன் அவ்வளவு அதிகமாகப் பேசப் பட்டது என்று அப்போது எனக்குப் புரியவே இல்லை.



என் உறவினர்களுடன் பக்கத்து கிராமம் ஒன்றில் நடந்த திருமணத்துக்குப் போயிருந்தேன். அப்போதெல்லாம் திருமணம் என்பது மிகப் பெரிய விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. எல்லாப் பெரியவர்களும் வேலையில் மூழ்கி இருப்பார்கள். அதனால் சிறுமிகளான எங்களுக்கு முழுச் சுதந்திரம் கிடைத்த மகிழ்ச்சியில், தின்பண்டங்களை அளவில்லாமல் உண்டு களித்தோம். இரண்டு நாள் இருந்துவிட்டு, வரலாம் என்று போனவள், ஒரு வாரத்துக்கு அங்கேயே தங்கிவிட்டேன்.

எங்கள் கிராமத்துக்குத் திரும்பி வந்ததும், பாட்டி அழுது கொண்டிருப்பதைப் பார்த்து, வியந்து போனேன். ஏனென்றால் அவளுடைய துயரமான சமயங்களில் கூட, அவள் அழுது நான் பார்த்ததில்லை. என்ன நடந்தது...? எனக்கு ஒரே கவலையாகப் போயிற்று. வீட்டு மொட்டைமாடியில் படுக்கப் போனோம். கோடைக்காலம். வானத்தில் முழு நிலவு. பாட்டி வந்து என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். பாசத்துடன் கைகளை நீட்டி, என் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். அவள் ஏதோ சொல்ல விரும்புகிறாள் என்று புரிந்து கொண்டேன். "என்ன விஷயம், பாட்டி?" என்றேன்.

"நான் சின்னப் பெண்ணாக இருந்த



அடிக்கல்
நாட்டியவர்களையும்
நன்கொடை
நல்கியவர்களையும்
மட்டுமே
கல்வெட்டுகள்
கௌரவப்
படுத்துகின்றன.

எந்தக் கல்வெட்டும்
சுமந்ததில்லை
உழைத்தவரின்
பெயர்கள்

- சேவியர்

போதே, என் அம்மாவை இழந்துவிட்டேன். என்னைப் பார்த்துக் கொள்ளவும், வழி நடத்தவும் யாருமே இருக்கவில்லை. என் தகப்பனார் பிலி போர்வழி; வேறு திருமணம் செய்து கொண்டார். அந்த நாளில் பெண் களுக்குப் படிப்பு தேவை என்று யாரும் நினைத்ததில்லை; எனவே நான் பள்ளிக் கூடத்துக்கே போகவில்லை. சிறு வயதி லேயே எனக்குக் கல்யாணமும் ஆகி, குழந் தைகளும் பிறந்தார்கள். எனக்கும் ஓய்வு ஒழிச் சலில்லை. பிறகு எனக்குப் பேரக் குழந்தை களும் பிறக்கவே, அவர்களுக்குச் சமைத்துப் போடுவதில்தான் எனக்கு மகிழ்ச்சி கிடைத் தது. பள்ளிக்கூடம் போய்ப் படிக்கவில் லையே என்று எனக்கு அவ்வப்போது தோன்றும். அதனாலேயே நீங்கள் எல்லோ ரும் நன்றாகப் படிக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தேன்."

தூங்க வேண்டிய இரவில், ஓர் அறுபத்தி யிரண்டு வயதுப் பாட்டி, பன்னிரண்டு வயதுப் பேத்தியிடம் இந்தக் கதையை எல் லாம் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. பாட்டி மீது அளவற்ற பாசம் எனக்கு. அவள் என்னிடம் இதை எல்லாம் சொல்ல, ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவள் முகத்தைப் பார்த்தேன். முகம் வாட்ட மாகிப் போய், கண்களில் நீர் தளும்பி நின் றது. பாட்டி அழகாக இருப்பாள்; அதிலும் எப்போதும் சிரித்த முகமாய் இருப்பாள். இன்றும்கூட அவள் கவலையோடு என் னிடம் பேசியது நினைவில் இருந்து அகல வில்லை. நான் அவள் கைகளை ஆசையுடன் பற்றிக் கொண்டேன். "அழாதே, பாட்டி. என்ன விஷயம், சொல்லு. என்னால் ஏதாவது உனக்கு உதவ முடியுமா?

"முடியும். எனக்கு உன் உதவி அவசியம் தேவை. நீ பக்கத்து கிராமத்துக்குத் திருமணத் துக்காகப் போயிருந்தபோது, வழக்கம் போல 'கர்மவீர' வார இதழ் வந்தது. அதைப் பிரித் துப் பார்த்தேன். 'காசி யாத்திரை' கதைக் கான படத்தை மட்டுமே பார்த்தேன். எழுத் துகள் ஏதும் புரியவில்லை. அந்தப் பக்கங் களில் என் கையை வைத்துத் தேய்த்தேன், என்ன எழுதியிருக்கிறது என்று என் கைகளுக்காவது புரியட்டுமே என்று. அது சாத்தியமில்லை என்று பிறகே புரிந்தது எனக்கு. படிக்காமல் போனோமே என்று தோன்றியது. உனக்காக ஆவலுடன் காத் திருந்தேன். சில வேளைகளில் நீ இருக்கிற கிராமத்துக்கே வந்து, உன்னைப் படித்துக் காட்டச் சொல்லிவிடலாமா என்றுகூட நினைத்திருக்கிறேன். இங்கே கிராமத்தி லேயே வேறு யாரிடமாவது படிக்கச் சொல்லலாமா என்றும் தோன்றியது. ஆனால் யாரும் இல்லையே! எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நான் வேறொருவரைச் சார்ந்திருக்கிறேன் என்ற என் கையாலாகாத்தனம் புரிந்தது. என்னிடம் பண வசதி இருந்தும், என்னால் சுதந்திரமாக, வேறொருவரை எதிர்பாராமல் இருப்பது என்பது சாத்தியமாகவில்லையே?"

எனக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. பாட்டி தொடர்ந் தாள்: "நாளையிலிருந்து கன்னட எழுத்து களைப் படிக்க ஆரம்பிப்பது என்று முடிவு செய்திருக்கிறேன். ரொம்பக் கடுமையாக உழைத்துப் படிக்கப் போகிறேன். இதுதான் என் வேலை. தசராவின்போது வரும் சரசுவதி பூஜைக்குள், ஒரு நாவலை நானே படித்துவிட முடிய வேண்டும். நான் யாரை யும் நம்பியிராமல் இருக்க வேண்டும்!"

பாட்டியின் முகத்தில் ஒரு தீர்மானம் தெரிந்தது. இருந்தாலும் நான் சிரித்தேன்: "பாட்டி, இந்த அறுபத்தியிரண்டு வயதில் நீ கன்னட எழுத்துகளைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கப் போகிறாயா? ஏற்கெனவே உன் தலை நரைத்துவிட்டது. கைகளில் சுருக் கங்கள் தெரிகின்றன. கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறாய். சமையல் அறையில் சதா வேலையாய் இருக்கிறாய்..."

சிறு பிள்ளைத்தனமாகப் பாட்டியைக் கிண்டலடித்தேன். ஆனால் அவள் வெறு மனே புன்னகை மட்டும் செய்தாள். "எந்த

நல்ல காரியத்தை மேற்கொண்டாலும், எப்படிப்பட்ட தடை எதிர்ப்பட்டாலும், அதை வெல்ல முடியும். எல்லோரையும்விட மிகக் கடுமையாக உழைக்கப் போகிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் - நான் சாதித்தே தீருவேன். படிப்புக்கு வயது ஒரு தடையே அல்ல!'

மறுநாளையிலிருந்து கன்னட மொழிப் பாடத்தை ஆரம்பித்தேன். பாட்டி அபூர்வமான மாணவி. அவள் வீட்டுப் பாடங்களைச் செய்த விதமே அலாதி. படிப்பாள்; திரும்பச் சொல்லுவாள்; எழுதிப் பார்ப்பாள்; வாய் விட்டுச் சொல்லுவாள்; நான்தான் அவளுக்கு ஆசிரியை. என் முதல் மாணவி அவள். ஒருநாள் ஆசிரியையாகி, கம்ப்யூட்டர் சயன்ஸ் கற்பிப்பேன் என்று அப்போது நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

வழக்கம் போல தசரா வந்தது. பாட்டிக்குத் தெரியாமல், புத்தகமாக வெளிவந்திருந்த 'காசி யாத்திரை' நாவலை வாங்கி வைத்திருந்தேன். பூஜை அறைக்கு என்னைப் பாட்டி வரச் சொன்னாள். ஒரு ஸ்டூலில் என்னை உட்காரச் சொன்னாள். கௌன் தைக்க வேண்டிய துணியை எனக்குப் பரிசாகக் கொடுத்தாள். அடுத்ததாக அவள் செய்த காரியம் விசித்திரமானது; குனிந்து என் பாதங்களைத் தொட்டாள். ஆச்சரியமும் அதிர்ச்சியும், ஒரு சேர என்னைத் தாக்கின. முதியோர் இளையோர் பாதங்களைத் தொடுவதாவது! படங்களில் கடவுளின் பாதங்களைத் தொடுவோம். வயதானவர்களின், ஆசிரியர்களின் கால்களைத் தொட்டு வணங்குவோம். அது மரியாதைக்கு அடையாளம்: அது மதிக்கத்தக்க பாரம்பரிய முறை. இன்று தலைகீழாகிப் போய் விட்டது. அது தவறு...

"நான் என் ஆசிரியையின் பாதங்களைத் தான் தொடுகிறேன். என் பேத்தியின் பாதங்களை அல்ல. எனக்கு மிகப் பரிவுடனும், அக்கறையுடனும் பாடம் சொல்லித் தந்து, இன்று எந்த ஒரு நாவலையும், இத்தனை குறுகிய காலத்தில், என்னைப் படிக்க வைத்ததற்காகப் பணிகிறேன். இப்போது நான் யாரையும் சார்ந்து இருக்க வேண்டாம். ஆசிரியரைப் பணிவது என் கடமை. ஆணாய் இருந்தாலும் பெண்ணாய் இருந்தாலும், வயது குறைவாக இருந்தாலும்கூட, ஆசிரியரைப் பணிந்து வணங்க வேண்டும் என்று நம் சாத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?" என்றாள் பாட்டி.

நான் பதிலுக்கு என் பாட்டியின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு, என் 'முதல் மாணவி'க்கு, நான் வாங்கி வைத்திருந்த நாவலைக் கொடுத்தேன். அவள் உடனே அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்து, 'திரிவேணி' எழுதிய 'காசி யாத்திரை' என்று வாய்விட்டுப் படித்துவிட்டு, வெளியிட்ட பதிப்பகத்தின் பெயரையும் படித்தாள்.

என் 'மாணவி' அற்புதமாகத் தேறிவிட்டாள் என்று சந்தோஷப்பட்டேன்.

(தொடரும்)

ரோபோ ராஜா!

முழுநீள நகைச்சுவைத் தொடர் தயாரிப்பில் முதல்முறையாக இறங்கியிருக்கிறார் ஆச்சி மனோரமா. ஏப்ரல் பத்தாம் தேதி முதல், சனிக்கிழமை தோறும், இரவு ஒன்பது மணிக்கு ராஜ் டிவியில் ஒளிப்பரப்பாகும் இந்தத் தொடருக்கு 'ரோபோ ராஜா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஆச்சியின் ஒரே மகன் ராஜ்பூபதி முதல் ஹீரோ என்றால், இரண்டடி உயரமுள்ள ரோபோ இன்னொரு ஹீரோவாம்! ஹீரோ உருவாக்கும் இந்த ரோபோ, அன்பு, பாசம், காதல், சென்டிமெண்ட் என சிந்திக்கத் தொடங்குவதால் வரும் பிரச்னைகளை காமெடியில் தோய்த்துக் கொடுக்கிறார்களாம்!



- ஸ்ரீ

முடங்கும் தி.மு.க.!

கடலூர் ரவுண்ட்ஸ்

கடலூர் பாராளுமன்றத் தொகுதியைப் பற்றி நம் காதில் விழுந்த விஷயங்கள் இரண்டு.

பண்ருட்டியிலிருந்து உளுந்தூர்ப் பேட்டைக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தோம். அன்று அங்கு ஜெ. வருவதாக இருந்தது. போகும் வழியில் சிறு தூறல் விழ, பஸ்ஸின் ஓட்டுநர் உற்சாகத்தோடு "அம்மா வர்றாங்க என்றதும் மழையைப் பாருப்பா!" என்றார்.

பக்கத்திலிருந்த இளைஞர் "வாயை மூடுய்யா. இங்க கிராமத்துலே ஒவ்வொருத்தரும் ரத்தக் கண்ணீர் விட்டுக்கிட்டிருக்காங்க. எண்ணூறு அடி தோண்டினாத்தான் தண்ணீர். யூரியா விலை ஏறிக்கிட்டே இருக்கு. நெல்லு விலை குறைஞ்சுக்கிட்டே இருக்கு. விவசாயி தொடர்ந்து கடனாளியாகத்தான் இருக்கான். இந்த முறை அம்மாவுக்கு அதிர்ச்சி உண்டு" என்றார் ஆவேசத்தோடு. வீரப் பெருமாநல்லூரைச் சேர்ந்த ஜெகத்ரட்சகன் என்ற அந்த இளைஞருக்கு, நாற்பத்தியாறு ஏக்கர் நிலமிருந்தும், தீராக் கடனாளியாக இருக்கிறாராம்.

அடுத்து உளுந்தூர்பேட்டையிலிருந்து கள்ளக் குறிச்சி சாலையில் உள்ளது, செம்பொன்மாதேவி கிராமம். அந்தப் பகுதியில் பிரசாரம் செய்த ஸ்டாலின் பின்னால் சென்று பார்த்துவிட்டு, உளுந் தூர்பேட்டை பஸ்ஸுக்காகக் காத்திருந்தோம். "ஜெயலலிதா ஆட்சிக்குப் பாடம் கற்பியுங்கள் என்று சொல்லிவிட்டுப் போகிறார் ஸ்டாலின். யாரை ஏமாற்றுகிறார்? நடக்கப் போவது பாராளுமன்றத் தேர்தல். இதில் ஜெ. எங்கே வந்தார்? வாஜ்பாயா? சோனியாவா? என்பது தான் கேள்வி. ஜெ. செய்யும் பிரசாரம் மிகவும் நன்றாக எடுபடுகிறது. வெளிநாட்டில் பிறந்த ஒருவர்தான் இந்தியாவின் பிரதமராக வர வேண்டுமா? வாஜ்பாய் தான் பிரதமர் ஆக வேண்டும்'' என்றார் பஸ் ஸ்டாண்டில் நின்ற பன்னீர் செல்வம்.

இப்போது நாம் சொன்ன இரண்டு கருத்துகள் தான் இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை மோதுகின்றன. "இன்றைய புதிய தலைமுறை ரொம்பவும் விழிப்புடன் இருக்காங்க. யாரையும் ஏமாற்ற முடியாது. நான்கரை ஆண்டுக் காலம் தே.ஜ.கூ.வில் பதவியை அனுபவித்துவிட்டு, கடைசிக் கட்டத்தில் திமுக., பா.ம.க., மதிமுக. ஆகிய கட்சிகள் விலகியதற்கு வலுவான காரணங்கள் இல்லை. இதை மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். அடுத்து இந்தியாவில் பிறந்த ஒருவர்தான் இந்தியரை ஆள வேண்டும் என்பதிலும், தெளிவாக இருக்கிறார்கள்'' என்கிறார் அதிமுக. சார்பில் தொகுதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வி.பி. கலைராஜன்!

பெரிய தலைகள் மோதும் தொகுதியல்ல கடலூர். இருந்தும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. காரணம், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் நேரடியாக இங்கே மோதுகின்றன. திமுக. சார்பாக களத்தில் நிற்கிறார் வெங்கடபதி. தொகுதியின் எல்லையான கள்ளக்குறிச்சியைச் சேர்ந்தவர். இடையில் ம.தி.மு.க.வுக்குச் சென்று வந்தவர் என்பதால், உள்ளூர் உடன்பிறப்புகளுக்கு ஆரம்பத்தில் வருத்தம். இப்போது வருத்தத்தை மறக்க வைத்திருக்கிறார்கள்.

• ஸ்டாலின் பிரசாரம்



அ.தி.மு.க. வேட்பாளர் சொரத்தூர் ராஜேந்திரன், பண்ருட்டிப் பக்கம். ஊராட்சித் தலைவர். 1989ல் சேவல் சின்னத்தில், சட்டமன்றத் தேர்தலில் நின்ற ஜெ. விசுவாசி. 1996ல் பண்ருட்டி தொகுதியிலும் நின்று தோற்றிருக்கிறார். உள்ளூர்க் கட்சிக்காரரை ஜெ. நிறுத்தியிருப்பதால், கட்சிக்காரர்களுக்குள் உற்சாகம் கரை புரண்டு ஓடுகிறது. எதையும் எதிர்பாராமல் வேலை செய்யும் தொண்டர்கள் குவிகிறார்கள் என்பதை

சில கிராமங்களில் காண முடிந்தது.

கடலூர் பாராளுமன்றத் தொகுதியின் ஒரு முனையிலிருந்து, அடுத்த முனை நூற்று எண்பது கி.மீ. இதில் கல்ராயன் மலைப் பகுதியும் அடக்கம். கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம் ஆகியவை சட்டமன்றத் தொகுதிகள்.

* பிரசாரத்தில் வெங்கடபதி



முன்னேறும் அ.தி.மு.க.!



* கலைராஜன்



* ராஜேந்திரன்

தொகுதியில் நகர்ப்புறங்களில் ஒன்றிரண்டு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் பா.ஜ.க. இல்லவே இல்லை, என்றாலும் வாஜ்பாய் தெரிகிறார். அந்த அளவுக்கு அ.தி.மு.க. பிரசாரம் கிராம அளவில் ஊடுருவி இருக்கிறது. தொகுதியில் பன்னிரண்டு லட்சம் வாக்குகள். அதில் வழக்கமாக ஏழு லட்சம் பதிவாகும். ஜாதி ரீதியாகப் பார்த்தால் வன்னியர், தாழ்த்தப்பட்டோர், நாயுடுக்கள், முதலியார்கள் ஆகியோர் கணிசமாக வாழ்கிறார்கள்.

தி.மு.க. வேட்பாளர் நாயுடு சமூகத்தையும், அ.தி.மு.க. வேட்பாளர் வன்னியர் சமூகத்தையும் சேர்ந்தவர். ஸ்டாலின் பிரசாரம் செய்த கிராமங்களில், அங்கிருக்கும் ஒன்றிரண்டு கட்சிக்காரர்கள் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, பொது மக்கள் மத்தியில் உற்சாகம் இல்லை. உளுந்தூர்ப்பேட்டைக்கு ஜெ. விசிட் செய்யும்போது, அருகிலிருந்த கிராமங்களிலிருந்து லாரி லாரியாக மக்கள் அழைத்து வரப்பட்டனர். அவர்களை மகிழ்விக்க ரிகார்டு டான்ஸ் ஆட்டம் வேறு. "என்னை வெற்றி பெற வைத்தால், நிறைய திட்டங்கள் வைத்துள்ளேன். குறிப்பாக கல்ராயன் மலைவாழ் மக்களுக்கு, சாலை வசதி, பஸ் வசதி போன்றவற்றைச் செய்து கொடுப்பேன். மத்திய அரசிடம் போராடி, அவர்களுக்கு விவசாயம் செய்ய நிலம் பெற்றுக் கொடுப்பேன். கல்ராயன் கடலூர் ஆகும்'' என்று சொல்கிறார் சொரத்தூர் ராஜேந்திரன். ரஜினி ரசிகர்களும் இவருக்கு ஆதரவாக களம் இறங்கியிருக்கிறார்களாம்!

தி.மு.க. வேட்பாளருக்குக் கூட்டணி பலம், ப்ளஸ் பாயிண்ட் என்றாலும், அந்தக் கோட்டையை தகர்த்து வெற்றிக் கொடியை நாட்டும் முயற்சியில், சொரத்தூரார் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறுகிறார் என்பதுதான் இப்போதைய நிலை. இதற்குப் பக்கபலமாக நிற்பவர் வாஜ்பாய்தான்!

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

வலை பாயுதே!



• ஷில்பா ஷெட்டி

பாகிஸ்தான் கொடிக்கு ஓர் இச்!

புகழ் பெற்ற நாடகக் கலைஞர் மல்லிகா சாராபாயால் நடத்தப்பட்டு வரும் www.darpana.com - நாடகக் கலைக்குப் புத்துயிர் அளிக்கவும், மக்களின் நாடக ஆர்வத்தை அதிகரிக்கவும் வலை மூலம் பாடுபடுகிறது. இந்திய - பாக். நட்புறவுக்காக, லாகூர் நாடகக் கலைஞர்களை அகமதாபாத் சபர்மதி நதிக்கரைக்கு அழைத்து, அவர்களுடன் இணைந்து 'வன்முறையற்ற உலகம்', 'அமைதி', 'சமாதானம்' - போன்ற தலைப்புகளில் - வலைத்தள நாடகங்களை உருவாக்கி, சர்வதேச சமூகத்தின் அங்கிகாரம் பெற்றது. 'சர்வதேசப் பிரச்னைகளை இந்திய நாடகங்களில் பிரதிபலித்து, அதற்குத் தீர்வு காணுதலே எங்களின் குறிக்கோள்' என்கிறார் மல்லிகா சாராபாய்.

காவிரிப் பிரச்னைக்கு ஏதும் தீர்வு இருக்கா?

"நான் இந்தியனாக இருப்பதும், இந்தியனாக இருக்கக் கற்றுக் கொண்டதும் என் அம்மாவால்தான். ஏனென்றால் அவர்களும் ஓர் இந்தியன். ஒரு தீவிரவாதியின் வாரிசு அரசியலுக்கு வந்தால் எதிர்க்கலாம். நானோ பாரம்பரிய அரசியல் குடும்பத்தில் இருந்துதானே வந்துள்ளேன். இதிலென்ன ஆச்சரியம்? இந்தியர்களுக்காக உழைப்பது என் அடிப்படை உரிமை" என்றெல்லாம் குரல் கொடுப்பது வேறு யாருமல்ல... ராகுல் காந்திதான், electionnext.com-ல் மேலும் அவர், "இனி இளைஞர்களால்தான் இந்தியாவை முன்னேற்ற முடியும். பிறரைப் போல் சாதி, மத, மொழி வேறுபாடுகளைப் பாராமல், இந்தியாவை நம்பர்ஒன் இடத்துக்குக் கொண்டு வருவேன்!" என்கிறார்.

முதல்ல கோஷ்டி - வேறுபாடு இல்லாத காங்கிரசைக் கொண்டு வாங்க!

இந்தியா - பாக் - 'ஒன் டே மேட்ச்' பார்க்கப் போன ஷில்பா ஷெட்டி உதிர்த்த திருவாசகங்களை வெளியிட்டுள்ளது teenstation.com

"எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. என் வாழ்வின் 'த்ரில்'லான அனுபவம். பாக். மக்கள் நல்ல இதயம் கொண்டவர்கள். பெண்கள் மிக மிக அழகானவர்கள். பாலிவுட் படங்கள் பாக்கிற்கு எதிராக எடுக்கப்படுவதில்லை. அவை தீவிரவாதத்திற்கு எதிராகவே எடுக்கப்படுகின்றன. அது உங்களின் உணர்வுகளைப் பாதித்து இருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்ற ஷில்பா, 'பாக். கொடிக்கு ஓர் 'இச்' கொடுத்து, பல இளைஞர்களின் இதயத்தில் இடம் பிடித்து விட்டார் என்கிறது இந்த வலைத்தளம்.

பால்தாக்கரே கையில் சிக்கிக்கிடாதீங்க!

ஜோக்

நள்ளிரவு - மெல்லிய நிலவொளி - ஒரு முகமூடிக் கொள்ளைக்காரன் - ஒரு வழிப்போக்கனை கத்தி முனையில் மறிக்கின்றான்.

"மரியாதையா உன் பணத்தை எல்லாம் எடு!"

வழிப்போக்கனோ அலட்சியமாக, "டேய், நான் ஆளுங்கட்சியில முக்கியப் புள்ளி தெரியுமா?" என்று கூற, கத்தியை அவன் கழுத்தின் மிக அருகில் வைத்து, கொள்ளைக்காரன் சொன்னான்:


"அப்படின்னா, மரியாதையா 'என்' பணத்தை எடு!"

- முகில்



சிறைக் காவலாளிகள், மேலதிகாரியாகிய ஆங்கிலேயனிடம் போய், என் பொருட்டு மன்றாடினார்கள். "அரவிந்த பாபுவை வெளியே சில சமயம் நடந்து வரும் படிக்கேனும் செய்யலாகாதா?" என்று கேட்டார்கள். அவனும் இணங்கிவிட்டான். அந்த ஏற்பாட்டின் படி நான் வெளியே சுற்றி வர இடமுண்டாயிற்று. அப்போது ஈசனுடைய வலிமை என்னுள்ளே புகுந்தது. நான் எங்கும் வாசு தேவனைக் கண்டேன். ஒரு மரத்தடியே நடந்து சென்றேன். அங்கே வாசுதேவன், ஸ்ரீ கிருஷ்ணன் நின்று எனக்கு நிழல் கொடுக்கக் கண்டேன். எனது சிறையின் கதவைப் பார்த்தேன். அதிலும் வாசுதேவனைக் கண்டேன். நாராயணனைக் கண்டேன். நான் படுத்திருக்கும்போது, நாராயணன் என்னைத் தனது

அரவிந்த அமுதம்



புதிய பகுதி

1. தோரண வாயில்

உலகிற்கு இந்தியா அளித்த ஞானியரின் பெயர்ப் பட்டியல் தான் எவ்வளவு நீண்டது! பாரதமே உலகின் பூஜையறை என்று விவேகானந்தர் சொன்னது மெய்யல்லவா!

தொகுதி பார்த்து, ஜாதி பார்த்து கட்சிகள் நிறுத்தும் தேர்தல் காலத் தாற்காலிக வேட்பாளர் பட்டியல் போன்றதல்ல இது! நேரம் பார்த்து, காலம் பார்த்து, இயற்கை அன்னை சமுதாயத்தின் தேவை கருதிப் படைத்த நிரந்தர அருளாளர் பட்டியல் இது. ராமகிருஷ்ண பரமஹம்ஸர், வள்ளலார், ஷீர்டி சாயிபாபா, ராகவேந்திரர், ரமணர், சேஷாத்ரி சுவாமிகள், காஞ்சிப் பரமாச்சாரியார் என அண்மைக் காலத்தில் வாழ்ந்த இத்தகைய உண்மை ஞானிகளின் நாமம் சொன்னாலே, நம் நா மணக்கும். மனம் தேனாய்த் தித்திக்கும். கவலைச் சுமையால் கனத்துப் போயிருக்கும் மக்களின் இதயங்கள், துன்பச் சுமை நீங்கி இலவம் பஞ்சுபோல் இலேசாகும்.

மனச்சுமைகளைச் சுமக்க மாட்டாமல் சுமந்து, வாழ்க்கைப் பாதையில் சோர்வுற்றும் நொந்தும் தொடர்ந்து வழி நடக்கும் எளிய மக்கள் இந்த அடியவர்களின் கோட்பாடுகள் என்னும் சுமைதாங்கிக் கல்லில் தானே தங்கள் நெஞ்சச் சுமையைச் சற்று நேரம் இறக்கி வைத்துக் கொஞ்சம் இளைப்பாறுகிறார்கள்!

இந்த அருளாளர்களின் பாதாரவிந்தங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு தானே, இந்த எளிய மக்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைகிறார்கள்!

வெயில் காலத்தில் மனிதனின் உடலுக்குக் குளுமை தரும் எலுமிச்சையும், தர்ப்பூசணியும் ஏராளமாய் விளைகின்றன. அதனாலேயே இவை மலிவாய்க் கிடைக்கின்றன. ஏழைகளும் தங்கள் உடல் வெம்மையைத் தணித்துக் கொள்ளத் தங்கள் பொருளாதாரத்திற்கு உட்பட்டே இவற்றை வாங்கிச் சாப்பிட்டுப் பயனடைய முடிகிறது. இயற்கை அன்னையின் கங்குகரை

கைகளால் ஆதரித்துக் காத்தான். அவனது புயங்களினிடையே நானிருப்பது கண்டேன். எனது தந்தை, எனது காந்தன், என்னைத் தன் கையால் கட்டிக் காப்பதைத் தெளிந்து கொண்டேன். சிறையிலிருந்த கைதிகளையெல்லாம் பார்த்தேன். அவர்களெல்லாம் நாராயணனே என்பது கண்டேன். திருடர்கள், கொலையாளிகள், மோசக்காரர்கள் எல்லோரும் வாசுதேவனே... இன்னுமொரு விஷயம் பார்த்தேன். எழுதப் படிக்கத் தெரியாத நம்மவனாகிய ஒரு கிராமவாசி அங்கே இருந்தான். நாம் சாதாரணமாக அவன் போன்ற ஜனங்களைக் கீழ்க் குலத்தாரென்று சொல்கிறோம். அந்த மனிதன் ஒரு ரிஷியாக இருப்பதைக் கண்டேன்.

(கல்கத்தா உத்தர்பாரா தர்ம ரட்சணி சபை இரண்டாம் ஆண்டு விழாவில் அரவிந்தர் செய்த சொற்பொழிவிலிருந்து - 'அரவிந்தர் மகிமை' ஆய்வுத் தொகுப்பு : சீனி விசுவநாதன்.)

யற்ற கருணை வெள்ளத்தின் அன்புப் பெருக்கை, மனிதனால் அவ்வளவு எளிதாக அளவிட்டு விட முடியுமா! தேவைப்படும் காலத்தில், தேவைக்கேற்ப




வாரி வாரி வழங்குவதில் அவளுக்கு நிகர் அவள் தானே!

மனிதனின் உடல் நலத்தில் மட்டும் தானா இயற்கை அன்னைக்கு இத்தனை அக்கறை! மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த மன நலத்தைப் பற்றியும் அன்னைக்கு அக்கறை இருக்காதா!

அதனால் தான் காலந்தோறும் அவள் பல மகான்களைப் படைத்தளிக்கிறாள். அந்தந்தக் காலத்தின் போக்குக்கும் சூழலுக்கும் ஏற்ப, மகான்கள் அறவுரைகளை வழங்கி அருள்பாலிக்கிறார்கள்.

வேதநெறி ஜாதிநெறியாய்க் கீழிறங்கிய போது, ஆதிசங்கரர் அவதரிக்கிறார். நான்கு வேதங்களையே நாய்களாகக் கொண்டு, சிவபிரான் புலையன் வடிவில் தோன்றி, 'சங்கரா! என்னை விலகு என்று சொன்னாயே! நீ விலகச் சொன்னது என்னையா, என் ஆத்மாவையா!' என்று கேட்டுக் கனல்விழி விழித்து நகைத்தபோது, சங்கரர் திகைக்கிறார். புனரபி ஜனனம் புனரபி மரணம், இடையே எல்லோரும் சமம் என்னும் தத்துவ தரிசனம் அடைகிறார்.

போதவில்லை சமுதாயத்திற்கு. சங்கரர் உரத்துச்





திருப்பூர் கிருஷ்ணன்

சொன்னாலும், சமுதாயம் பரவலாக அதை ஏற்கவில்லை. காலம் மேலும் கடக்கிறது. தோன்றுகிறார் ராமானுஜர். ஆலய கோபுரத்தின் மீதேறி அளவற்ற கம்பீரத்தோடு முழங்குகிறார். 'ஓம் நமோ நாராயணாய என்னும் உன்னத மந்திரம் அனைவர்க்குமானது' என்று அறை கூவுகிறார். இயற்கை அன்னை அவருக்கிட்ட கட்டளை அது. தன் குழந்தைகள் இந்த உண்மையை உணர்ந்து உய்ய வேண்டும் என்ற அளப்பருங் கருணையால் தானே, அந்தத் தேவை கருதி அவள் ராமானுஜரைப் படைத்தாள்! என்றாலும், அந்தப் பேருண்மையை ஏற்றவர் சிலர், ஏற்காதவர் பலர்.

வேதநெறி அனைவர்க்குமானது என்ற சத்தியத்தை உலகுக்கு அறிவிக்க, கேரளத்திலும் ஒரு மகானைப் படைத்தளிக்கிறாள் அன்னை. ஆன்மிகம் சமுதாயம் முழுவதற்குமான பொதுச் சொத்து என்பதைத் தம் வாழ்நாள் முழுதும் வாழ்ந்து காட்டி நிறுவுகிறார் அந்த மகான் - நாராயண குரு.

தமிழ் மக்களிடம் இயற்கை அன்னைக்குத் தணியாத பாசம். விசேஷ கரிசனம். ஆன்மிகப் பெருமையை அறைகூவ, தத்துவச் சிந்தனை நிறைந்த ஒரு மகா கவியைப் பெற்றெடுக்கிறாள். 'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னே வாராது போல வந்த மாமணி'. 'எல்லோரும் ஓர் நிலை எல்லோரும் ஓர் விலை' என்று உரக்கக் கூவிய பாரதிக் குயில். 'காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையுமெங்கள் கூட்டம், நோக்கும் பொருளெல்லாம் நாமன்றி வேறில்லை' என்று களியாட்டம் போட்ட கவிதைச் சித்தர். 'ஆறில் ஒரு பங்கு' என்ற தம் சிறுகதையை, பள்ளர் பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு' என்று எழுதித்தான் சமர்ப்பணம் செய்கிறார் அவர்.

சம்ஸ்க்ருதத்தில் உள்ள நால்வேதங்களையும் தமிழில் மொழி பெயர்க்க முனைகிறது ஜம்புநாதன் என்ற சான்றோரின் அன்பு மனம். வேதத்தின் ஒலி சிறப்புத் தான். பொருள் அதனினும் சிறப்பல்லவா! சம்ஸ்கிருதம் அறியாதவர்களும் வேதத்தைத் தமிழில் வாசித்துப் பொருள் புரிந்து கொள்ள வேண்டாமா! 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்ற அரிய ஞானத்தை, அனைவருமே அடைந்து பயனடைய வேண்டாமா! வேத மொழி பெயர்ப்பு முழுவதும் ஹரிஜனங்களுக்குச் சமர்ப்பணம் என்று, அவர் தம் தமிழ் நூலிலேயே அச்சிடுகிறார்.

இயற்கை அன்னை யோசித்தாள். பாரதம் தந்த வேதநெறி, பாரதத்துக்கு மட்டுமா சொந்தம்! உலகம் முழுவதற்குமான தத்துவமல்லவா அது! பாரதம் என்றும் பிரெஞ்சு தேசம் என்றும் வேலி போட்டது யார்? அண்ட வெளியில் இத்தகைய சின்னச் சின்ன வேலிகளுக்கு என்ன அர்த்தமிருக்கிறது! நாட்டின் பிரிவுகளெல்லாம் நாம் வசதிக்கு வைத்துக் கொண்ட பெயர்கள் தாமே! இயற்கையில் உலகமெல்லாம் ஒன்று தானே!

இயற்கை அன்னை நகைத்துக் கொண்டாள். உடல் நலத்துக்குத் தக வெயில் காலத்தில் மஞ்சள் நிற எலுமிச்சையையும், பச்சை நிறத் தர்ப்பூசணியையும் படைத்துத் தரும் அவள் அன்பு மனம், ஒரே உலகம், ஒரே சமுதாயம் என்ற நிலையை நோக்கி மனித குலம் நகர்வதைக் கூர்மையாய்க் கவனித்து மகிழ்ந்தது. அதற்குத் தகுந்தாற் போல், அடுத்த வரிசை மகான்களைப் படைத்துத் தர அவள் திருவுளம் கொண்டாள்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரைப் படைத்தளித்த தேவி அவள். மனிதாபிமானம், மிருகாபிமானம், அவற்றிற்கும் மேலே சென்று தாவர




அபிமானம் கொண்ட பெருமகன் தமிழகத்தில் அல்லவோ அவதரித்தார்!

நானும் இயற்கையும் ஒன்றே என்ற உணர்வோடு பச்சைப் பசும் புல்வெளியில் படுத்திருந்தார் பரமஹம்ஸர். இயற்கை அன்னையின் மேனியில் படர்ந்த புல்வெளியின் இன்னொரு பகுதியில் யாரோ அதிரக் கால்வைத்து நடந்தபோது, ராமகிருஷ்ணருக்கு நெஞ்சு வலித்துத் துடிதுடித்ததாம். பரமஹம்சரின் பரமானந்த சீடர் சாரதானந்தர் தரும் நேரடித் தகவல் இது. மெய்ஞானிகள் எப்படி இயற்கையோடு இயற்கையாக இணைந்து வாழ்ந்திருக்கிறார்கள்!

இயற்கை அன்னை படைத்துத் தந்த இயற்கையின் ஒரு கூறு தானே அவர்கள்! ஆன்மிகம் தானே மனித இயற்கை! அது தானே உள்ளத்தின் பேராழத்தை ஊடுருவிப் பார்க்கும் உயர்தர மனோ விஞ்ஞானம்!

'இது விஞ்ஞான யுகம். கணிப்பொறிக் காலம். மக்களிடம் எதையும் அறிவியல் ரீதியாகச் சொன்னால் தான் எடுபடும். வேதநெறி தழைக்க ஒரு மகானை பாரதத்தில் படைப்போம். அவரை குருவாகக் கொண்ட ஒரு சிஷ்யையை பிரெஞ்சு தேசத்தில் படைப்போம். குருவும் சிஷ்யையுமாய், இவர்கள் தூய தவ வாழ்வு வாழட்டும். ஆன்மிகத்தை அறிவியல் கண்ணோடு ஆராயட்டும். வேத நெறிகளை விஞ்ஞானப் பார்வை கொண்டு விளக்கட்டும். ஆன்மிகத்தைச் சோதனைக் குழாயிலிட்டுத் தங்கள் ஞான நெருப்பால், தியான நெருப்பால் சுட வைக்கட்டும். கண்டறிந்த உண்மைகளைத் தங்கள் பேச்சிலும் எழுத்திலும் பதிவு செய்யட்டும். உலகில் ஆன்மிகம் ஓங்குவதாக!'

சங்கல்பம் செய்து கொண்டாள் இயற்கை அன்னை. அவளின் அளவற்ற கருணையால் பாரதத்தில் பிறந்தார், ஆன்மிக சாம்ராஜ்யத்தில் செங்கோலோச்சும் பேரரசரான மகான் ஸ்ரீ அரவிந்தர். பிரெஞ்சு தேசத்தில் பிறந்தார் மீர்ரா என்ற திருநாமம் கொண்ட ஸ்ரீ மீராம்பிகை.



- எம்.ஆர். மூர்த்தி

குருவும் சிஷ்யையுமாக ஆன்மிகச் சோதனைகள் நிகழ்த்தி, கடும் தவத்தில் ஈடுபட்ட அவர்கள், வாழும்போதே மெல்ல மெல்ல தெய்வ நிலை நோக்கி முன்னேறினார்கள். இன்றோ கோடிக் கணக்கானோர் வழிபடும் தெய்வங்களாகவே உயர்ந்து, அவர்கள் நெஞ்சில் வாழ்கிறார்கள்.

ஆன்மிகம் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது என்பதை அவர்களின் தூய திருவாழ்வு அறைகூவியது. ஆன்மிகத்தில் ஜாதிப் பிரிவுகள் மட்டுமல்ல, தேசப் பிரிவினைகளும் இல்லை என்பதை அது பயில்வோர் மனம் ஏற்கும் வகையில் உணர்த்தியது. யார் வேண்டுமானாலும் முயன்றால் ஆன்மிகத்தில் முன்னேறலாம் என்பதை, அவர்களின் மெய்ஞான ஆராய்ச்சி தெளிவாக்கியது.

ராம சரிதை ராமாயணம். கிருஷ்ண சரிதை பாகவதம். அரவிந்தர் திருச்சரிதை அரவிந்த அமுதம். உண்ண உண்ணத் தெவிட்டாத ஆன்மிக அருளமுதம்.


புண்ணியம் செறிந்த திருக்கதைகளை வாசித்தால் மனம் தூய்மையடையும். வாழ்வில் மங்கலங்கள் மேலோங்கும்.

அரவிந்தர் கதை உண்மையில் கதையல்ல, வரலாறு. பாரதியாருக்கு ரிக்வேதம் போதித்த பெருமகனின் தேதி வாரியான அண்மைக்காலச் சரித்திரம். வ.வே.சு. ஐயருடன் தியானம் பழகிய தவமுனிவரின் திருச்சரிதம். சுதந்திரப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றபோது, சிறையில் நேரில் கண்ணபிரானைத் தரிசித்த பெருமகனின் அனுபவத் தொகுப்பு. தம் வாழ்நாள் முழுதும் இறைச்சக்தி என்னும் அதிமனத்தைத் தன்னில் கீழிறக்கிக் கொள்ள முனைந்த ஆன்மிகச் சாதனையாளரின் வியத்தகு விடாமுயற்சியின் விளக்கம். சித்தியடைந்த பிறகும் நூற்றுப் பதினொரு மணி நேரம் உடலில் காலமானதற்காக புற அறிகுறிகளே தென்படாதது கண்டு, பிரஞ்சு அரசின் தலைமை மருத்துவர் 'இது ஓர் அறிவியல் விந்தை' எனச் சான்றுரைத்த ஆன்மிக உலகின் அதிசயம்!

காலக் காற்றில் எழுதப்பட்ட அந்தக் காவிய வரலாறு, ஆராய்ச்சி செய்து கிடைத்த பல ஆதாரத் தகவல்களோடு இதோ இனி எழுத்தில்...

(அமுதம் பெருகும்)

• படத்தில் - ரம்யா கிருஷ்ணன்



மூன்று தலைமுறை கதை!

குழந்தைத் தொழிலாளியின் அவலமான வாழ்க்கையை, 'குட்டி' மூலம் நெற்றியடியாகச் சொன்ன ஜானகி விஸ்வநாதன் இந்த முறை 'கனவு மெய்ப்பட வேண்டும்' படம் மூலமாக, ஒரு தாசி மகனின் கதையைக் கையிலெடுத்திருக்கிறார்.

"திருச்சி அருகேயுள்ள ஊர் அது. அந்த ஊருக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த முதல் நாள் தான், ஒரு பெண்ணுக்குப் பொட்டுக் கட்டியிருந்தார்கள். 1950-ல் தொடங்கி தேவதாசிகள் தடைச் சட்டம் இருக்கிறது. ஆனால் வெவ்வேறு பெயர்களில் இன்னும் தொடர்கிறது. எல்லம்மா என்ற கடவுளுக்குச் சிறுமிகளைத் திருமணம் செய்து வைத்து, பாலியல் தொழிலாளிகளாக மாற்றப்படுவது, பல மாநிலங்களில் தொடர்கிறது.

"பொட்டு கட்டிக் கொள்வது எங்களுக்கு ஒரு வித கௌரவத்தைக் கொடுக்கிறது என்று இந்த ஊர்ப் பெண்கள் சொல்கிறார்கள். இதில் எல்லாப் பிரச்னைகளும் பின்னிப்பிணைந்திருக்கின்றன. இதைச் சட்டம் போட்டு ஒழித்துவிட முடியாது!" என்று சொல்லும் ஜானகி விஸ்வநாதன், "ஒரு தாசி மகனின் வாழ்க்கை வழியே இந்தப் பிரச்னையை நேரடியாக விவாதிக்காமல், அழுத்தமான காட்சி மொழியின் உதவியோடு அண்டர்பிளே பண்ணியிருக்கிறேன்" என்கிறார்.



• ஜானகி விஸ்வநாதன்

ஒரு தாய், அவளுடைய மகன், மகனுடைய மகள் என்று மூன்று தலைமுறை வாழ்க்கையின் பின்னணியில் கதை நகர்வதால், பாதி பீரியாடிக்கல், மீதி சமகாலத்து நிகழ்வு என்று சொல்லலாமாம்.

"இந்த முறை பிரச்னையை விவாதிக்கிற படமாக இது இருந்துவிடக்கூடாது என்பதில், மிகுந்த சிரத்தையோடு உழைத்திருக்கிறேன்" என்னும் இயக்குனர், இது குட்டிக்கு முன்பே உதித்த கரு என்கிறார். "1999ல் எனக்கு டெல்லி வாழ்க்கை. அப்போது சன்டே டைம்ஸ் பத்திரிகையில், கலாசார ரீதியாக, மத ரீதியாக, பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது பற்றியும், அதிலிருந்து விடுபட நினைத்தாலும் வெளியேற முடியாமல் தவிப்பது பற்றியும், தொடர் கட்டுரைகள் வந்து கொண்டிருந்தன. அதை ஒவ்வொரு வாரமும் படித்தபோது, ஐம்பதாண்டு சுதந்திர இந்தியாவில், இவர்கள் மீதான சமூகப்பார்வை மட்டும் மாறாமல் அப்படியே இருப்பது, என் மனத்தைப் பெரிதும் பாதித்தது. இவர்களுக்கு என்ன தேவை என்பதை மறைமுகமாகச் சொல்லியிருக்கிறேன்" என்கிறார் இந்தப் பெண்ணிய இயக்குனர்!

- ஜெய்

“உள்ளம் ஒளிர்கிறது!”

பார்வை கிடைத்த மகிழ்ச்சியி

முகமது அசிமுக்கு பதினான்கு வயதுதான். லாகூரிலிருந்து (பாகிஸ்தான்) சுமார் எழுநூறு கி.மீ. தூரத்தில் ரஹீமி யார்கான் மாவட்டத்திலுள்ள 152-P. (பெயரே இதுதானாம்!)தான் அசிமின் கிராமம்.

நாலு வருடங்களுக்கு முன்னால், எல்லா மாணவர்களையும் போலத் தான் அசிமும் பள்ளிக்கூடத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று இரண்டு கண்களிலும் பார்வை குறைந்து, உலகம் இருண்டு போயிற்று அசிமுக்கு. படிப்புக்கு முற்றுப் புள்ளி. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியதாயிற்று!

‘அசிமுக்கு இனி வேறு வழியே இல்லையோ’ என்று குடும்பத்தினர் கண்ணீர் விட்டபோது, சகோதரர் ஷாஜாத் அக்ரம், இன்டர்நெட்டில் ‘இதற்கு எங்கே சிகிச்சை கிடைக்கும்?’ என்று தேடத் தொடங்கினார். கடைசியாக, நவம்பரில், கோவை டாக்டர் ராமமூர்த்தியின், ‘ஐ ஃபவுண்டேஷன் கண் மருத்துவமனை’ பற்றிய தகவல்கள் கிடைத்தன. அவற்றை எடுத்துக் கொண்டு லாகூர் கண் மருத்துவமனையில் விசாரிக்க, டாக்டர் ராமமூர்த்தியைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்ததால் பச்சைக் கொடி காட்டினார்கள்.

மறுநாளிலிருந்து கோவை டாக்டர் ராமமூர்த்திக்கும் ஷாஜாத் அக்ரமுக்கும், ஈமெயிலில் கடிதப் போக்குவரத்து தொடங்கியது. மெடிகல், எமர்ஜன்ஸி போன்ற விசாவுக்கு தாமதமில்லை என்பதால் இரண்டே நாளில் விசா கிடைத்தது. அட்டாரி எல்லையில் ரயிலேறி, மறுநாள் அதிகாலை தில்லி வந்து சேர்ந்தார் அசிமுடன். (லாகூர் - தில்லி பஸ் பயணம் என்றால், இரண்டு மாதங்களுக்கு முன்பே பதிவு செய்ய வேண்டுமாம்!) பிறகு கேரளா எக்ஸ்பிரசில் கோவைக்கு வந்து சேர்ந்த போது, பிரச்னை!

துணைப் பிரதமர் அத்வானி ரதயாத்திரையாக கோவைக்கு வந்திருந்ததால், இவர்கள் பாக்.கிலிருந்து வந்திருக்கும் மனித வெடிகுண்டாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தில், சல்லடையாக விசாரித்துத் துளைத்து விட்டார்கள். ஆனால் சிகிச்சை குறித்த அத்தனை கடிதப் போக்குவரத்துகளையும், டாக்டர் ராமமூர்த்தியின் மருத்துவமனையின் கௌரவத்தையும் மனத்தில் கொண்டு, முறையான பதிவுகளையும் மேற்கொண்டார்கள்ளாம்!

• அசிமைப் பரிசோதிக்கும் டாக்டர் ஷரீஷ்



கோவை ஐ ஃபவுண்டேஷனில் அசிமையும், ஷாஜாத் அக்ரமையும் சந்தித்தபோது, கிட்டத்தட்ட மகிழ்ச்சியின் எல்லையில் இருந்தார்கள் இருவரும்.

“பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வர, தினசரி ஆயிரக்கணக்கானோர் விசாவுக்காக காத்திருக்கிறார்கள். பதினைந்து கோடிப் பேரில் மூன்று கோடிப் பேருக்கு உறவினர்கள்

இங்கேதான் இருக்கிறார்கள்'' என்கிறார் ஷாஜாத். ''நான் கோயமுத்தூரில் நிறைய இடங்களுக்குப் போனேன். பாகிஸ்தானிலிருந்து வருகிறேன் என்றதும், அன்புடன் உதவுகிறார்கள். இங்கே மருத்துவமனையிலோ, கண்ணை இமை காப்பது மாதிரி பார்த்துக் கொள்ளுகிறார்கள். உண்மையிலேயே உள்ளம் ஒளிர்கிறது!'' என்கிறார் ஷாஜாத், நெகிழ்ச்சியுடன்.

டாக்டர் ராமமூர்த்தியைச் சந்தித்தோம்.


''அசிமுக்கு கார்னியா வெளியே பிதுங்கிக் கொண்டு துருத்திய படி வந்துவிட்டதால் பழுதாகிவிட்டது. கண்ணாடி போட்டும், கான்டாக்ட் லென்ஸ் பொருத்தியும் பார்த்திருக்கிறார்கள் அங்கே. பலன் அளிக்காமல் போனதால்தான், புது கார்னியா பொருத்துவது என்று தீர்மானித்தார்கள். அசிமின் கண்கள் இரண்டுமே மரபுரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதை 'கெரோடோகோனஸ் என்பார்கள். அங்கே கார்னியா கிடைப்பதே குதிரைக் கொம்பு. இத்தனை நவீன வசதிகளும் இல்லை. பிறகுதான் என்னைத் தொடர்பு கொண்டார்கள்.''

''இப்போது ஒரு கண்ணுக்கு கார்னியாவை பொருத்தி விட்டீர்கள். எங்கேயிருந்து கிடைத்தது?''

''அசிம் பதினான்கு வயதுப் பையன். அவனுக்கு எண்பது வயதானவரின் கார்னியாவைப் பொருத்தினால், சில வருடங்களுக்கே பயன்தரும். அதனால் இளமையான ஒருவரின் கண் கிடைக்கக் காத்திருந்தோம். ஈரோடு பொதுமருத்துவமனையில், மாரடைப்பால் காலமான நாற்பத்தியிரண்டு வயது விவசாயி ஒருவரின் கண்களை, ஈரோடு அரசன் கண் மருத்துவமனை டாக்டர் பன்னீர்செல்வம் கொண்டு வந்து கொடுத்தார். அதைத்தான் அசிமுக்குப் பொருத்தினோம். எங்கள் டாக்டர் ஷ்ரீஷ், விழிமாற்று அறுவைச் சிகிச்சையைச் செய்தார். இந்தப் பதினைந்து நாட்களில் தொடர்ந்து அளித்த சிகிச்சையில், தொண்ணூறு சதவிகிதப் பார்வை வந்துவிட்டது. இன்னொரு கண்ணுக்கும் காத்திருக்கிறோம். இன்னும் பத்து நாட்களில் அதையும் பொருத்திவிட்டால், அசிமும் அவர் சகோதரரும் லாகூருக்குத் திரும்பி விடலாம்'' என்றார்.

''கண் தானம் பற்றிய விழிப்புணர்வு, இங்கேயும்கூட இன்னும் பரவலாக வேண்டும். நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன்: இரண்டு எல்.டி.டி.ஈ இளைஞர்களைத் தூக்கில் போடுவதற்கு முன்னால், 'உங்கள் கடைசி விருப்பம் என்ன?' என்று அதிகாரிகள் கேட்டார்களாம். 'எங்கள் கண்களைத் தானம் செய்ய விரும்புகிறோம். மறைந்த பிறகும், உலகைப் பார்க்க விரும்புகிறோம்' என்றார்களாம். அந்த அளவுக்கு இலங்கையில் கண்தானம் பற்றிய விழிப்புணர்வு இருக்கிறது!'' என்றார்.

...க். இளைஞர்!



● டக்டர் ராமமூர்த்தியுடன் அசிம், ஷாஜாத் அக்ரம்

- சாருகேசி

திரைப்படம் முடிந்து ஜெயந்தி டூரிங் டாக்கீஸிலிருந்து வெளியே வந்தபோது, அவர்களை வரவேற்க முழு நிலா காத்திருந்தது.

மிதிவண்டிகளைத் தள்ளிக் கொண்டும், ஒன்றிரண்டு டி.வி.எஸ். துள்ளுந்துகளை ஓட்டிக் கொண்டும், சளசள வென்று படத்தின் கதையைப் பேசிக் கொண்டும் கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. வேல் முருகன் மிதிவண்டியைத் தள்ளிக் கொண்டு வரட்டும், என்று கொட்டகை வாசலில் இருந்த வில்வ மரத்தடியில் காத்துக் கொண்டிருந்தான் மனோகரன். வந்ததும் நடந்தார்கள்.

கோழிப் பண்ணையைத் தாண்டியதும் இருவரும் மிதி வண்டிகளில் ஏறிக் கொண்டார்கள். சாலை ஆள் நடமாட்டமில்லாமல் அகன்றிருந்தது. சின்னத் தாமரைக்குளம் ஊராட்சி அலுவலகத்தின் முன்னாலிருந்த ஆலமரம், திடீரென்று வளர்ந்து விட்டது போலத் தெரிந்தது. பகலிலே மனோகரன் அவ்வளவு கவனமாக அதைப் பார்த்ததில்லை. 'நிலா வெளிச்சம்தான் காரணமோ' என்று நினைத்துக் கொண்டான்.

"இப்பிடியே வாடா. சாப்பிட்டுட்டுப் போவோம். சாயந்திரமே ஜானகி சொல்லிட்டிருந்தா."

மனோகரன் அமைதியாக வந்து கொண்டிருந்தான். வீட்டெதிரிலே போய் நின்றதும், வேல் முருகனின் பையன் அவர்கள் முன்னால் ஓடி வந்து நின்றான்.



அழகிய பெரியவன்

"அப்பா சின்ன சைக்கிள்"

"இல்லப்பா, கடையில வரலையாம். நாளைக்கு வாங்கிக்கலாம்"

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, ஜானகி ஒரு பொட்டலத்தைச் சுற்றிக் கொண்டு வந்து, மனோகரனின் பக்கத்தில் வைத்தாள்.

"அண்ணா, கொஞ்சம் அதிரசம் வெச்சிருக்கேன். வீட்டுக்கு கொண்டுபோயி குடுங்க."

"எதுக்குமா இதெல்லாம். குழந்தங்க சாப்பிடுவாங்கல்ல."



"அவங்களுக்கெல்லாம் இருக்குண்ணா. நீங்க கைகழுவிடப் போறீங்க. இருங்க சாதம் கொண்டு வர்றேன்."

ஜானகி சமையலறைக்கு வேகமாகப் போனாள். வேல்முருகன் திடீரென்று நினைத்துக் கொண்டவனாய், தன் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்து மனோகரனிடம் நீட்டினான்.

"என்னா அவசரம் ஓய்? வெச்சிருந்து அப்புறம்தான் தர்றது."

"வேணாடா. எனுக்கு ஒட்டக்கையி. செலவாயிடும்." அவர்களிடம் சொல்லிக் கொண்டு வாசலிலுள்ள மிதிவண்டியருகில் போனான் மனோகரன்.

"நாந்தான் அப்பப்ப இங்க வந்து சாப்பிடறேன். இவன் வீட்டுக்கு வந்தான்னா ஒருமுறைக்கூட சாப்பிடறதில்ல. நீயும் பிள்ளைங்கள கூட்டிக்கிட்டு ஒரு நாளைக்கு வாம்மான்னா மாட்டன்ற"

"எல்லாம் வர்றோம் கௌம்புடா. கலையரசி திட்டப்போவுது" மனோகரன் மிதிவண்டியில் ஏறி மிதித்தான்.

ஊர் எல்லையிலிருந்து ஜெயந்தி டாக்கீஸ் வரை, கட்சிக் கொடிகளைக் கட்டியிருந்தார்கள். புளிய மரங்களையும், பனை மரங்களையும், தட்டிகளைக் கட்டி தூண்களாக்கியிருந்தார்கள். பாலிதீன் கொடித் தோரணங்கள் காற்றில் ஆடி, வினோத ஒலி எழுப்பின. டாக்கீஸில் கட்சியின் ஒன்றிய செயற்குழு நடைபெற இருந்தது. வரும் தேர்தலுக்கு

யாரும் யாரையும்

ஆலோசனைக் கூட்டம். மாவட்டத் தலைவர்களின் பெயர்களும், மேலிடப் பிரதிநிதிகளின் பெயர்களும், சுவரொட்டிகளில் தடித்திருந்தன. டாக்கீஸின் முன்பு தொங்கிய கொடிகளில், அதன் முகப்பே அடையாளம் தெரியவில்லை.

வேல்முருகன் ஓடியாடிக் கொண்டிருந்தான். பல ஆண்டுகளாய் கட்சியில் இருக்கிறான். இன்னும் ஒரு நகரப் பொறுப்பைக் கூட வாங்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவனுக்கு. ஒவ்வொரு செயற்குழுவுக்குப் பின்னும், அவனுள் கசப்பு நிரம்பும். எதற்காக இப்படி இருக்கிறோம்? இப்படி உழைத்தும் என்ன பலன்? மெதுவாக மனம் தேறும். இம்முறை தன் கிராமத்திலும், சுத்துப்பட்டிலும் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு வோட்டுகளை வாங்கிக் காட்டி விட வேண்டும் என்ற வெறி கிளம்பியிருந்தது அவனுக்கு.

நேற்றுவரை வெறுமனே சுற்றிக் கொண்டிருந்தவனெல்லாம், இன்று கட்சியில் சேர்ந்து சுமோவில் பொறுப்புகளுடன் வலம் வருகிறான். பேச்சுத் திறமையும், நிர்வாகத்திறமையும் இருந்தும்கூட, நாம் ஏன் இன்னும் இப்படியே இருக்கிறோம் என்று நினைக்க, துக்கமாக இருந்தது. இந்தக் கூட்டத்தையேகூட அவன் கிளையிடமும், சுற்றுப் பக்க கிராமங்களிடமும் தான் நடத்தச் சொல்லியிருந்தார்கள். வேல் முருகனுக்கு வீட்டுப் பக்கமே தலைகாட்ட முடியாதபடி வேலை இருந்தது.

கழகப் பொறுப்பாளர்கள் வந்த கார்களால், அந்தப் பகுதியே மாற்றம் பெற்றுவிட்டது. பட்டாசுகளால் புகை மண்டலம் எழும்பி, வெண்ணிற உலகின் கனவை தொண்டர்களுக்கு உண்டாக்கின. கூட்டத்தில் கிளைவாரியாக கருத்துக் கேட்டார்கள். எங்கு வாக்குகள் சிதறாமல் விழும், எங்கே பணம் செலவழிக்க வேண்டியிருக்கும், யாரிடம் பொறுப்புகளைத் தரலாம் என்று பேச்சுகள் நீண்டன. தேர்தல் பணிக்குழுவுக்கு வேல்முருகன் பெயரை ஒருவர் முன்மொழிந்ததும், சலசலப்பு எழுந்தது.

"அவருக்கு, வேற கட்சி ஆளுங்க கூடத்தான் அதிகம் சகவாசம். சாதி பேரச் சொல்லி கட்சி நடத்திட்டு இருக்கறவனுங்களோடதான் எப்பவும் சுத்தறாரு. அவரு ஊருலயே நமக்கு ஒரு வோட்டுகூட விழுறதில்ல. இதுல அந்தக் கட்சிக்காரங்களோட சுத்தினா எவன் நமக்கு வோட்டுப் போடுவான்?"

> "அந்த வேட்பாளர் மருத்துவமனைக் குள்ளேயே சுத்திச் சுத்தி வர்றாரே ஏன்?"
>
> "வார்டு வார்டா போய், வாக்கு சேகரிக்கணும்னு தலைவர் சொன்னதைத் தப்பாப் புரிஞ்சுகிட்டாரு!"
>
> – தஞ்சை தாமு

நகரப் பொறுப்பாளர் ஒருவர் பேசப்பேச, வேல் முருகனின் உடல் பதற்றத்தில் நடுங்கத் தொடங்கியது. மனோகரனோடு சுற்றுவதைத்தான் சொல்கிறார்கள் என்று புரிந்து கொண்டான். டாக்கீஸ் நிரம்பி வழியும்படி இருக்கும் இந்தக் கூட்டத்தில், தன்னைப் பற்றி இப்படி ஒரு குற்றச்சாட்டு எழும் என்று நினைக்கவில்லை. எல்லோரும் அவனைப் பார்த்தார்கள். யாராவது தனக்கென பேசுவார்களா என்று பார்த்தான். யாரும் எழுவதாகத் தெரியவில்லை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, எழுந்து நின்றான் வேல்முருகன்.


"நட்பு வேற. கட்சி வேற. கட்சி வேலையில என்னா கொற வெச்சேன்னு சொல்லுங்க. அதிலுமில்லாம, எங்கூட சுத்தறது கூட்டணி கட்சிக்காரந்தான்."

கூட்டத்தில் மறுபடியும் சலசலப்பு எழுந்தது. பக்கத்துக் கிராமத்து பொறுப்பாளர்கள் சிலர், சத்தம் போட்டனர்.

"தலைவருக்கென்ன தேர்தல் நேரத்துல மட்டும் எங்களைப் பாக்க வந்துட்டு, எதையெதையோ பேசிட்டுப் போயிடுவாரு. கீழ்மட்டத்துல வேல செஞ்சாத் தெரியும்! வேல்முருகன் இந்தக் கூட்டத்துக்கு ரெண்டு மூணு நாளா அலஞ்சி திரிஞ்சது, எங்களுக்குத்தான் தெரியும்."

வேலுவுக்குத் துக்கம் அடைத்தது. உட்கார்ந்து கொண்டான். தேர்தல் பணிக்குழுவில் கூட்டம் முடியும்போது, வேல் முருகனின் பெயரையும் சேர்த்து அறிவித்தார்கள்.

தேர்தலுக்கு ஒரு வாரம் இருக்கும் போது வேலுவிடம் நாற்பதாயிரம் ரூபாயை நகரப் பொறுப்பாளர்கள் தந்துவிட்டுப் போனார்கள். தலைக்குப் பத்து ரூபாயிலிருந்து நூறு வரைக்கும்கூட தந்து, ஒரு வாக்கையும் விடாமல் மடக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். வீட்டில் தங்கு



வதையே மறந்து போனான் வேல்முருகன்.

டவுனில் ஒருமுறை தேநீருக்குச் சொல்லி விட்டு நின்றிருந்தபோது, மனோகரனைப் பார்த்தான் வேல்முருகன். திடீரென்று அவன் மனம் பரபரப்படையத் தொடங்கியது. கூட இருந்தவர்களை ஒருமுறை பார்த்துக் கொண்டான். மனோகரன் அவனது ஆட்களோடு இருந்தான்.

"என்னாடா ஓய், ரொம்ப பிசியா? வீட்டுப் பக்கம் வந்துக்கிற, கலை கூப்புட்டும்கூட வர்லியாமே?"

வேல்முருகன் இயல்பாய் இருப்பது போலச் சிரித்தான். உடனிருப்பவர்களை மீண்டுமொருமுறை பார்த்துக் கொண்டான்.

"எங்கடா, வேலையில எங்க வீட்டிலேயே கூட தங்கமுடியிறதில்ல"

"நானு கூடத் தாண்டா கட்சி வேலையில சுத்தறேன். ஏன் கூட்டணி இல்லன்னவுடனே, எங்கூடவெல்லாம் சேரக் கூடாதுன்னுட்டாங்களா?"

"அதெல்லாம் இல்ல போடா. அப்புறம் பேசலாம்."

தேர்தல் நாளன்று காலை பத்து மணிக்கெல்லாம், தாமரைக் குளம் சாவடியில் கூட்டம் நெருக்கியடித்தது. வேல்முருகனும் இளைஞர் அணியைச் சேர்ந்த இரண்டு பேரும், மோட்டார் சைக்கிளில் எல்லா சாவடிகளுக்கும் சென்று சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

வேல்முருகனும், அவனது கட்சியாட்களும் சின்னத்தாமரைக்குளம் சாவடிக்கு வந்தபோது, கூட்டம் இன்னும் அதிகமாகியிருந்தது. சாவடிக்குள் போய், தன் கட்சி முகவர்களிடம் நிலவரம் கேட்டான். அவர்களின் ஒருவன் வேலுவின் காதருகில் மெதுவாய்க் கிசுகிசுத்தான்.

"அவுனுகளுக்குதான் எல்லாம் உளுந்துகிட்டிருக்குது. நம்மாளுங்க ஒருத்தனையும் காணலை. மனோகரந்தான் நமக்கு வர்ற ஒன்னு ரெண்டையும் திருப்பிடறதா நம்மப் பசங்க சொல்றாங்க."

வேல்முருகனின் உற்சாகம் வற்றிப்போனது. இந்த முறை தன் ஊரிலேயே அதிகம் வாக்கு வாங்கிக் காட்ட வேண்டும் என்றிருந்தான். அது நடக்காது போலிருந்தது. அப்படியென்றால் தேர்தல் ஆலோசனைக் கூட்டத்தில் சொன்ன குற்றச்சாட்டுகள் உண்மையாகத்தான் ஆகி விடும். வெளியே வந்து நின்றபோது மனோகரன் கட்சி ஆட்களே கண்ணுக்குத் தெரிந்தனர்.

"துட்ட வாங்கி வச்சுக்கிட்டு எங்கப் போயிட்டானுங்க முட்டாப் பசங்க"

காறித்துப்பிவிட்டு, வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டான். மறுபடியும் வெறியுடன் சாவடிக்குள்ளே போனான் வேல்முருகன்.

"என்ன சார் காசு வாங்கிட்டியா? அவுங்க ஆளுங்கதான் புகுந்து கள்ள வோட்டா குத்துறானுங்களாமே, கலக்டர் கிட்ட கம்ளெய்ண்ட் பண்ண வேண்டி வரும்"

வயதான வாக்குச்சாவடியின் அதிகாரி எழுந்து நின்று நடுங்கினார். ஆத்திரம் அடங்காதவனாய் வெளியே வந்த வேல்முருகன், மனோகரனிடம் ஓட்டமும் நடையுமாய்ப் போனான்.

"என்ன ஓய்? நெறைய உளுதா உங் காளுக்கு வோட்டு?" மனோகரனின் சிரிப்பு எரிச்சலைக் கிளப்பியது.

"ம். உளுது. அதான் நீயி இங்க நின்னுட்டு திருப்பறியாமே! எங்காளுங்கப் பேருலதான் உங்காளுங்கப் போயி குத்தரானுங்களாம். வேணாம் மனோகரா, அப்புறம் என் வேலையக்காட்ட வேண்டிவரும்."

"என்னடா மரியாதை இல்லாம பேசற?"

"உனக்கென்னடா மரியாதை."

வேலு ஆவேசமுடன் மனோகரனின் முகத்தில் குத்தித் தள்ளினான். அவன் சமாளித்துக் கொண்டு எழுவதற்குள், வாக்குச் சாவடியைப் பார்த்து ஓடினான் வேல்முருகன். பெண்கள் பக்கமாக ஆத்திரமுடன் நுழைந்து, வாக்குப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடி வந்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வாக்குப் பெட்டி கிணற்றில் விழும் சத்தம் பேரோலமாகக் கேட்டது. ஜனங்களின் குழப்பமும் கூச்சலுமாக, பெரும் கலவரமாய்த் தென்பட்டது அந்த இடம்.

ஏப்ரல் 11 - 2004

மினி கல்கி

ஓவியர் மருது

டாக்டர் கே.ஸ்ரீதர்

டாக்டர் எஸ்.அசோக்

டாக்டர் எல்.மகாதேவன்

சமையறை தோட்டக்கலை நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே.சுமதி

டாக்டர் இரா.அன்புமணி

பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்



உத்யோகம் 'பொருத்த' லட்சணம்!

கல்வியாளர் எஸ்.கே.ஏ.விஜயகுமார்




✱ எஸ்.கே.ஏ.விஜயகுமார்

படிச்ச படிப்புக்கு வேலை கெடைக்கலே! பட்டம் வாங்கியும் கஷ்டம் போகலே! இதுதான் உங்கள் தேசிய கீதமா? கவலையை விடுங்கள்! பட்டப்படிப்பு என்பது உங்கள் கல்வித் தகுதி மட்டுமே. பெருகி வரும் வேலை வாய்ப்புகளுக்குப் 'பொருத்தமான ஆளாக' உங்களைச் செதுக்கிக் கொண்டால், வருத்தங்கள் பறந்து போய் விடும் என்ற புதிய வேலை வாய்ப்புச் சிந்தனையை முன் வைக்கிறார் 'கரியர் டெவலப்மெண்ட் ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியாவின் (CDFI - A unit of Integrated National Development in Action Trust) *தலைவர், கல்வியாளர் எஸ்.கே.ஏ. விஜயகுமார்.*

கூண்டைவிட்டு வெளியே வா!

குட்டி ஒட்டகம் தன் தாயைப் பார்த்துக் கேட்டது. "அம்மா! நமது கால்கள் மட்டும் ஏன் இத்தனை நீளம்?" "பாலைவன மணலில் புதைந்து கொள்ளும் கால்களை எடுத்து எடுத்து வைத்து நடக்க, இறைவன் நமக்குக் கொடுத்த வரம்!" தாய் ஒட்டகம் தடுமாறாமல் பதில் சொன்னது. "நமக்கு மட்டும் ஏன் இத்தனைத் தடிமனாக இமைகள்?" "பாலைவனத்தில் அடிக்கடி மணல் புயல் அடிக்கும். அதிலிருந்து நம் கண்களைக் காத்துக் கொள்ள கடவுள் தந்த பரிசு!" தாயின் பதிலில் துள்ளிய குட்டி ஒட்டகம் கடைசியாய் கேட்டது. "நமக்கு மட்டும் எதற்கம்மா முதுகில் கூன்?" "கூன் நமக்கு ஊனமல்ல; பாலைவனத்தில் தண்ணீர் கிடையாது. தண்ணீரை மொத்தமாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய் குடிப்பதற்காகக் கடவுள் நமக்குத் தந்த கொடை!" சிலிர்த்த குட்டி ஒட்டகம் உடலை ஒரு முறை குலுக்கிக் கொண்டு கேட்டது, "அப்புறம் ஏனம்மா இத்தனை வருடங்களாக நாம் இந்த மிருகக் காட்சி சாலையில் அடைபட்டுக்கிடக்கிறோம்?"





இந்த ஒட்டகங்களைப் போலத்தான் பெரும்பாலான இளைஞர்கள், திறமையிருந்தும் கூண்டை விட்டு வெளியே வரத் தயங்குகிறார்கள். வெளியே வந்தாலும், அணுகுமுறை அறியாமல், முதல் தோல்வியோடு முடங்கி விடுகிறார்கள். ஒரு வேலைக்குப் பல நூறு பேர் முயற்சி செய்வதைப் பார்த்து, அயர்ச்சி கொள்கிறார்கள். "பாவம் பையன், நல்லா படிச்சிருக்கான். வேலைதான் கிடைக்கலே!" என்கிற பரிதாபங்களில் குளிர்காய்கிறார்கள், வேலை கிடைக்கவில்லை என்பவன் கோழை! ஆனால் இங்கே எல்லோருக்கும் இருக்கிறதா வேலை?

வேலைக்குத் தரும் விலை!

There is always a right job, at the right time, for the right person. இது உலகத் தத்துவம். எனக்கு வேலை கிடைக்கவில்லை என்று ஓர் இளைஞன் நினைத்தால், நிச்சயமாக அவன் wrong person. இளைஞர் பட்டாளத்தில் wrong personகள் இன்று

மினி கல்கி

அதிகமிருப்பதால்தான், வேலை இல்லாத் திண்டாட்டம் என்ற பிரச்னை நம் கண்களுக்கு நாட்டையே விழுங்கும் பூதம் போலத் தெரிகிறது. இன்றைய இளைஞர்களை wrong personகளாக உருவாக்கியது யார்? அடித்துச் சொல்லலாம், நமது கல்வித் திட்டம் என்று. பாலகனாக எல்.கே.ஜி. வகுப்பில் நுழைந்து, பதினேழு ஆண்டுகள் படித்து பட்ட தாரியாக வெளியே வரும் இளைஞனை, ஒரு வேலைக்குத் தகுதியானவனாக உருவாக்காதது கல்வி முறையின் குற்றமென்றால், பெற்றோர் களுக்கும், ஆசிரியர்களுக்கும் இதில் பங்கு உண்டா? இன்றைய இளைஞன் ஒரு நல்ல வேலைக்கு, தர வேண்டிய விலைதான் என்ன?



தவளை போன்றதா இளைஞனின் நிலைமை?

ஒரு விஞ்ஞானி, தவளைக்குக் காது கேட்குமா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். கண்ணாடிப் பெட்டியிலிருந்து அதை வெளியே எடுத்து, மேஜை மீது வைத்து 'குதி குதி' என்றார். குதித்தது. பின்னங் கால்களில் ஒன்றை வெட்டி விட்டு "குதி குதி" என்றார் குதித்தது. முன்னங்கால்களில் ஒன்றையும் வெட்டிவிட்டு மீண்டும் "குதி" என்றார். குதித்தது. மூன்றாவது காலை வெட்டிய பிறகும் குதித்தது. இறுதியாக எஞ்சியிருந்த நான்காவது காலை வெட்டிவிட்டு குதிக்கச் சொன்னார். தவளையால் குதிக்க முடிய



வில்லை. 'நான்கு கால்களையும் வெட்டிவிட்டால், தவளைக்குக் காது கேட்காது' என்று அந்த விஞ்ஞானி குறிப்பெழுதிக் கொண்டார்! காலை வெட்டுவதற்கும், தவளையின் காது கேட்பதற்கும் சம்பந்தமில்லை என்பது ஒரு புறம் இருக்க, நான்கு கால்களையும் வெட்டிவிட்டால் தவளை எப்படிக் குதிக்கும்? இந்தத் தவளையின் நிலைதான் இன்றைய இளைஞனுக்கும். முதல் காலை வெட்டியது கல்விமுறை என்றால் இரண்டாவது, மூன்றாவது கால்களைத் துண்டித்தவர்கள் பெற்றோரும் ஆசிரியரும். நான்காவது காலை இளைஞர்களே வெட்டிக் கொண்டு விட்டார்கள். பெற்றோர், ஆசிரியர், கல்விமுறை, இளைஞன் இந்த நால்வரும் இணைந்தால்தான், ஒரு திறமையான மனிதன் உருவாக முடியும். முதலில் திருந்த வேண்டியது அல்லது திருத்த வேண்டியது யாரை? எதை?



திணற வேண்டாம்! உணருங்கள்!

பிள்ளைகளின் கல்விக்குக் கடன் வாங்கியாவது செலவு செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள் பெற்றோர்கள். ஆனால் பிள்ளைகளை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்க்க, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்களா? என்ற கேள்வி எழுந்தால், பதில் இல்லை. இதுதானே தலைமுறை இடைவெளி?

எத்தனை மாணவர்கள் கல்லூரியைவிட்டு வெளியே வரும்போது தன்னம்பிக்கையோடு வருகிறார்கள்? எத்தனை பேர் அங்கே தலைமைப் பண்பை கற்றுக் கொண்டார்கள்? இதையெல்லாம் ஊட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்கள்தாமே? கல்வித் திட்டம் என்பது வெறும் சிலபஸ் பாடங்களை ஓதுவது மட்டுமல்ல. ஒரு மாணவனை உருவாக்குவதில், ஆசிரியர்களின் பங்களிப்பும் இணைந்ததாக இருக்க வேண்டும். இதை அரசு உணர்கிறதோ இல்லையோ,

மினி கல்கி

ஆசிரியர்கள் முதலில் உணர வேண்டும். அந்தக் காலத்து ஆசிரியர் பயிற்சியை வைத்துக் கொண்டு, இந்தக் காலத்து மாணவர்களை எப்படி உருவாக்க முடியும்? காலந்தோறும் ஆசிரியர்கள் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வாங்க வேண்டும் என்றால், முன்னாள் ஒலிம்பிக் சாம்பியனிடம்தானே பயிற்சி எடுத்துக் கொள்ள முடியும்? எனவே திணறுவதை விடுத்து, பெற்றோர், ஆசிரியர் இருவருக்குமே இன்று பயிற்சி அவசியம் என்பதை உடனடியாக உணர வேண்டும்.

இதற்கு மனித வள மேம்பாட்டுத்துறை ஓர் அற்புதத் தீர்வாக அமையும்.

மனித வள மாயாஜாலம்!

ஒவ்வொரு தொழிற்சாலையிலும், அலுவலங்களிலும் ஒரு மனித வள மேம்பாட்டு அதிகாரி இருக்கிறார். அங்கே அவரது வேலை என்ன தெரியுமா? ஊழியர்களுக்கு ஊதியம் சரியாக வருகிறதா? அலுவலக, தொழிலகச் சூழலில் அவர்களுக்கான அடிப் படை வசதிகள் சரிவர இயங்குகின்றனவா? ஒழுங்காக வேலை செய்கிறார்களா? உற்பத்தியில் புதிய தொழில் நுட்பம் புகுத்தப் பட்டால், அதற்குப் பயிற்சி எடுத்துக் கொண்டார்களா? என்று கண்காணிக்கிறார். நடவடிக்கை எடுக்கிறார். ஆனால், மாணவர் களை உருவாக்கும் கல்வி நிறுவனங்களில், ஏன் மனித வள மேம்பாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் இல்லை? ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் ஒரு ஹெச்.ஆர்.டி. அலுவலர் இருந்தால், அவர் எப்படி இயங்க முடியும் என்பதைப் பாருங்களேன்!

ஆசிரியர்கள் - பெற்றோர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யலாம். ஆண்டு தோறும் ஆசிரியர்களை பயிற்சிப் பட்டறைகளுக்கு அனுப்பி, அவர்களது திறனை மேம்படுத்தலாம். மாணவர்களிடம் தனிப்பண்புகளை உருவாக்க, படிப்போடு, பிரத்யேக பயிற்சிகளுக்கும் ஏற்பாடு செய்யலாம். தேசம் முழுவதும் ஒரு கல்வி நிறுவனத்துக்கு ஒரு எச்.ஆர்.டி. அலுவலர் என்று நியமித்தால், லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை தர முடியும். இதன்மூலம் தரமான மனித வள சக்தியை உருவாக்கிவிட முடியும். சுயதொழில்





* "ஜாடி இருக்கு... மூடி எங்கே...?"

சிந்தனையைத் தூண்டிவிடுவதிலும் - மனித வளப் பயிற்சி மாயா ஜாலம் போல் வியப்பூட்டுகிறது.

தடுக்கும் பெற்றோர்; தடுமாறும் இளைஞர்!

இன்றைய இளைய சமுதாயத்தின் மத்தியில் இன்று மூன்று வகையான வேலைவாய்ப்புச் சிந்தனைகள் இருக்கின்றன. இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் என்றால் கூடப் பரவாயில்லை. ஆனால் அது ஏசி அறையில் அமர்ந்து செய்கிற ஒயிட் காலர் ஜாப்பாக இருக்க வேண்டும் என்பது ஒரு ரகம். இரண்டாயிரம் எல்லாம் எந்த மூலைக்கு? கைநிறையச் சம்பாதிக்க வேண்டும். அப்பா அம்மாவை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு சொந்த பிசினஸ்தான் சரி என்று நினைப்பது இரண்டாவது ரகம். இந்த ரகத்தினர் ப்ளஸ் டூ முடித்தவுடன், "நான் பகுதி நேரப் பட்டப்படிப்பில் சேரப் போகிறேன். மீதி நேரத்தில் சுய தொழில் செய்யப் போகிறேன்" என்று சொன்னால், அதெல்லாம் முடியாது என்று அந்தக் கணமே பெற்றோர் தடை போடுவார்கள். "உத்தியோகம் புருஷ லட்சணம்! ஒழுங்காகப் படித்து, ஒரு வேலையைத் தேடிக் கொள்" என்று தொழிலதிபர் கனவுகளை

மினி கல்கி


முளையிலேயே கிள்ளிப் போடுவார்கள்.

மூன்றாவது ரகத்தினர் இன்னும் பின் தங்கி விடுகிறார்கள். மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் நிறுவனங்களில் எப்படியா வது நுழைந்துவிடலாம் என்று ஆள் பிடிப்பார் களே தவிர, அந்த நிறுவனங்களில் வேலைக்குச் சேர நாம் பொருத்தமானவர்களா என்று சுய பரிசோதனை செய்து கொள்ள மாட்டார்கள். இங்குதான் தொடங்குகிறது தோல்வி.



ஜாடிக்கேற்ற மூடியைத் தேடி...

சென்னைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே எழுபத்தாறு வகையான படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இங்கே மட்டுமில்லை. வேறு எந்தப் பல்கலைக் கழகத்தில் படித்துவிட்டு வெளியே வந்தாலும், படித்த படிப்பிற்குத் தகுந்த வேலை கிடைக்குமா? வரலாறு படித்தவர்கள் எல்லாம் ஹிஸ்டோரியன் ஆகிவிட





முடியுமா? பொருளாதாரம் படிக்கிறவர்களுக்கு எக்கனாமிஸ்ட் ஆகும் வாய்ப்பு கிடைக்கிறதா? இல்லை. அப்படியானால் மாணவர்கள் என்ன செய்வது? பெருகி வரும் வேலை வாய்ப்புகளுக்குப் பொருத்தமாகத் தங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இது என்ன புதுக்கதை என்கிறீர்களா? இதுதான் இன்றைய நிலை.


தகுதி என்பது பதினேழு வருடப் படிப்பில் கிடைத்துவிடுகிறது. ஆனால் பொருத்தம் என்பது இல்லை. ஒவ்வொரு தொழில் நிறுவனமும் வேலை தேடி வருபவனிடம் எதிர்பார்ப்பது பொருத்தமே தவிர, தகுதி இல்லை. திருமணத்திற்கு வயது ஒரு தகுதி என்றாலும், ஜாதகப் பொருத்தம் இருந்தால்தானே வரன் கிடைக்கும்? இங்கே உத்தியோகம்




புருஷ லட்சணமல்ல. பொருத்த லட்சணம்! உங்களைப் பொருத்த மாணவராக மாற்றிக் கொள்ள முடியுமா?

கண்ணனும் கவிதாவும், பீட்டரும் பேகமும்

கண்ணன் படித்தது பிஎஸ்சி கணிதம். ஆனால் ஃபோர்டு கார் தொழிற்சாலையில், ஒயரிங் பிரிவில் கண்காணிப்புப் பொறி



யாளர் பணியிடம் காலியாக இருந்தது. கடகடவென்று அடிப்படை மின்னியல், மோட்டார் ஒயரிங் தொடர்பான புத்தகங்கள் என்று படித்தான். தனக்கு தெரிந்த கார் பழுது நீக்கும் பட்டறைக்குச் சென்று, கார் ஒயரிங்கை நேரில் பார்த்தான். நம்பிக்கை வந்தது. கண்ணனின் பயோ டேட்டாவைப் பார்த்த ஃபோர்டு நிறுவனம், வியப்புடன் நேர்காணலுக்கு அழைத்தது. அவனது பொறியியல் அறிவைக் கண்டு வேலையில் அமர்த்தியது.



கண்ணனைப் போலத்தான் கவிதாவும். பி.ஏ. கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப் படித்த கவிதா, இன்று தினசரிப் பத்திரிகையில் ஒரு வெற்றிகரமான நிருபர். கெமிஸ்ட்ரி பட்டம் பெற்ற ஜான்பீட்டர் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியொன்றில் பயிற்சி அதிகாரி, ஃபைன் ஆர்ட்ஸ் படித்த ஜைனு பேகமோ, கடன் அட்டை வாடிக்கையாளர்களிடமிருந்து

நிலுவைத் தொகையை வசூலிக்க மோட்டார் சைக்கிளில் மின்னலாய் வலம்வரும் ரெக்கவரி எக்ஸிக்யூட்டிவ். எப்படி முடிந்தது இவர்களால்? கிடைக்கும் வேலைக்குத் தகுந்த பொருத்தத்தை உணர்ந்து, அதற்குத் தகுந்த மாதிரி தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டதால் சாத்தியமானது. பொருத்தத்தைத் தரும் திறமைகள் என்று தனியே இருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது.

வேண்டும் வெற்றிகரமான பழக்கங்கள்!



உங்கள் பொருத்தத்தை நிர்ணயிப்பவை, வெற்றிகரமான பழக்க வழக்கங்கள். இவற்றை நல்ல பழக்க வழக்கங்களோடு போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். கடிதம் எழுதுவது, தொலைபேசி மூலம் தொடர்புகளை வளர்ப்பது, முக்கியமானவர்களைத் தெரிந்து வைத்துக் கொள்வது, நல்ல புத்தகங்களைத் தேடிப்படிப்பது, உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது, என்று பெரிய பட்டியலே போடலாம். இந்தப் பழக்க வழக்கங்களை நீங்கள் கடைப்பிடித்தால் தானாகவே உங்கள் ஆளுமை உயரும். நேர்காணலில் உங்கள் கூச்சம் போகும். தாழ்வு மனப்பான்மை தகர்ந்து போகும். நாகரிகமான உறுத்தாத உடை, உங்களின் உள்ளுணர்வில் உற்சாகத்தை நாள் முழுவது நிரப்பும்.

தலைவா வா!

இன்று ஒவ்வொரு நிறுவனமும், பொருத்தமான இளைஞனிடம் தேடுவது தலைமைத்துவம். லீடர்ஷிப். இப்போது சாதாரண மனிதனாக இவனை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் கழித்து, இவன் பொறுப்பேற்றுக் கொண்ட துறையை இவனால் தலைமையேற்று நிர்வகிக்க

முடியுமா? பிரச்னை வந்தால் தீர்க்கும் திறன் உண்டா? வேலைப் பளு அழுத்தும்போது மனச்சோர்வு வந்தால், தாங்கும் தகுதி இருக்கிறதா என்பதையெல்லாம் எடை போட்டு, பின் புடம் போட்டுத்தான் வேலைக்கு எடுப்பார்கள்.

தரமே வேலைக்குத் தளம்

ஓர் இளைஞனிடம் தலைமைப் பண்பு வந்துவிட்டது என்றால், அவனது எல்லா நடவடிக்கைகளிலும் தரம் வந்துவிடும். இங்கே தரம் என்பது இருவகை. ஒன்று நிறுவனத்தின் பாரம்பரியத் தரம். மற்றொன்று வேலை கோரும் இளைஞனின் தரம். வேலை கேட்பவன் தரமானவனாக இருந்தால்தான் நிறுவனத்தின் தரத்தை உணர முடியும். தரமான இளைஞனிடம் அறிவு, ஆற்றல், உணர்வு இவை மூன்றும் இணைந்து செயலாற்ற வேண்டும். அறிவும், ஆற்றலும் இருந்து, உணர்வு இல்லாதவனை நிறுவனம் தேர்வு செய்து விட்டால், அவன் நிறுவனத்திற்கு நம்பிக்கை துரோகியாக மாறிவிடலாம். டீம் உணர்வுடன் இவனால் பணியாற்ற இயலுமா என்பதை அறிய, வேலை கோருபவனின் ஈகோவின் எல்லையைக் கணக்கிடத் தயங்க மாட்டார்கள். எனவே நமது ஈகோவின் தன்மை எத்தகையது என்பதை அறிந்து, அதைக் கூட்டவோ, மட்டுப்படுத்தவோ தெரிந்திருக்க வேண்டும்.

பேசும் கலையில் நேசம்

அலுவலகம், தொழிலகம் என எத்தகைய பணியென்றாலும், தொண்ணூறு சதவிகிதப் பணிகள் நடப்பது கம்யூனிகேஷன் மூலம்தான். ஒரு நிறுவனப் பிரதிநிதிக்கு, தொடர்பு கொள்ளுதல் தான் முக்கியப்பணி. வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும் என்பது நம் முன்னோரின் அனுபவ மொழி. எனவே படிக்கும் போதோ, அல்லது பணியில் சேர்ந்த பிறகோ, கம்யூனிகேஷன் லேப், லாங்குவேஜ் லேப் போன்றவற்றில் பேசும் கலையைக் கற்றுக் கொள்ளுங்கள். கற்றுக் கொண்டதை அவ்வப்போது அலுவலகச் சூழலில் தயங்காமல் பயன்படுத்துங்கள்.





வேலையும் காதலும் வேறல்ல!

காட்டில் இரையைத் தேடி அலைந்த வேட்டை நாய், ஒரு முயலைப் பார்த்தது. அடுத்த கணம் அதைத் துரத்த ஆரம்பித்தது. ஆனால் முயல் பாய்ந்து சென்று ஒரு மரப் பொந்தில் ஒளிந்து கொண்டது. இரைத்தபடி ஓடி வந்த நாய், "ஏன் உன்னை என்னால் பிடிக்க முடியவில்லை?" என்று கேட்டது. முயல் சொன்னது "நீ உன் உணவுக்காக ஓடினாய். நான் எனது உயிருக்காக ஓடினேன்." நாய்க்கு தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் தற்காப்பு உணர்வு இல்லை. ஆனால் வேலை தேடுகிற ஒவ்வொரு இளைஞனுக்கும் இந்தத் தற்காப்பு உணர்வு மிக முக்கியம். இது இல்லாததால்தான், படித்து முடித்து, கல்லூரியைவிட்டு வெளியே வந்து, பிறகு மெள்ள வேலை தேடும் முயற்சியையே தொடங்குகிறார்கள்.

மனத்துக்குப் பிடித்த பெண்ணைச் சந்தித்துவிட்டால், அந்தக் கணமே அவளைக் காதலிக்கத் தொடங்கிவிடுகிறோம். அவளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கிறோம். சிரத்தை எடுக்கிறோம். இதே ஆர்வத்தை வேலை தேடுவதிலும் காட்டலாமே. படிக்கும்போதே வேலை தேடத் தொடங்கலாமே. குறைந்தபட்சம் இறுதி ஆண்டு படிக்கும்போது வேலைக்கு முயற்சிக்கலாம். அனுபவங்கள் கிடைக்கும். ஒரு மாணவன் குத்துச் சண்டை கற்றுக் கொள்ளச் சென்றான். முதல் நாள் வகுப்பிலேயே முகத்தில் காயம். சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்குப் போனவன், "குத்துச் சண்டையை

அஞ்சல் வழியில் கற்றுக் கொள்ள முடியுமா?" என்று கேட்டுக் கடிதம் எழுதினான். அனுபவப் பயிற்சி இல்லாமல் இது எப்படி சாத்தியம்? அப்ளிகேஷன் போடுவதற்குக்கூட கொஞ்சம் அனுபவப் படுங்கள்.

தேவை! விளம்பர வேகம்!

வேலைக்கு விண்ணப்பிக்கும் பொழுது, பயோடேட்டா ஒரு சம்பிரதாயச் சடங்கல்ல. குளியல் சோப்புக்கு எப்படி விளம்பரம் செய்யப்படுகிறது என்பதை அறிவோம். ஒரு சோப்பைவிடக் குறைந்தவர்கள் அல்ல நாம். ஒவ்வொரு பயோடேட்டாவும் ஒரு சக்திமிக்க விளம்பரம் போல் இருக்க வேண்டும். ஏன் இந்தக் கம்பெனியில் வேலை தேடுகிறேன். வேலை கொடுத்தால் பிரத்தியேகமாக என்னால் என்ன செய்ய முடியும் என்பதையெல்லாம் கூட குறிப்பிடலாம்.

பயோடேட்டாவை அனுப்பிவிட்டு, அழைப்பு வரும் என்று காத்திருக்காமல், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அலுவலகத்திற்குச் சென்று அங்கே பணிபுரியும் மனித வள நிர்வாகியைச் சந்தித்து, ஒரு ஹலோ சொல்லிவிட்டு வரலாம். ''இண்டர்வியூ அனுப்பும் முன்பே வந்துவிட்டானே'' என்று உங்கள் ஆர்வம், அவர்களது மனத்தில் உங்களைத் தனித்துப் பதிய வைக்கும். இது போன்ற முன் முயற்சிகள் நேர்காணலின்போது சகஜமான மனநிலையோடு இருக்க வழிவகுக்கும்.

தேடல் மிக்க திமிங்கிலம்!

ஒரு குட்டிமீன், திமிங்கிலத்தைப் பார்த்து ''சமுத்திரம் என்கிறார்களே, அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டது. ''எனக்குத் தெரியாது, நான் தண்ணீரில் இருக்கிறேன்'' என்றது திமிங்கிலம். நம்மிடம், பலம், தகுதி, திறமை இருந்தும், திமிங்கிலம்போல தேடல் இல்லாமல் இருப்பது, நமது இளமையைப் போக்கி விடும். பரந்து விரிந்த சமுத்திரம்போல் இங்கே வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேடல் மிக்க திமிங்கிலமாக





* கரியர் டெவலப்மெண்ட் ஃபவுண்டேஷன் ஆஃப் இந்தியா - டீம்

விழிப்புணர்வு கொள்வதுதான். என்னிடம் தகுதி இருக்கிறது, ஆனால் திறமையை எப்படி வளர்த்துக் கொள்வது என்று நினைக்கிறீர்களா? எஸ்.எஸ்.எல்.சி., ப்ளஸ் டூ அல்லது கல்லூரி எந்த இடத்தில் நின்று கொண்டு திசைகாட்டியை நீங்கள் தேடினாலும், உங்களுக்கு வழிகாட்டத் தயாராக இருக்கிறது சி.டி.எஃப்.ஐ. ஆளுமை பயிற்சிகள், ஆலோசனைப் பட்டறைகள் என விடுமுறை நாட்களின்றி, வருடம் முழுவதும் இலவசப் பயிற்சிகளில் பங்கேற்று, உங்களைப் பொருத்தமானவர்களாக மாற்றிக் கொள்ளுங்கள்.

தொகுப்பு : **ஜெயந்தன்**

அருணாசலத்தின் அலுவல்

- அமரர் கல்கி

இந்தப் பரந்த பூமண்டலத்திலே தற்போது தனி மனிதர்கள் முதல் அரசாங்கங்கள் வரையில் எல்லாரையும் திக்குமுக்காடச் செய்துவரும் பெரிய பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டம் அல்லவா? நமது தேசத்திலும் இதுதான் பெரிய திண்டாட்டமாக இருக்கிறது. காந்தி மகான் முதல், நவ நாகரிகத்திற் சிறந்த ஸர் எம்.விஸ்வேஸ்வரையா வரையில் இந்தியப் பிரமுகர்கள் அநேகர் இந்தப் பிரச்னையைப் பற்றிச் சிந்தித்து. இதைத் தீர்த்து வைக்க வழி தேடுகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்திலும்,

மினி கல்கி



மத்திய வகுப்பார், அதாவது படித்த ஜனங்களுடைய திண்டாட்டந்தான் மிகக் கொடியது. ஏழைக் குடியானவர்கள், தொழிலாளிகள் முதலியவர்களின் திண்டாட்டம் அவ்வளவு பெரியதல்ல; ஏனென்றால் அவர்களுக்குப் பட்டினி கிடக்கும் வித்தை நன்றாய்த் தெரியவரும். 'சித்திரமும் கைப் பழக்கம்' அல்லவா? பட்டினியும், வயிற்றுப் பழக்கந்தான். ஒரு நாளைக்கு ஒரே வேளை அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு விட்டுச் சந்தோஷமாய்க் காலங்கழிக்கக் கிராமத்துக் குடியானவர்களுக்குத் தெரியும். இத்தகைய மனப்பான்மைதான் தேச முன்னேற்றத்திற்கே தடையாயிருக்கிறதென்பது சிலர் கொள்கை. பட்டணங்களில் உள்ள படித்த ஜனங்களின் விஷயம் இப்படியல்ல. ஒரு வேளைக் காப்பி கிடைக்காவிட்டால் போதும்; அவர்களுடைய வாழ்க்கை சோகமயமாகிவிடுகிறது.

இந்த வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து விடுதலையடைய, அநேகர் அநேக வழிகளில் முயற்சி செய்கிறார்கள். இவைகளில் சர்வ சாதாரணமாக 100க்கு 90 பேர் முயன்று பார்க்கும் வழி ஒன்று இருக்கிறது. அதுதான் பத்திரிகைக்கு எழுதுவது. தினசரிப் பத்திரிகையில் ஒரு விசேஷக் கட்டுரையைப் படிப்பார்கள்; அல்லது மாதப் பத்திரிகையில் ஒரு சிறுகதையை வாசிப்பார்கள். "என்ன பிரமாதம்? இதைப் போல் நாம் ஒன்று எழுதக் கூடாதா?" என்று தோன்றும். உடனே பத்திரிகைத் தொழிலில் பெர்னார்ட்ஷாவையும் செஸ்டர்ட்டனையும் போல் பணம் சம்பாதிப்பதாகப் பகற் கனவுகள்!

"என்ன எழுதுவது?" என்பது அவர்கள் மனத்தில் தோன்றும் அடுத்த கேள்வி. "என்ன எழுதுவது?" என்பதையே தலைப்பாகப் போட்டுக் கொண்டு சிலர் எழுதத் தொடங்குவார்கள். "ஒன்றுமில்லை" என்ற தலைப்புடன் ஒரு வெள்ளைக்காரர் பெரிய புத்தகம் ஒன்று எழுதி விட வில்லையா? வேறு சிலர் வேலையில்லாத் திண்டாட்டத்தையே விஷயமாகக் கொண்டு, "உத்தியோக வேட்டை" என்பது போன்ற தலைப்புக்களுடன், கட்டுரையோ, கதையோ எழுதுவார்கள். தங்களுடைய சொந்த அனுபவங்களுடன் கொஞ்சம் கைச்சரக்கும் சேர்த்தால், நல்ல கதையாகிவிடுமென்று நம்பிக்கை.

அமரன் கல்கியின் 'அருணாசலத்தின் அலுவல்' சிறுகதையிலிருந்து...



கதையை முழுமையாய்ப் படிக்க www.kalkionline.com பார்க்கவும்.



இணைக்கத் தெரிந்த மனமே...

பேராசிரியர் ப. இராம்கோபால்

மனித மூளை மாபெரும் இணைப்பகம்! தனக்கு வரும் தகவல்களை ஒன்றுடன் ஒன்றாக இணைத்து, அவற்றை சீரான வடிவமாக - Pattern ஆக மாற்றும் ஒப்பற்ற திறமை அதற்கு உண்டு. ஆனால் இந்தத் திறனை நாம் பயன்படுத்துவதே இல்லை.

மூளையின் இந்த இணைக்கும் திறன் சரியாகப் பயன்படுத்தப்படுமானால், நமது நினைவாற்றல் பன்மடங்கு அதிகரிக்கும். நினைவாற்றல் என்றாலே இணைக்கும் திறன் தான் என்றும், கற்றலில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும் சொல்கிறார் டோனி பூஷான்.

மூளையின் இந்த இணைக்கும் திறன் இரு வகைப்படும்.

1. ஒரு பாடத்தைப் படிக்கும்போது, அதிலுள்ள பல்வேறு தகவல்களை ஆராய்ந்து, அவற்றைத் தக்க வகையில் இணைப்பது. இதற்கு linking என்று பெயர். சற்று விளக்கமாகச் சொல்கிறேன். உங்கள் அம்மா, அப்பா, தங்கை, அண்ணன் மற்றும் நீங்கள்- உங்களுக்கிடையேயுள்ள 'உறவு' பற்றி எண்ணும்போது, நீங்கள் செய்வது, linking. இதைத் தமிழில் 'இணைத்தல்' என்று சொல்லலாம்.

2. உங்கள் வீட்டில் புதியதாக ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. ஒரு வயதான பாட்டி, குழந்தையைப் பார்த்துவிட்டு, "அட! பயல் நம்ம ராமகப்புவை அப்படியே கொண்டிருக்கிறானே - ஆனா ஒண்ணு... ராமகப்பு நல்ல சிவப்பு, இவன் கொஞ்சம் மாநிறம்!" என்கிறாள் பாட்டி.

இப்போது பாட்டி என்ன செய்கிறாள்? (அதாவது பாட்டியின் மூளை என்ன செய்கிறது?) அவள் தனக்கு இப்போதுதான் தெரிந்த புதிய தகவல்களை (புதிதாகப் பிறந்த குழந்தையின் உருவ அமைப்பை) முன்பே தெரிந்து தன் மூளையில் ஒரு பக்கம் 'சேமித்து' வைக்கப்பட்டிருக்கும் பழைய தகவல்களுடன் (ராமகப்புவின் உருவ அமைப்பை) தொடர்பு படுத்துகிறாள். இதற்குத் தொடர்பு படுத்துதல் (associating) என்று பெயர்.

இப்போது 'இணைத்தலை' எப்படிச் செய்வதென்று பார்ப்போம்:

ஒரு பாடத்தைப் படிக்கும்போது, அதிலுள்ள முக்கியமான விஷயங்களை அடிக்கோடிடுங்கள். அடுத்ததாக இந்த விஷயங்களைச் சொல்லும் / குறிக்கும் முக்கியமான சொற்களை (key words) 'பளிச்'சென்று தெரியும்படி box செய்யுங்கள். இனி இந்தச் சொற்களைத் தனியாக ஒரு தாளில் எழுதுங்கள். நீங்கள் அடுத்துச் செய்ய வேண்டியது இணைத்தல். இதை நீங்கள் இரண்டு விதமாகச் செய்யலாம்:

1. Box செய்யப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு, ஒரு வாக்கியத்தை உருவாக்குவது, அல்லது

2. Box செய்யப்பட்

டுள்ள சொற்களில் முக்கிய எழுத்துகளைக் கொண்டு (ஒவ்வொரு சொல்லுக்கும் ஒன்று அல்லது இரண்டு எழுத்துகளை இதற்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்) ஒரு சொல்லை உருவாக்குவது.

உதாரணமாக பூமியைப் பற்றிய ஒரு பாடத்தைப் பார்ப்போம்:

நமது சூரிய மண்டலத்தில் உலா வரும் கோள்களின் இயக்கம் பற்றிய சரித்திரம் சுவையானது. முதலில் **பூமி**யை மையமாக வைத்தே மற்றக் கோள்கள் சுற்றி வருகின்றன என்ற கருத்து நிலவியது. இதை முதன் முதலில் சொன்னவர் தாலமி. பல நூற்றாண்டுகள் **தாலமி**யின் கருத்தில் தவறேதுமில்லை என்றே மனிதன் நம்பி வந்தான். பின்பு, **கோபர்னிகஸ்** என்ற அறிஞர், தாலமியின் கருத்து தவறென்றும், **சூரி**யனை மையமாக வைத்தே, பூமி முதலிய மற்றக் கோள்கள் சுற்றி வருகின்றன என்றும் சொன்னார். அதற்காக அவருக்குக் கிடைத்த பரிசு: அடி.. உதை..

இந்தப் பாடத்தைப் படிக்கும்போது எல்லாம் தெளிவாக விளங்குவது போல் தோன்றும். ஆனால், தேர்வறையில் யார் எதைச் சொன்னார் என்ற குழப்பம் வந்து, மனத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்து கொள்ளும். இந்தக் குழப்பம் வராமலிருக்க என்ன வழி?

'பாக்ஸ்' செய்யப்பட்ட சொற்களை ஆராயுங்கள். 'தாலமி' என்ற சொல்லும், 'பூமி' என்ற சொல்லும் ஒரே எழுத்தில் முடிகின்றன, எனவே

பூமி = தாலமி - இது இணைப்பு மூலம் நினைவு வைத்துக் கொள்ளும் முறை.

அடுத்ததாக 'கோபர்னிகஸ்', 'சூரியன்' என்ற சொற்களின் முதல் எழுத்தை இணையுங்கள். 'கோசு' என்ற சொல் கிடைக்கும். அடுத்தபடியாக, சூரியனை ஒரு பிரம்மாண்டமான ஒளிரும் முட்டைக்கோசாகவும், அதை நீங்கள் 'லபக் லபக்'கென்று கடித்து, சுவைத்துச் சாப்பிடுவது போலவும் (இதைச் செய்யும் போது வாயில் உண்மையிலேயே 'ஸ்' என்ற ஒலி வரவேண்டும் / எச்சில் ஊற வேண்டும்) கற்பனை செய்து கொள்ளுங்கள் (காட்சிப்படுத்துங்கள்! ஏனெனில், ஒரு புதிய விஷயத்தைக் கற்றுக் கொள்ளும்பொழுது, மூளைக்குச் செலுத்தும்போது, நாம எந்த அளவுக்கு ஐம்புலன்களையும் பயன்படுத்துகிறோமா, அந்த அளவுக்கு அந்த விஷயம் மனத்தில் ஆழமாகப் பதியும். எனவே பாடங்களைப் படிக்காதீர்கள்; சுவையுங்கள்!) இணைத்த எழுத்துகளை (கோ+சூ) ஏற்கெனவே தெரிந்த வேறொரு சொல் (கோசு) லுடன் தொடர்புபடுத்தி, ஞாபகம் வைத்துக் கொள்ளும் முறை.

இந்த இணைத்தலைச் செய்யும்போது, தகவல்களை அலசியது உங்கள் இடது பக்க மூளை. அவற்றை இணைத்தது உங்கள் வலது பக்க மூளை. ஆக, நீங்கள் உங்கள் மூளையின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தியுள்ளீர்கள்!

உதாரணம் 2 : இணைத்தல் டெக்னிக்கைப் பயன்படுத்தி, எண்களையும் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளலாம். என்னுடைய தொலைபேசி எண்: 327167. இதை எளிதாக ஞாபகம் வைத்துக் கொள்ள, இந்த எண்ணை 327 மற்றும் 167 என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.

பகுதி 1 : 327 பகுதி 2: 167

இனி, இரண்டு பகுதி எண்களுக்குமிடையேயுள்ள தொடர்பை ஆராயுங்கள். அவை:

1. இரண்டு பகுதியின் கடைசி எண்களும் '7'ல் முடிகின்றன.

2. முதல் பகுதியிலுள்ள முதல் இரு எண்கள் 32. இரண்டாம் பகுதியில் உள்ள முதலிரண்டு எண்கள் அந்த முப்பத்திரண்டில் சரிபாதி - அதாவது 16!

ஆக, இந்த ஆறு இலக்கங்கள் கொண்ட எண்ணை நினைவில் வைத்துக் கொள்ள, முதல் பகுதியிலுள்ள மூன்று எண்களை மட்டும் ஞாபகம் வைத்துக் கொண்டால் போதும்! இவ்வாறு செய்யும்போது, இடது பக்க மூளையின் ஆராயும் திறன், பட்டை தீட்டப்படுகிறது. கணிதமேதை இராமானுஜம் இப்படி எண்களுக்கிடையேயுள்ள தொடர்புகளை ஆராய்வதில் வல்லவர்.

(தொடரும்)

“அம்மா கட்சியின் தீவிர தொண்டர்கள் நம்ம ஹோட்டலுக்குத்தான் சாப்பிட வராங்க...”

“இரட்டை இலைகளைப் போட்டு தயாரா வைச்சிருக்கிறதிலிருந்தே தெரியுதே...!” - எஸ். மோகன்



கோடி கோடி

ராஜேஷ்குமார்

"அர்ச்சனா...!"

அறைக்கு வெளியே அம்மாவின் குரல் மெதுவாய்க் கேட்டது.

"என்னம்மா...?"

"உன்னைப் பார்க்க யாரோ ரெண்டு பேர் வந்திருக்காங்க..."

"யாரும்மா...?" அர்ச்சனா கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள். அம்மா கிசுகிசுத்தாள்.

"பேரு ரேணுகாதேவியாம்... அந்தம்மா கூட இன்னொருத்தரும் வந்திருக்கார். டி.வி. சீரியல் எடுக்கிறவங்களாம்."

"டி.வி. சீரியல் எடுக்கிறவங்களுக்கு இந்த வீட்ல என்ன வேலை...?" தனக்குள் கேள்வியை எழுப்பிக் கொண்டு கூடத்துக்குப் போனாள் அர்ச்சனா.

நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த ரேணுகாதேவியும், முல்லை வாசனும் புன்னகை செய்தார்கள்.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும்... என் பேர் ரேணுகாதேவி. டி.வி. சீரியல் தயாரிப்பாளர். இவர் சீரியல் டைரக்டர் முல்லை வாசன். நீங்கதானே அர்ச்சனா...?"

"ஆமா..."

"உங்ககிட்டே ஒரு ஐந்து நிமிஷம் பேசணும்."

அர்ச்சனா அவர்களுக்கு முன்னால் குழப்பத்துடன் உட்கார்ந்தாள்.

"என்ன விஷயம்...?"

ரேணுகாதேவி சில விநாடிகள் தயங்கி விட்டு, மெல்லிய குரலில் கேட்டாள்.

"உங்க ஃப்ரண்ட் வைகை இப்போ எங்கேயிருக்காங்கன்னு சொல்ல முடியுமா...?"

அர்ச்சனாவின் புருவங்கள் உயர்ந்தன.

"எதுக்காக வைகையைப் பத்தி கேட்கறீங்க...?"

"ரெண்டு வருஷத்துக்கு முந்தின ஒரு பழைய டயரி கிடைச்சது. ஒரு பழைய புத்தகக் கடையில் எதேச்சையா கிடைச்ச அந்த டயரியைப் படிச்சுப் பார்த்த போது, அந்த டயரியில் வைகையின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் இருந்தது. உங்க பேரும் அதுல இருந்தது. டயரியில் எழுதப்பட்டிருந்த சம்பவங்கள் என்னையும் டைரக்டரையும் ரொம்பவும் பாதிச்சதாலே, வைகையையும் உங்களையும் மீட் பண்றதுக்காக, ஹன்ஸா ஹாஸ்பிடலுக்குப் போனோம். விசாரிச்சோம். நீங்க ரெண்டு பேருமே இப்போ அந்த ஹாஸ்பிடலில் வேலை பார்க்கலைன்னு சொன்னாங்க. வைகையோட வீட்டு அட்ரஸைக் கேட்டோம். வைகை பழைய அட்ரஸ்ல இல்லைன்னு சொல்லிட்டாங்க. புது அட்ரஸ் தெரியாததால, உங்ககிட்டே வந்தோம்."

"அந்த டயரி இப்போ உங்ககிட்டே இருக்கா...?"

"ஆமா."

"கொடுங்க... பார்க்கலாம்."

டைரக்டர் முல்லைவாசன் தன் ப்ரீஃப் கேஸைத் திறந்து, உள்ளேயிருந்த டயரியை எடுத்துக் கொடுக்க, அர்ச்சனா அதை வாங்கிக் கொண்டே கேட்டாள்.

"இது யாரோட டயரின்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியாது."

"இது என்னோட டயரி... கடந்த இரண்டு வாரகாலமா இதை நான் தேடிக்கிட்டு இருக்கேன். பழைய வார இதழ்களையும் பேப்பர்களையும் எடைக்குப் போடும்போது, அம்மா இதையும் சேர்த்துப் போட்டிருப்பாங்கன்னு நினைக்கிறேன். என்னோட அம்மாவுக்கு ரெண்டு கண்ணிலேயும் காடராக்ட் ஆபரேஷன் பண்ற வரைக்கும் இப்படிப்பட்ட குளறுபடிகள் எல்லாம் நடக்கும்."

ரேணுகாதேவி கேட்டாள், "இந்த டயரியில் உள்ள சம்பவங்கள் எல்லாம் நீங்க எழுதினதா அர்ச்சனா...?"

"ஆமா...! எனக்கு வைகையோட அணுகுமுறைகளும், அவளுடைய துணிச்சலான நடவடிக்கைகளும் ரொம்பவும் பிடிக்கும். அதனால தினசரி ராத்திரி படுக்கப் போகும்போது, வைகை சம்பந்தப்பட்ட சம்பவங்களை ஒரு கதை மாதிரி டயரியில் எழுதி வெச்சுடுவேன்... அதுல எனக்கு ஒரு சந்தோஷம் கிடைச்சுது. ஆனா இளஞ்

செழியன் எதிர்பாராதவிதமா இறந்த பின்னாடி நான் டயரி எழுதறதை விட்டுட்டேன்... டயரி எப்படியோ பழைய புத்தகங்களோடு கலந்து எடைக்குப் போயிடுச்சு..."

''வைகை இப்போ எங்கேயிருக்காங்கன்னு சொல்ல முடியுமா அர்ச்சனா...?"

"நீங்க வைகையை எதுக்காகப் பார்க்க விரும்பறீங்க?"

''அந்தப் பொண்ணோட வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை

மின்னல்கள்

12



ஒரு டீ.வி. சீரியலா பண்ணலாம்னு எண்ணம். பிரச்னைகளை அஹிம்ஸா முறையில் ஃபேஸ் பண்ணி வைகை ஜெயிச்சிருக்காங்க. அதையேதான் சின்னத்திரையில் காட்டப் போறோம். டீ.வி. சீரியலுக்குத் தலைப்பு கூட வெச்சுட்டோம். 'கண்ணிலே நீர் எதற்கு?' வைகையே அந்த கேரக்டர்ல நடிச்சாலும் எங்களுக்குச் சந்தோஷம்தான்."

"வைகை இப்போ படப்பையில் இருக்கா... அங்கே ஓர் உடல் ஊனமுற்றோர் பள்ளிக்கூடம் இருக்கு. அதுல டீச்சரா வேலை பார்க்கிறா. அப்பாவும் அம்மாவும் கூட இருக்காங்க..."

"ஹாஸ்பிடல் வேலையை ஏன் விட்டாங்க...?"

"இளஞ்செழியன் இறந்த பிறகு வைகையால ஒரு நிதானமான வாழ்க்கையை லீட் பண்ண முடியலை... ஹாஸ்பிடலின் அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் நிறைய 'ஏரர்ஸ்' வந்தது. ஸோ, ராஜினாமா எழுதிக் கொடுத்துட்டா. சொஸைட்டி ஃபார் கேரிங் அண்ட் ஷேரிங் நடத்திட்டுவந்த பிரஸிடெண்ட் வாணி சுப்ரமணியன், ஆஸ்திரேலியாவுக்குப் போய் மகனோடு செட்டிலாகிவிட, வைகை வேறு வழியில்லாமல் படப்பையில் இருக்கும் உடல் ஊனமுற்றோர் பள்ளியில் ஆசிரியை வேலைக்கு மனு போட்டா. வைகைக்கு 'மஹினா உன்னதி' அவார்ட் கிடைச்சிருந்ததால, அந்தப் பள்ளியில் சுலபமா வேலை கிடைச்சுது."

முல்லைவாசன் குறுக்கிட்டுக் கேட்டார். "மஹினா உன்னதி அவார்ட்டுக்கு பத்து லட்ச ரூபாய் பரிசுப் பணம் கிடைச்சிருக்குமே?"

"கிடைச்சுது... அந்தப் பணத்தை வெச்சுத்தான் யமுனா, துங்கபத்ரா ரெண்டு பேருக்கும் நல்ல இடங்களில் மாப்பிள்ளைகள் பார்த்து கல்யாணத்தைப் பண்ணி வெச்சா. யமுனா இப்போ தன் புருஷனோடு ஷார்ஜாவிலும், துங்கபத்ரா தன் புருஷனோடு மலேஷியாவிலும் சந்தோஷமா வாழ்க்கை நடத்திக்கிட்டு இருக்காங்க. யமுனாவுக்குச் சமீபத்துல வளைகாப்புகூட நடந்தது."

"வைகைக்கு கல்யாணம்...?"

"வேண்டாம்னு சொல்றா."

"இளஞ்செழியனையே நினைச்சுட்டிருக்காளா...?"

"அது மாதிரியும் தெரியலை... ஆரம்ப நாட்களில் இருந்த பாதிப்பு இப்போ இல்லை... ரெண்டு மாசத்துக்கு முந்தி ஒரு நாள் அவளை சந்திச்சு நான் பேசிட்டிருந்த போது, இளஞ்செழியனைப் பத்தின பேச்சு வந்தது. அப்போ அவ படு காஷுவலா... 'அவருக்கு முன்னாடி பஸ் கிடைச்சுது... போயிட்டார். நாம பஸ்ஸுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கோம், அவ்வளவுதான்' என்றாள்.

"ஸோ.. இளஞ்செழியனை மறந்துட்டா.."

"அநேகமாய்..."

"நீங்க அவளைக் கடைசியாய் என்னிக்குப் பார்த்தீங்க?"

"ரெண்டு மாசத்துக்கு முந்தி பார்த்தது தான்."

"படப்பையில் வைகைக்கு எங்கே வீடு...?"

"அரசு உடல் ஊனமுற்றோர் பள்ளிக் கூடத்துக்கு எதிரிலேயே வீடு.. நீங்க அவளை எப்போ பார்க்கப் போறீங்க...?"

"இப்பவே...!"

அவர்கள் எழுந்து கொண்டார்கள்.

படப்பை.

அரசு உடல் ஊனமுற்றோர் பள்ளிக்கு எதிரில், ஒரு ஒற்றையடிப்பாதை பனை மரங்களுக்கு மத்தியில் போக, அதன் முடிவில் ஓர் ஓட்டு வீடு தெரிய, அதன் முன்பாய் நின்றார்கள் ரேணுகாதேவியும் முல்லைவாசனும்.

"இந்த வீடுதான்னு நினைக்கிறேன்.."

கிணற்றடியில் துணி துவைத்துக் கொண்டிருந்த உமையாளும், தென்னை மரத்துக்கு கற்றாழைகளை வெட்டி உரமாய்ப் போட்டுக் கொண்டிருந்த சீனிவாசனும், தத்தம் கைவேலைகளை விட்டுவிட்டு எழுந்து வந்தார்கள்.

"யார் வேணுங்க...?"

"இங்கே வைகைன்னு..."

"எங்க பொண்ணுதான்..."

"பார்க்கணுமே..."

"உள்ளே வாங்க..." சீனிவாசன் வேலிப்

படலைத் திறந்து வைக்க ரேணுகாதேவியும் முல்லைவாசனும் உள்ளே வந்தார்கள்.

"நீங்க...?"

"சென்னையிலிருந்து வர்றோம்... டீ.வி. பீப்பிள்..."

"வாங்க..." வீட்டுக்குள்ளே சீனிவாசன் கூட்டிப் போனார்.

நாற்காலியொன்றில் ஒரு நான்கு வயதுச் சிறுமியை உட்கார வைத்து, அவளுடைய மெலிந்து போன கறுத்த கால்களுக்கு எண்ணெய் போட்டுத் தேய்த்துக் கொண்டிருந்த வைகை திரும்பினாள்.

சீனிவாசன் சொன்னார். "அம்மா... வைகை, இவங்க டீ.வி. பீப்பிள். சென்னையிலிருந்து உன்னைப் பார்க்கிறதுக்காக வந்திருக்காங்க..."

வைகை எண்ணெய் பூசிய கைகளோடு அவர்களை ஏறிட்டாள்.

"ஒரு ஃபைவ் மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க... வந்துடறேன்."

"மெதுவா வாம்மா.... அவசரமில்லை..."

ரேணுகாதேவியும் முல்லைவாசனும் சீனிவாசன் விரித்துப் போட்ட நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். முல்லைவாசன் கிசுகிசுத்தார். "நாம எதிர் பார்த்ததைவிட, பொண்ணு லட்சணமாவே இருக்கா... ஹோம்லி ஃபேஸ். காமிராவோட எல்லா கோணத்துக்கும் எடுபடும்..."

"கண்களைப் பார்த்தீங்களா...? பேனா எடுத்து நாலு வரி கவிதை எழுதணும் போலிருக்கு..."

வைகை அந்தக் குழந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். "நல்லா எண்ணெய் போட்டு விட்டிருக்கேன். நான் சொல்ற வரைக்கும் நாற்காலியை விட்டு இறங்கக் கூடாது. மூச்சா வந்தா என்கிட்டே சொல்லணும். என்ன தெரியுதா...?"

குழந்தை தலையாட்ட, வைகை எண்ணெய்க் கையை டவலால் துடைத்துக் கொண்டே அவர்களுக்கு முன்பாய் இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தாள்.



"சொல்லுங்க... என்ன விஷயம்...?"

தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட ரேணுகா தேவி, அர்ச்சனாவின் டயரியைப் படித்த விவரத்தைச் சொல்லி முடிக்க, வைகை புன்னகை செய்தாள்.

"ஸோ...! இந்த நிமிஷம் என்னைப்பற்றின எல்லா விபரங்களும் உங்களுக்குத் தெரியும்...?"

"ஆமா..."

"சரி... இப்ப எதுக்காக என்னைப் பார்க்க வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"உங்க வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மையமா வைச்சு, 'கண்ணிலே நீர் எதற்கு...?' என்கிற தலைப்பில் ஒரு சீரியல் பண்ணலாம்னு இருக்கேன். ஏற்கெனவே நாலைந்து ஹிட் சீரியல் கொடுத்திருக்கேன். இப்போ வீனஸ் டீ.வி.யில் வந்துட்டிருக்கிற 'ஜான்ஸிராணி 2004' என்னோட தயாரிப்புதான்... பெண்களிடம் இந்த சீரியலுக்கு ஏகப்பட்ட வரவேற்பு."

"ஸாரி...! டீ.வி. சீரியல்களைப் பார்க்க எனக்கு நேரம் இல்லை...! என்னோட வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை வெச்சு, சீரியல் தயாரிக்கக் கூடிய அளவுக்கு அதுல ஒண்ணுமேயில்லை..."

முல்லைவாசன் குறுக்கிட்டார்.

"என்னம்மா அப்படி சொல்லிட்டீங்க...? நீங்க வாழ்ந்த வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருந்த காரணத்தாலதான், உங்களுக்கு 'மஹிளா உன்னதி' அவார்ட் கொடுத்தாங்க. அவார்ட் சும்மா வந்துடுமா என்ன?"

"டீ.வி. சீரியல்ங்கிறது ஒரு பொழுது போக்கு அம்சம். அதுல கொண்டு போய் என்னைத் திணிக்காதீங்க..."

ரேணுகாதேவி புன்னகை செய்தாள். "நான் மற்ற டீ.வி. சீரியல் தயாரிப்பாளர்களிடமிருந்து மாறுபட்டவள். இல்லேன்னா உங்களைத் தேடிக்கிட்டு இந்த படப்பைக்கு வந்திருக்க மாட்டேன். நீங்க சரின்னு சொன்னா நாளைக்கே ஸ்டூடியோவில் பூஜை. நீங்க வைகையாகவே நடிக்கப் போறீங்க. ஒரு நாளைக்கு உங்க சம்பளம் இருபத்தைந்தாயிரம் ரூபாய். காலையில் பத்து மணிக்கு ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்துட்டு, சாயந்திரம் ஆறு மணிக்கு வீட்டுக்குப் போயிடலாம். மொத்தம் முந்நூறு எபிசோட். சீரியல் பிக்கப் ஆயிட்டா, ஒரு நாளைக்கு உங்க சம்பளம் ஐம்பதாயிரம் ரூபாய். என்ன சொல்றீங்க வைகை...?"

"கெட் அவுட்..." என்றாள் வைகை.

(தொடரும்)



ஐயோ-டேட்டா!

மயிலாப்பூர் சந்திரன்!

தலைவர்	:	டாக்டர் ராமதாஸ் சமீப காலமாக சின்ன ஐயா அன்புமணி
கட்சியில் களப்பணி	:	வன்னியர் சங்கக் காலத்திலிருந்தே உறுப்பினர். 149வது வட்டச் செயலாளராக இரண்டு வருடங்கள்.
தொழில்	:	வெல்டர்
வருமானம்	:	தினக்கூலி 150 ரூபாய்
குடும்பம்	:	மனைவி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள், வாடகை வீடு.
கட்சிக்காக காயங்கள்	:	தடா சட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் 15 நாட்கள் சிறைவாசம். 'அய்யா' நடத்திய அத்தனை போராட்டங்களிலும் கலந்து கொண்டதுண்டு. போஸ்டர் ஒட்டும்போது மாற்றுக் கட்சிக்காரர்களால் முதுகில் வெட்டப்பட்டு ரத்தம் சிந்தியதுண்டு.
அரசியல் எதிர்பார்ப்பு	:	எந்த எதிர்பார்ப்பும் இல்லை. கடைசி வரை அய்யாவின் தொண்டனாக இருக்கணும். அவரால்தான் சமுதாயம் வளரும்.
இப்போதைய கவலை	:	வளர்ந்துவிட்ட மகன்களுக்கு வேலை கிடைக்கவில்லை. உடனடியாக ஒரு மகளுக்கு திருமணம் செய்தாக வேண்டும்.
நிரந்தத் தொல்லை	:	கட்சிப் பணிகளுக்காக வாங்கற கடன்தான். அய்யா மாநாடு நடத்தினா போகாம இருக்க முடியுமா? வேன் செலவு, சாப்பாடு என்று நிறைய ஆகிவிடும். இந்தத் தேர்தலுக்கு சுவர் பிடித்து பிரசாரம் செய்த வகையில் கொஞ்சம் கடன்.
பிடித்த பழம்	:	மாம்பழம்தாங்க! குழந்தைகள் ஆசைப்பட்டாலும் பல சந்தர்ப்பங்களில் வாங்க வசதியில்லாத நிலை.
லட்சியம்	:	பட்டினி கிடந்தாலும் கட்சிக்காக உழைப்பது.

சந்திப்பு: கௌசி
படம்: ராஜன்



* சதீஷ்





* சிகிச்சைக்கு முன்

* சிகிச்சைக்குப் பின்

மூட்டு மாற்றலாம் வாங்க!

பொதுவாக சென்னை போன்ற பெரிய நகரங்களிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் வாழ்கிறவர்களுக்கு, மிகச் சிறப்பான மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க வாய்ப்புகள் அதிகம். உலகத்தின் அத்தனைச் சிறப்பான மருத்துவ சிகிச்சைகளும் இப்போது குறைவில்லாமல் சென்னையில் கிடைக்கின்றன.

ஆனால் தென் தமிழகத்தின் உள்ளடங்கிய பகுதிகளுக்குச் செல்ல ஆரம்பித்தால், இத்தனை வசதிகள் கிடைப்பதில்லை. மக்கள் சிரமப் பட்டு பல கிலோ மீட்டர்கள் பயணம் செய்து, தங்களுக்கு அருகில் உள்ள பெரு நகரங்களை அடைந்தாலும், போதிய சிகிச்சை கிடைக்காமல் தடுமாறுகிறார்கள். அவர்களுக்கு சென்னைக்கு வந்து செல்வது என்பதும், தங்கி சிகிச்சை பெறுவதும், பெரிய கனவுபோல இருக்கும்.

சென்னையைத் தவிர மற்ற பெரிய நகரங்களுக்கு ஏதாவதொரு காரணமாகச் செல்லும் போதெல்லாம், இந்தக் கேள்வி எனக்குள் இருந்து கொண்டே இருக்கும்.

சமீபத்தில் மதுரைக்குச் செல்ல நேர்ந்தது. அங்கொரு கருத்தரங்கில் டாக்டர் சதிஷை சந்தித்தேன். டாக்டர் சதீஷ் தேவதாஸ், மதுரையில் பயிற்சி செய்கிற எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர். பேச்சுக்கிடையில் என் கேள்வியை அவரிடம் கேட்டபோது, சிரித்துக் கொண்டே பதிலளித்தார், "நீங்கள் கேட்பது சரிதான். ஆனால் இப்போது மதுரை, கோயமுத்தூர் போன்ற நகரங்களில் சென்னைக்கு நிகரான சிகிச்சை கிடைக்கிறது. நாங்கள், 'யுனி கம்பார்ட் மென்டல் னீ ரீப்ளேஸ்மென்ட்' சிகிச்சை உட்பட பல புதிய அறுவை சிகிச்சைகளை இங்கேயே செய்கிறோம்..." என்றார்.

மூட்டுகள் தேய்ந்து அதனால் வலி உண்டாகி அவதிப்படுவது, இப்போது நடுத்தர வயதினரிடமும், வயது முதிர்ந்தோரிடமும் அதிகமாக இருக்கிறது.

இந்த மூட்டுகள் தேய்வு பொதுவாக இந்திய மக்களிடம்தான் அதிகமாக இருக்கிறது. அதிலும் தமிழ்நாட்டில் மிக அதிகம். காரணம், நாம் அடிக்கடி தரையில் உட்காருகிற பழக்கம் உடையவர்கள். தவிர, கால் குத்த வைத்து உட்காருகிற பழக்கமும் நம் மக்களிடையே நிறைய இருக்கிறது. இதனால் வயது நடுத்தரத்தை எட்டும்போது மூட்டுகள் தேய்வது சுலபத்தில் நடந்துவிடுகிறது. இதற்குப் பல்வேறு மருந்துகள் கொடுக்கப்பட்டாலும், இப்போதெல்லாம் அறுவை சிகிச்சை செய்வதுதான் சிறந்த 'பலனைக் கொடுக்கிறது. அறுவை சிகிச்சையின் மூலம் இந்த மூட்டை மாற்றிப்

ஹலோ, நீங்க சுகமா?

வசந்த் செந்தில்



சுகுமாரன் தம்பியா?



• பெர்னாண்டஸ்

பாண்டிச்சேரியில் கண்ணப்பன் - திருமாவளவன் கூட்டணி சார்பாகப் போட்டியிடும் சோழன் நம்பியார், சுகுமாரன் நம்பியாரின் சகோதரர் என்று புரளி கிளம்பியிருக்கிறது. ஆனால் இவர் வேறு வகையில் முக்கியமானவர். தமிழகத்தில் நக்ஸலைட் இயக்கத்தை முன்னிறுத்திச் சென்றவர்களில் மூத்தவராகக் கருதப்படும் கவியபெருமாளின் மகன் இவர். ஜார்ஜ் பெர்னாண்டஸ் "நீங்கள் போட்டியிடுங்கள். தேவையான உதவி செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறாராம்!

- கௌசி

பொருத்தினால், குறைந்தது பதினைந்து ஆண்டுகளுக்கு வலியின்றி நடமாடலாம். (நடப்பது + ஆடுவது!)

இந்த அறுவை சிகிச்சையில், வயதானவர்களுக்கு என்றால் முழு மூட்டையும் மாற்றி விடுகிறார்கள். ஆனால் நடுத்தர வயதினருக்கு, முழங்கால் மூட்டின் உள் பகுதி மட்டுமே தேய்ந்து இருக்கும். இப்படி உள்பகுதி மட்டும் தேய்ந்து இருப்பவர்களுக்கு, கண்டிப்பாக மாத்திரைகள், மேலே தடவுகிற மருந்துகள் பலன் தராது. இவர்களுக்குத் தான் இப்போது இந்தப் புதிய அறுவை சிகிச்சை.

'யுனி கம்பார்ட்மென்டல் னீ ரீப்ளேஸ்மென்ட்' என்கிற இந்த அறுவை சிகிச்சையில், வலி கொடுக்கும் தேய்ந்த உள்பாகம் மட்டும் மாற்றப்படுகிறது. இதனால் பழுதடையாத மற்ற பாகங்கள் அப்படியே விடப்படுகின்றன. இந்தச் சிகிச்சைக்குப் பிறகு பதினைந்து வருட காலம் வலி இருக்காது. பின்னர் மூட்டின் மற்ற பாகங்கள் பழுதடைந்தால், அப்போது சுலபமாக முழு மூட்டையும் மாற்றிக் கொள்ளலாம்.

இப்படி தேவைப்படும் நேரத்தின் போது மட்டும் மூட்டு மாற்று முறையை, அதன் தன்மைக்கு ஏற்றவாறு இரண்டாகப் பிரித்துச் செய்வதால் பலன் அதிகரிக்கிறது. நாற்பத்தைந்து வயதிலேயே முழு மூட்டையும் மாற்றிவிட்டால் - மூட்டின் நன்றாக இருக்கும் பகுதிகளோடும் சேர்த்து - மறுபடியும் பத்து வருடம் கழித்து திரும்ப அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வந்தால், பலன் முன் போல் இருக்காது. இம்மாதிரி நேரங்களில் 'யுனி கம்பார்ட்மென்டல் னீ ரீப்ளேஸ்மென்ட்' சிறந்தது.

இப்போது பிரபலமடைந்திருக்கும் இம்முறையைப் பயன்படுத்தி சிகிச்சை பெறுவது, சுலபமாக சென்னையில் நடக்கும். ஆனாலும் மதுரையிலும் இருப்பதால் பலர் பயனடைவதாக டாக்டர் சதீஷ் தேவதாஸ் சொன்னது மகிழ்ச்சியாக இருந்தது.

தமிழகத்தின் மூலை முடுக்குகளில் வாழ்கிற மக்களெல்லாம், புதிய மருத்துவ முறைகள் பெற்று நிம்மதிப் பெருமூச்சு விடும்போதுதான் தமிழகம் ஒளிரும்.

(தொடரும்)

மழை

மீரா கதிரவன்

பொட்டுத் தூறலாகத்தான் பெய்யத் தொடங்கியது. சடசடவென்று பெய்து வலுத்தது. எந்த நிமிடப் புள்ளியிலென்று சரியாக அனுமானிக்க இயலவில்லை. முழுவதும் தொப்பலாக நனைந்தபடி ஓடி வந்து, இந்த வீட்டின் திண்ணையில் ஏறி நின்று கொண்டேன். மழைத் திரைகளினூடே ஊடுருவி அண்ணாந்து பார்த்தேன். அடர்ந்து கறுத்துக் கிடக்கும் மேகம் வான்வெளியெங்கும் திட்டுத் திட்டாகப் பரவிக் கிடந்தது. அவ்வளவு இலேசில் இந்த மழை நின்றுவிடாது என்று எனக்குத் தோன்றியது. இந்த மழை புனலூரிலும் பெய்து கொண்டிருக்கலாம். ஜன்னலின் கர்ட்டனை விலக்கி கண்கொட்டாமல் சத்யாவும் இம்மழையை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருப்பாள்!

பத்து வருடங்களுக்கு முன் இதுபோன்ற ஒரு மழை நாளில் தான் சத்யாவை நான் சந்திக்க நேரிட்டது. விவரிக்க முடியாத துயரங்களுக்கும் ஆற்றாமைகளுக்கும் நடுவில் கழிந்து கொண்டிருந்த நாட்களில் அதுவும் ஒன்று. தனியார் நிறுவனமொன்றில் தாற்காலிக ஊழியனாக வேலை பார்த்து வந்தேன். இருந்தாலும், என்னுடைய பட்டப் படிப்பைப் பிரதானப்படுத்தி, அப்பா எனக்கு நிறைய பெண் பார்க்கத் தொடங்கியிருந்தார். மகனுக்கு வாங்கும் வரதட்சிணைப் பணத்தில் வீட்டில் உண்டாகியிருந்த கடன் நெருக்கடியை விடுவித்துவிடலாம் என்ற தீராத நம்பிக்கை அப்பாவுக்கு. வரதட்சிணை தவறென்றோ, பாவமென்றோ நான் வாதிடும் நேரங்களில், எங்களிருவருக்குமான விவாதம் தீவிரமடையும்.

முந்தைய இரவில் தொடங்கியிருந்த பனித்தூவல், மழையின் நீட்சியோடு அன்று காலை விடிந்தது. முன்னேற்பாடாகச் சொல்லி வைத்திருந்த வாடகைக்கார் எங்களின் கேரளப் பயணத்துக்காக வீட்டுக்கு முன்னால் காத்திருந்தது. அப்பா, அம்மா, அக்காள், அவளின் குடும்ப சகிதம் எல்லோருடனும் கூட்டாக நான் அழைத்துச் சொல்லப்பட்டேன். இரவு முழுவதும் உறக்கம் கொள்ளாதிருந்ததால், மனம் ரொம்பவும் களைத்துப் போயிருந்தது. காரின் மூடப்பட்ட கண்ணாடி ஜன்னலில் சாரை சாரையாக வழிந்திறங்கும் மழைநீர்த் தாரைகளை கண்ணுற்றபடி நான் உறங்கிப் போனேன்.

நாங்கள் புனலூரர் சென்றடைந்தபோது மழை முற்றிலுமாய் நின்றிருந்தது. பெண்ணின் தந்தை, எங்களனைவருக்கும் முகமன் கூறி வீட்டுக்குள் அழைத்துப் போனார். முற்றத்தில் உலர்வதற்காய் போடப்பட்டிருந்த நான்கைந்து ரப்பர் ஷீட்டுகள், மழைநீரைச் சொட்டியபடி கம்பிக் கொடியில் கிடந்தன.

பிரத்யேகமாக நாங்கள் அமர்வதெற்கென்று கொண்டு வந்து போடப்பட்ட மரக்கட்டிலில் அமர்ந்தபடி, நான் வீட்டைச் சுற்றிலும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினேன். காரை பெயர்ந்து கிடக்கும் உட்சுவர்கள், மறு பூச்சுக் காணாமல் சில இடங்களில் பானம்பானமாகக் கீறி நின்றது.

சம்பிரதாயமாக எல்லோரையும் வணங்கிவிட்டு பெண், எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். என் முறை வந்த போது, நின்று நிதானித்து என்னை ஏறிட்டுப் பார்த்தவளிடமிருந்து தேநீரைப் பெற்றுக் கொண்டு, நன்றியாக ஒப்புக்குச் சிரித்தேன். ட்ரேயை அவள் என்னிடம் நீட்டியபோது, நீண்டு மெலிந்திருந்த அந்தக் கைகளில், தாழ்ந்து இறங்கி ஓடி வந்து மணிக்கட்டுகளில் வரிசையாக அடுங்கிக் கொண்ட கண்ணாடி வளையல்கள் அத்தனையிலும், நிறம் மங்கிப் போயிருப்பதை உற்றுக் கவனித்தேன்.

அவள் என்னிடம் தனியாகப் பேசப் பிரியப்படுவதாகச் சொன்னார்.

"உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. வீட்டோட வறுமை தான் என் படிப்பை பாதிக்கும்னு நினைச்சுட்டிருந்தேன். ஒரு நல்ல வரன் வந்திருக்குன்னு சொல்லி, திடீர்னு அப்பா படிப்பை நிறுத்திட்டாரு! நிறையப் படிக்கணும்ங்கறது ஆசை. கல்யாணத்துக்கப்புறமும் என்னை படிக்க வைப்பீங்களா?" சுற்றி வளைக்காத அவளின் நேரிடையான பேச்சு, என்னைக் கவர்ந்தது. மீண்டும் வெளியே பெய்யத் தொடங்

ஓய கனத்த மழையில், வீட்டின் மேற்கூரை படபடத்து அதிரத் தொடங்கிற்று.

'வீட்டுக்குள்ள வந்ததுமே உங்க குடும்பச் சூழல் என்னங்கறதை என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது. வரதட்சிணையில எனக்குக் கொஞ்சமும் உடன்பாடு கிடையாது. வீட்டோட வறுமை எல்லாத்துக்குமே சரின்னு தலையாட்ட

வாசம்



வச்சிட்டுது! அப்பா கேட்டிருக்கிற அவ்வளவு பணத்துக்கும் நீங்க என்ன பண்ணுவீங்க?'' நான் மிக அமைதியாக அவளிடம் கேட்டேன். திடீரென ஆஸ்பெஸ்டாஸின் கூரை வழியே ஒழுகி இறங்கும் மழைச் சொட்டுகள், நின்றிருந்த எங்களிருவருக்கும் நடுவில் ஒவ்வொன்றாய் விழத் தொடங்க, அவளின் அப்போதைய நிலையை எண்ணி எனக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவள் அதை சகஜமாக எடுத்துக் கொண்டு மழை நீரை உள்ளங்கையில் ஏந்தி நின்றபடி, மீண்டும் என்னிடம் பேசினாள்.

'வீட்டுக்கு நான் ஒரே பொண்ணு. எவ்வளவு கஷ்டப்பட்டாவது அப்பா இந்தக் கல்யாணத்தை நடத்திடுவாரு. சுத்தி நிற்கிற இந்த ரப்பர் மரங்களும், இந்த வீடும் அப்பாவோட பூர்வீகச் சொத்து. என்னோட கல்யாணத்துக்காக ரெண்டையுமே இப்ப விலை பேச ஆரம்பிச்சிட்டாரு!''

'வீட்டை வித்துட்டு அவுங்கல்லாம் அப்புறம் எங்க போவாங்க!'' எனக்குக் குரல் கம்மியது.

''பத்தரந்தட்டையில தாத்தாவோட வீடு இருக்கு. அங்க போய் தங்கிக்கறோம்னு சொல்லிட்டாங்க. அப்படியொரு கல்யாணம் வேண்டாம்னு நான் அழுதேன். உன்னோட சந்தோஷம்தான் எங்களுக்கு முக்கியம். கஷ்டம்னு ஒண்ணும் இடையா

துன்னு சொல்லிட்டாரு!"

ஸ்தூலமாக எனக்குள் நின்றிருந்த ஆணென்ற கர்வம், மொத்தமாக தகர்ந்து விழத் தொடங்கியது. மனத்தைப் பிசைந் தழுத்துகிற குற்ற உணர்வோடு, நான் அவ ளின் முன் அப்போது பேச்சற்றவனாக மௌனித்து நின்றேன். மழைச்சொட்டுகளை ஏந்தியிருந்த அவளின் உள்ளங்கையை உயர்த்திக் கொண்டே வந்து, என் நாசிக்கு நேராக நிறுத்தினாள். பொத்தென்று அவ ளின் உள்ளங்கையில் விழுந்து தெறித்த கனத்த மழைத் துளியொன்று என் முகத்தில் பட்டுச் சிலிர்த்து; நான் தன்னிலைக்கு வந்தேன்.

"நான் கேட்டதுக்கு நீங்க ஒண்ணும் சொல்லவேயில்லையே...!" என முகத்திற்கு நேராக நீட்டிய கையை அவள் ஆட்டிய போது, செவிக்கு மிக நெருக்கமாய் அந்த நிறம் மங்கிப் போன கண்ணாடி வளையல் களின் ஈனத்தை உணர்ந்தேன்.

"கண்டிப்பா படிக்க வைப்பேன். நிறை வேறாமப் போற கனவோட வலியை முழுசா உணர்ந்திருக்கேன். கல்யாணத்துக் குப் பிறகு நீங்க படிக்கலாம்!" நான் இதைச் சொல்லி முடிக்கும் முன்பாகவே, அவ ளுடைய கண்களில் நீர் தளும்பிக் கொண்டு வந்தது.

"இந்த மழை சத்தியமா?" கைகளை விடு வித்துக் கொண்டு தழுதழுத்த குரலில் ஜன்ன லுக்கு வெளியே கைநீட்டிக் கேட்டாள்.

"மழை சத்தியமா!" இன்னும் மழலைத் தனம் மாறாத அவளின் முகத்தைப் பார்த்து நான் பதில் கூறினேன்.

பெரியவர்களின் யோசனைப்படி, ஒரு மழைக்கால முடிவில் கல்யாணம் என்று தேதி குறிக்கப்பட்டது. பத்துநாட்கள் முன் னரே மொத்த ரொக்கத்தையும் தந்து, திரு மணத் தேதியை உறுதி செய்து கொள்ள வேண்டுமென்று அப்பாவால் அவர்களுக்கு அவகாசம் தரப்பட்டது.

சத்யாவுக்காக, அவளின் மிக நெருக்க மான மழையும் தன் காலத்தைச் சுருக்கிக் கொண்டு வெகு சீக்கிரம் கடந்து போனது. அந்த மழை நாட்களை எண்ணிக் கொண்டு நானும் சத்யாவின்மீது தீராத காதல் வயப்படத் தொடங்கி விட்டிருந்தேன். சதா எந்நேரமும் எனக்குள் ஒரு மழை மேகம் காரிருளாய்க் கவிந்து கொண்டு, அவளின் பெயரைச் சொல்லியபடி மெலிதாய் தூறல் போட்டுக் கொண்டிருந்தது.

உறுதி செய்யப்பட்ட திருமணத் தேதிக்கு முதல் நாள் அதிகாலைப் பொழுதில், எங் களின் வீட்டுக்கு வந்திருந்த சத்யாவின் அப்பா, கூனிக் குறுகி என் அப்பாவிடம் மன்றாடிக் கொண்டிருந்தார்.

"திடீர்னு ரப்பரோட விலை சரிஞ்சு போச்சு. ரப்பர் மரத்துக்காக வீட்டையும் சேத்து கிரயம் பேசுனவங்க, இப்ப எல் லாத்தையும் அடிமாட்டு விலைக்குக் கேக்க றாங்க. பல இடங்கள்லேயும் கேட்டு பணம் தர்றதா இருந்தவங்க, கடைசி நேரத்துல முடியாதுன்னு கை விரிச்சுட்டாங்க. பெரிய மனசு பண்ணி, இப்ப நான் கொண்டு வந்திருக்கிற பாதித் தொகைய வாங்கிக்கிங்க. எந்தலைய அடமானம் வச்சாவது கல் யாணம் முடிஞ்ச பத்தாவதுநாள், மீதிப் பணத்தை எண்ணித் தந்துடறேன்!"

"பேசுன மொறைக்கு கல்யாணத்துக்கு முன்னாலயே ரொக்கப் பணம் முழுசையும் தர்றதா இருந்தா, கல்யாணத்த வச்சிக்கலாம்."

> "வீட்டுக்கு சுண்ணாம்பு கிண்ணாம்பு எதனாச்சும் அடிக்கறதுனா என்கிட்ட ஒரு வார்த்தை கண்டுகினு அடி சார்..."
> "ஏன் பால்காரரே?"
> "வீட்டுச் சுவத்துல குறிச்சி வெச்சிருக்கிற பால் பாக்கிக் கணக்கு அழிஞ்சு பூடப் போவுது!"
> - பர்வதவர்த்தினி

அப்பாவின் வார்த்தை அவரைச் சுட்டுப் பொசுக்கியிருக்க வேண்டும். மேற்கொண்டு எதுவும் பேச மனமில்லாதவராய், சத்யாவின் அப்பா அங்கிருந்து விறுவிறுவென்று நடந்து போய்விட்டார்.

இது நடந்து முடிந்து ஆறாவது மாதமே கடன் நெருக்கடி அதிகமாகி, அப்பா தன் வேலைக்கு வி.ஆர்.எஸ். கொடுக்கும் படியானது.

வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு நாள், நான் சத்யாவைச் சந்திக்க கேரளாவுக்குப் புறப்பட்டுச் சென் றேன். அந்தப் பயணம் என் வாழ்க்கையில் நடந்திருக்கக் கூடாத ஒன்று, என இன்று நினைக்கிறேன். அவர்களின் வீடு இருந்த இடம் செருப்புகள் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்கூடமாக மாறியிருந்தது. அவள் மழையை ரசித்த ஜன்னல்களும், ரப்பர் மரங்களும், தொழிற்சாலையின் ராட்சத சங்குகளுக்கும், புகைப் போக்கிகளுக்கும் மத்தியில், எங்கோ அழிந்து உருத் தெரியா மல் போயிருந்தன. அங்கிருந்த எல்லோரும் பல ஊர்களுக்கு இடம் பெயர்ந்து போய் விட்டதாகச் சொன்னார்கள். அடி வயிற்றில் கல்விய வலியொன்று ஒரு பந்தைப் போல்

மேலெழுந்து வந்து, தொண்டைக்குள் நின்று என் கண்களில் திரை கட்டியது. எனக்குத் தரகரைச் சந்திக்க வேண்டும் போலிருந்தது.

தேநீர் வரவழைத்து என்னை குடிக்கச் சொன்னார்.

'வீடு இப்ப முன்ன மாதிரி இல்ல.. அப்பாக்கிட்ட பேசி, அவரோட மனசை மாத்திட முடியும்னு நம்புறேன். வரதட்சிணையில்லாம நான் அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புறேன்!"

தரகர் என்னைப் பரிதாபமாக மேலும் கீழும் பார்த்துவிட்டு; "தம்பி உன் நல்ல மனசு யாருக்கும் வந்திடாது. உன்னோட அப்பாவைப் பாத்துட்டு வந்த மறு வாரமே,



சத்யாவை வேறொரு பையனுக்கு கல்யாணம் பண்ணி வச்சிட்டாரு. வைராக்கியம் தான்! என்ன பண்றது! அந்தப் பையன் கூட லாரி டிரைவர் தான். கடைசிவரைக்கும் அந்தப் பொண்ணுக்கு, அந்தக் கல்யாணத்துல இஷ்டமே இல்ல. என்னப்பா பண்றது, கையில இருக்கிற காசு பணம்தானே அவங்கவங்க வாழ்க்கையையும் முடிவு பண்ணுது!"

எனக்கு ஒரு கணம் தூக்கி வாரிப் போட்டது. அதுவரை, எனக்குள் மழை பெய்து கொண்டிருந்த அந்தக் காரிருள் மேகம் எங்கோ அத்துவானக் காட்டில் இடியுடன் பெய்து விழுந்து, முழுவதும் கரைந்து போனதாய் உணர்ந்தேன்.

கழுவித் துடைத்த வானம் போல், மனம் முழுவதும் வெறுமை கவிழ வீடு திரும்பினேன். எல்லா விஷயங்களிலும் பிணைப் பற்று வாழ்க்கை சூனியமாகத் தெரிந்தது. அதிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி, வேலை தேடிக் கொண்டு ஏதாவதொரு பெரு நகரத்தில் அநாதையாய்க் கிடந்து கழிவதே சரியெனப்பட்டது. கிடைத்த வேலையொன்றில், விடுமுறை, ஓய்வு என்று எதையுமே விரும்பாமல் அலுவலகத்திற்குள்ளேயே முடங்கிக் கழித்தேன். முன்னோக்கி மட்டுமே நகர்ந்தோடப் பழகிவிட்ட நகர வாழ்க்கையும், எதிர்பாராத பதவி உயர்வுகளும், பழைய நினைவுகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மனதிலிருந்து மறக்கடிக்கச் செய்தன. இந்த வேளையில் என் சொந்த ஊரிலேயே ஒரு பெண்ணைப் பார்த்து, அப்பா எனக்குத் திருமணம் நடத்தி வைத்தார். சடசடவென்று வெட்டி மறையும் மின்னலைப் போல், நாட்கள் நகர்ந்து வருஷங்கள் பத்துக்கும் மேல் கடந்து போய்விட்டன.

கையில் ஏதோ சுரீரென்று உணர்ந்து பழைய நினைவுகளிலிருந்து மீண்டு வந்தேன். விரலிடுக்கில் சிகரெட் தீர்ந்த நிலையிலிருந்தது. மழையும் நின்றிருந்தது. தெரு நிரம்ப தளம் கட்டிக் கிடந்த மழை நீரில் நடந்தவாறு, என் வீடு இருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புள்ள பகுதிக்கு வந்தேன். அந்தரத்தில் ஊடு சுவர் வைத்து பொழிந்தது போல், மழை இன்னும் இந்தப் பகுதியில் பெய்யாமலிருந்தது எனக்கு ஆச்சர்யத்தை மூட்டியது. அடுத்த சில நொடிக்கூறுகளில் மழை திடுமெனப் பெய்யக் கூடும் சாத்தியக் கூறுகள் நிறையத் தெரிந்தன. மழையில் நனைந்து வந்திருக்கும் என்னைக் கண்டதும், என் மனைவி டவலை எடுத்துக் கொண்டு பதறியபடி ஓடி வந்தாள்.

"சனியன் புடிச்ச மழை! ஒரு விவஸ்தையே இல்லாம பெஞ்சுட்டிருக்கு!" மழையைச் சபித்தபடி அவள் தலையைத் துவட்டிவிட, பள்ளி விட்டு சீக்கிரமாகவே வந்திருந்த என் குழந்தைகள் அவளிடமிருந்து டவலைப் பறித்துக் கொண்டு, எனக்குத் தலை துவட்டிவிட அடம்பிடித்தார்கள். வெளியே மழை பெய்யத் தொடங்கியது.

தொலைக்காட்சிப் பெட்டி முன் அமர்ந்திருந்த என் அப்பா, மண்ணின் வாசத்தை உணர்ந்தவராக தனக்குள்ளே பேசினார்.

"ரொம்ப நாள் கழிச்சு பெய்யற மழை.. என்னவொரு மணம்!"

நான் ஜன்னலருகே சென்று கர்ட்டனை விலக்கிப் பார்த்தேன். வெளியே பெய்த கனத்த மழையில், என் பார்வை நிலை குத்தி நின்றது.

"ஆமாம்ப்பா... இத்தனை நாளைக்கப்புறமும் என்னாலயும் அந்த மணத்தை உணர முடியுது!" அப்பாவின் பக்கம் முகந்திருப்பிச் சொன்னேன்.

இயக்குனராகப் போகிறார் ஒளிப் பதிவாளர் ரவிவர்மன்! "கேமராவோடு வாழ்ந்து கொண்டிருந்தவன்; இப்போது கதைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்கிறார்.

புதிய தொழில்நுட்பம், நவீன சினிமா என்று அடுக்கடுக்காக விழுகின்றன விஷயங்கள். சென்னை, மும்பை, ஹைதராபாத் என்று பறந்து கொண்டிருக்கும் அவரோடு கொஞ்ச நேரம்...

ஒளிப்பதிவாளர்களெல்லாம் டைரக்ஷனில் அதிக ஆர்வம் காட்டறீங்களே...?

ஏன் ஆர்வம் காட்டக் கூடாது? ஓர் இயக்குனர் சொல்ற கதையை உள் வாங்கிக்கிட்டு, அதை ஒளிப்பதிவில் வெளிப்படுத்தறது கேமராமேன். அப்போ, அவனோட கதையைப் படமா பண்ணும்போது, அந்தக் கதையை இன்னும் உணர்வுபூர்வமா, ஆழமா, உயிருள்ள படைப்பா கொண்டு வர முடியும். அதனாலதான் ஒளிப்பதிவாளர்கள் இயக்குனராகும் பட்சத்தில் அந்தப் படங்கள் ஜெயிக்குது. இதுக்கு பாலுமகேந்திராவிலிருந்து தேஜா வரை, நிறைய உதாரணம் சொல்ல முடியும்.

ஆட்டோகிராஃப்ல ஒரு பகுதி மட்டுமே நீங்க பண்ணியிருக்கீங்க...

ஆமா... ஒரு படத்துல, நான்கு கேமராமேன் வொர்க் பண்றதே புது விஷயம்தான். கதை நடக்கற ஒவ்வொரு காலகட்டத்துக்கும் ஒரு கேமராமேன். எனக்கானது கிராமம். நல்ல லைட். இதை 'டெலி ஜூம்'ல கிளாமரா பண்றது ரொம்ப சுலபம். ஆனா இதெல்லாம் பண்ணக் கூடாது. 'டாப் லைட்'தான் வேணும்னு தீர்மானிச்சோம். சுற்றி நடக்கிற எல்லாத்தையும் பதிவு பண்ணனுங்கறதால 'வைட் ஆங்கிள்' போட்டோம்.

ஈரானிய படம் மாதிரி அந்தப் பகுதி மட்டும் வயலட் கலர் பரவலா தெரியுதே...

அது வேணும்னு பண்ணினதுதான். வண்ணங்கள் ஒவ்வொரு விஷயத்துக்கும் முக்கியம். அதுவும் சினிமாவுல வண்ணங்களுக்கு முக்கியத்துவம் அதிகம். இந்தப் படத்துல, கிராமத்துப் பகுதியை ரொம்ப நல்லா பண்ணியிருக்கேன்னு கர்வம் இருந்துச்சு. ஆனா, சமீபத்துல 'Days of heaven'ங்கற 1976ல் வெளியான ஆங்கிலப் படத்தைப் பார்த்தேன். என் கர்வம் நொறுங்கிப் போச்சு. நான் என்ன

• அமிதாப்புடன் ரவிவர்மன்...



பண்ணியிருக்கேனோ, அதை அப்பவே இந்தப் படத்தில பண்ணியிருக்காங்க. இதனால வெட்கமா இருந்தது.

கேமராவுல எந்த விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கறீங்க?

யதார்த்தத்துக்குத்தான் அதிகமா முக்கியத்துவம் கொடுக்கிறேன். சில படங்கள்ல, இறந்த மனிதன்கூட புது சட்டைப் போட்டிருக்கறதை நீங்க

"இலக்கணம்

பார்த்திருக்கலாம். இந்த மாதிரியான சினிமாத் தனத்தை வெறுக்கிறேன். நாம் பார்க்கும்போது, ரியலா என்ன தெரியுதோ, அதையே படத்துல பயன்படுத்தும்போது, அதுக்கு உயிர் அதிகம். இதை நான் ஒருத்தன் மட்டும் கொண்டு

வர முடியாது. ஏன்னா, ஒவ்வொருத்தர் ஒவ்வொருத்தரோட கட்டுப்பாட்டுக்குள்ள இருக்காங்க. கேமரா மேன் இயக்குனரோட கட்டுப்பாட்டுக்குள்ள. நடிகர் இமேஜ்ங்கற கட்டுப்பாட்டுக்குள்ள... இப்படி இருக்கும் போது சில இயக்குனர்கள் ஏத்துப்பாங்க. சிலர் மாட்டாங்க.

தமிழைவிட அதிகமா, இந்தி, மலையாளம், ஆங்கிலப் படங்கள் பண்ணியிருக்கீங்க. என்ன வித்தியாசத்தை உணர்றீங்க?

தமிழ்ல ஒரு படம் பண்ணி, வெற்றியடைந்தால் கிடைக்கறதைவிட, இந்தியில பண்ணினா கிடைக்கிற புகழ், பணம் பத்து மடங்கு அதிகம். இதைவிட வேறென்ன வேணும்? அதுக்காக தமிழ் ஃபீல்டை நான் குறை சொல்லலை. இந்திக்கான ரீச் அதிகம். அது மட்டுமல்லாம, இந்தியில டெக்னீஷியன்களுக்கான மரியாதை அதிகம்.



மீறியிருக்கிறேன்!”

—ரவிவர்மன்

டெக்னிக்கலா நாம ஹாலிவுட் தரத்துக்கு வந்துட்டோம்ங்கறாங்க...

நிஜம்தான். பதினொரு ஆஸ்கர் அவார்டை பெற்றிருக்கிற 'Lord of the Rings; Return of the King' படத்துல நாலு ஷாட் ஸ்பெஷல் எஃபெக்ட் பண்ணியிருக்கிறவர் ஹைதராபாத்தைச் சேர்ந்த யுகேந்திரன். (இவர்தான் 'ஜெய்ராம்' படத்துக்காக ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் பண்ணுகிறவர்) அதனால ஹாலிவுட் தரத்துக்கு இந்தியாவுல, குறிப்பாக, தென்னிந்தியாவுல வளர்ச்சி இருக்கு. சினிமாவில் எல்லாமே முடியும். பட்ஜெட்டைப் பொறுத்துதான் இருக்கு. மலையாளத்துல ஒரு படத்துக்கு அதிகமாக முப்பத்தைந்து பிரிண்ட் போடறாங்க. தமிழ்ல ஐம்பது. சூப்பர் ஹிட்டானா அதிகமாகும். ஹாலிவுட்ல ஆயிரத்துக்கும் மேல. இதனால ஒரு ஹாலிவுட் படம் ஐந்து வாரம் 'ஹவுஸ்புல்'லா ஓடினா, சரியான லாபம் பார்க்க முடியும். அதனால பட்ஜெட் முக்கியம். அது மட்டுமில்லாம கதையிலயும் புதுமை வேணும். அதுக்குப் புதிய இளைஞர்கள் வரணும். ஹங்கேரி ரொம்பச் சின்ன நாடுதான். அவங்க ஆஸ்கர் விருதை வாங்கும்போது, நாம வாங்க முடியாதா என்ன?

'ஜெய்ராம்' படத்துல வித்தியாசமா பண்ணியிருக்கீங்களாமே...?

படத்துல இடைவேளைக்குப் பிறகு இலக்கணம் மீறியிருக்கேன். இப்படித்தான் கேமராவை வைக்கணும்ங்கறதிலேர்ந்து கேமராவுக்கான அனைத்து இலக்கணங்களையும் மீறியிருக்கேன். ஏற்கெனவே, இந்தியில 'பிபஸ்தா'ங்கற படத்துல பரீட்சார்த்தமா முயற்சி பண்ணியிருக்கேன். அதுக்கு நல்ல வரவேற்பு. அந்த நம்பிக்கையோட இதுலயும் பண்ணியிருக்கேன்.

சரி, நீங்க இயக்கப் போற 'தனம்' பற்றி சொல்லுங்களேன்!

வேண்டாம். என் படம் பற்றி இப்ப, எதுவுமே பேச வேண்டாம்னு இருக்கேன். படம் வந்ததும் அது கண்டிப்பா பேசும்னு நம்பறேன்.

— ஏக்ஜி

நீங்கள் கேட்டவை-தராசு

சூப்பர் ஸ்டார் கோரிக்கை

● தேவந்தி துரைராஜ், திருவண்ணாமலை

? கருத்துக் கணிப்புக்குத் தேர்தல் ஆணையம் தடைபோட்டால் நல்லதா இல்லையா...?

! ஜெயிக்கிற குதிரை மீது 'பெட்' கட்டுவதென்பது அரசியலுக்குச் சரிப்பட்டு வராது. ஆனால் நம் மக்களுக்கு அதை அறியும் திறன் கிடையாது. எனவே கல்வி அறிவு மிக்க மேல் நாடுகள் போல இங்கு கருத்துக் கணிப்புக்கு அனுமதி வழங்குவது, சரியாகாது.

● எம். எழில்மலை, குடியாத்தம்

? 'உறுதிமனம் படைத்த வாஜ்பாய் பிரதமராக நீடித்தால்தான் எதிர்காலத்தில் என்றேனும் ஒரு நாள் பாகிஸ்தான் இந்தியாவுடன் இணைய வாய்ப்பு இருக்கிறது' என்று இல. கணேசன் சொல்வது பலிக்குமா?

! தேர்தல் நேர தந்திரோபாயம். அவர்கள் எதிர்பார்க்கிற தனிமெஜாரிட்டி தப்பித் தவறி கிடைத்துவிட்டால் என்.டி.ஏ.வை மட்டுமல்ல, வாஜ்பாயியையும் ஒதுக்கி விடுவார்கள். அப்புறம் ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. ராஜ்யம்தான்!

● ஆர். ராமசுப்ரமணி, திருவாரூர்

? அமேதியில் ராகுல் காந்தி, ரேபரேலியில் சோனியா - இது குறித்து உமக்கு என்ன புரிகிறது?

! தலைமுறை தலைமுறையாக நேரு குடும்ப ஆட்சி தொடர, முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்று புரிகிறது.

● ராஜிராதா, திருச்சி - 14

? தமிழக காங்கிரஸில் கோஷ்டியை ஒழிக்க உங்கள் ஆலோசனை...?

! நமது அரசியல் சாசனத்தை வகுத்த மகானுபாவர்கள், உட்கட்சி ஜனநாயகம் இல்லாத கட்சிகள் தேர்தலில் போட்டியிட முடியாது என்று சட்டமும் விதிமுறைகளும் வகுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இன்று இப்பிரச்னையே எழுந்திராது. நமது ஜனநாயகம் சிறப்படைந்திருக்கும். ஹூம்! இப்போ சொல்லி என்ன பயன்? எந்தக் கட்சி இன்று ஆரோக்கிய அரசியலுக்கு வழி வகுக்கப்போகிறது!


● வி.என்.கோபால், சென்னை - 91

? சும்மா ஒரு கற்பனைக்குத்தான்... தமிழ் நாட்டில் பா.ஜ.க.வுக்கு மூன்று இடமும் அ.தி.மு.க.வுக்கு ஓர் இடமும் கிடைத்தால்...?

! மொத்தம் நாலாகும்!


● டி.சுப்ரமணியன், மேலையூர்

? தாகூரின் நோபல் பரிசு திருடு போய்விட்டதே?



● களவுக் கொடு

! நாட்டுக்கே தலைகுனிவு, அபகரித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், இப்படி திருட்டுக் கொடுக்கும் அளவில் பாதுகாப்பில் அஜாக்கிரதையாக இருந்தவர்களும் தண்டனைக்குரியவர்களே. அது பற்றி செய்தி ஏதும் வந்ததோ?



● பித்தளை மொழி

● ஔவை ஏ.எஸ். யோகானந்தம், கலிங்கியம்

? ஃபைனலில் இந்தியா வெல்ல திருப்புமுனையாக அமைந்தது சச்சின் பிடித்ததா? கையூப் பிடித்ததா? யுவ்ராஜ் சிங் பிடித்ததா... எந்த கேட்ச்?

! சிக்ஸருக்குத் தாவிப் போன பந்தை ஒரே எட்டாக எட்டிப் பிடித்து, இன்ஸமாம் உல் ஹக்கை அவுட் ஆக்கிய கேட்ச்தான் டாப் டக்கர்! பிடித்தது யார்னுதான் உலகத்துக்கே தெரியுமே!

● அ. கஹைல் ரஹ்மான், திருச்சி

? 'எனக்கு எல்லாமே கிரிக்கெட்தான்' என்கிறாரே டெண்டுல்கர்...?

! ஆட்டத்தின் பண்பை வாழ்க்கை ஆக்கிக் கொண்டவரது வாக்குமூலம். 194ல் அவர் இருக்கும்போது டிக்ளேர் செய்ததற்காக, "ஏமாற்றமடைந்தபோதிலும் அதை அணித் தலைவரின் முடிவாக ஏற்பேன்" என்று நயமாகப் பேசியிருக்கிறாரே - கிரிக்கெட்டின் ஜீவன் இந்தப் பண்புதான்.



* நல்வழிக் கடமை!

எடுபடுமோ?

● வீ. முத்தையா, திருநெல்வேலி ★

? தமது தனிப்பட்ட பிரச்னையை மக்களிடையே வைத்து, அதனால் 'இன்னாருக்கு வோட்டுப் போடாதீர்கள்' என்று சூப்பர் ஸ்டார் கோரிக்கை வைத்தால் அது எடுபடுமா?

! இன்றைய தேதி வரை அவர் ஒன்றும் வாய் திறந்து கருத்துத் தெரிவித்ததாகத் தெரியவில்லை என்றாலும், தமது ரசிகர் மன்றத்தை நல்வழிப்படுத்தி அழைத்துப் போக வேண்டியது அவர் கடமை என்பதை மறுக்க முடியாது.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? "அ.இ.மு.க. என்றால் அக்ரஹார தில்லுமுல்லு கழகம்" என பொன்முடி விளக்கம் தந்துள்ளாரே...?

! அது அக்ரஹார தில்லு முல்லு கழகம் என்றால், இது (சப்ஜாடா) தில்லு முல்லு கழகம் ஆகிவிடுமே! பொன்முடி உதிர்த்தது பித்தளை மொழி!

● அரூர் சேகர், சென்னை - 26

? மக்களாட்சியில் வீரவாள், மலர்க் கிரீடம், ரதயாத்திரை - இவையெல்லாம் மோசடி என்றால், அதே மக்களாட்சியில் மன்னராட்சியை நினைவூட்டும் சிரிப்புத் துணுக்குகள், சிறுகதைகள், தொடர் கதைகள் (கல்கி உட்பட) பத்திரிகைகளில் பிரசுரமாகின்றனவே... இது மோசடியில்லையா?

! இல்லை. சிரிப்புத் துணுக்குகள் பெரும்பாலும் தற்கால அரசியலின் நையாண்டிப் பிரதிபலிப்பு. வரலாற்றுத் தொடர்கள், கதைகள் பழைய பண்பாடு, வாழ்க்கை முறை குறித்துப் பேசி பெருமிதம் கூட்டுபவை. ஆனால் தற்காலத் தலைவர்களுக்கு, மன்னர்கள் போன்ற தோற்றம் வழங்கி மரியாதை செய்வது, நையாண்டியுமல்ல, சரித்திரக் கதையுமல்ல, இன்றைய நிஜம். இது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரண் பாடானது. மக்களை பிரமிப்பில் ஆழ்த்தி ஏமாற்றுவது.



* தந்திரக் கணக்கு!



* விளையாட்டு வாழ்க்கை!

● வெ. ராணி, நாமகிரிப்பேட்டை ❒

? தமிழ் மொழி மெள்ள மெள்ள அழிந்து கொண்டே வருகிறதே..?

! ஆட்டோகிராஃப் போன்ற தரமான படத்தில்கூட, ல, ள, ழ உச்சரிப்பில் ஏகக் குழப்பம். இந்தப் பேச்சுப் பிழை பெரும் பாலான இளைஞர்களின் எழுத்திலும் புகுத்துவிடுகிறது. தமிழக அரசும் அதன் கல்வித் துறையும் விழிப்போடு ஏதேனும் உடனடியாகச் செய்யாவிட்டால், தமிழ் மொழியே அழியாவிட்டாலும், ல - ள - ழ வேறுபாடுகள் செத்துவிடும்.

❒ ரூ. 100 பரிசு பெறுபவர் :
வே. ராணி, 'திருமாலகம்' 503/ஏ,
மெயின் ரோடு,
நாமகிரிப்பேட்டை - 637 406

★ ரூ. 50 பரிசு பெறுபவர் :
வீ. முத்தையா, 35,
பாரதியார் தெரு,
திருநெல்வேலி டவுன் - 627 006

புதைந்திருக்கு...

நமக்கே உரிமையாம் 25

ப.சிதம்பரம்



பணநாயகத்தை ஜனநாயகம் வென்று விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு என்ன?

ஒரு குடையின் கீழ் நூற்றியிரண்டு கோடி மக்கள் எதற்காக வாழ வேண்டும்? அவர்களிடையே வரலாறு, நாகரிகம், பண்பாடு, மதம் என்று பல பந்தங்கள் இருக்கின்றன என்பது உண்மையே. அதே நேரத்தில், மொழி, ஜாதி, பழக்க வழக்கங்கள் என்று பல பேதங்கள் இருக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. பந்தங்கள் பிணைக்கின்றன என்றால், பேதங்கள் பிரிக்கின்றன. இந்த பந்தங்களுக்கும், பேதங்களுக்கும் அப்பால் ஒரு குடையின் கீழ் எல்லோரும் வாழ வேண்டும் என்றால், அதற்கு ஒரு மிக வலிமையான காரணம், அல்லது நோக்கம் இருக்க வேண்டும்.

குடும்ப உறவுகளுக்கு இந்தக் குடை தேவையில்லை. ஒரு சமயத்தைப் பின்பற்றுவதற்கும், வழிபாட்டுக்கும் இக் குடை தேவையில்லை. ஒரு மொழியைப் பேசுவதற்கும், எழுதுவதற்கும், மொழி வளர்ச்சிக்கும் இக் குடை தேவையில்லை. ஒரு குடையின் கீழ் இருந்தால், இவற்றுக்கு மேலும் ஆக்கம் கிட்டும் என்பது ஒரு புறம் இருக்கட்டும்; ஒரு குடையின் கீழ் இருந்தாலேயன்றி இவற்றைப் பேண முடியாது என்பதல்ல.

ஆனால், ஒரு விஷயத்தில் மட்டும் ஒரே குடையின் கீழ் இருந்தாலேயன்றி, பெரும் முன்னேற்றம் ஏற்பட முடியாது. இந்தியா பொருளாதார வல்லரசாக உயர வேண்டும் என்றால், நூற்றியிரண்டு கோடி மக்களுக்கும் பொதுவான ஒரு அரசு வேண்டும். இருபத்தியோராம் நூற்றாண்டில் இந்தியா ஒரு பொருளாதார வல்லரசாக உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, என்று உலக அறிஞர்கள் பலர் ஒப்புக் கொள்கிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அடிமைப்பட்டு இருட்டறையில் தள்ளப் பட்ட இந்தியா -

இருபதாம் நூற்றாண்டில் சுதந்திரம் பெற்று விழித்தெழுந்த இந்தியா -

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் ஒரு பொருளாதார வல்லரசாக உயர முடியும் என்பதை நினைக்கும்போது, உள்ளம் உவகையில் திளைக்கிறது. இந்தக் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது பரவசம் ஏற்படுகிறது.

நூற்றியிரண்டு கோடி மக்களும் ஒரு குடையை - ஐந்தாண்டுகளுக்கு - தேர்ந்தெடுப்பதுதான் நாடாளுமன்றத்திற்கு நடைபெறும் தேர்தல்.


ஒரு மனிதனுக்குள் பல மனிதர்கள் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். மதம் சார்ந்த மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான்; சாதிப் பற்றுள்ள மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான்; அறிவு சார்ந்த மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான்; பேராசை கொண்ட மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான்; வன்செயல்களை நாடும் மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான். இவ்வாறு ஒளிந்து கொண்டிருக்கும் மனிதர்கள், தேர்தல் காலத்தில் வெளியே வரத் துடித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களிடையே கடும் போட்டி நிலவும்: இந்தப் போட்டியில் ஒளிந்து கொண்டிருக்கும் பல மனிதர்களில் ஒருவன், வென்று வெளியே வந்து வாக்குச் சாவடிக்குள் நுழைந்து விடுகிறான். பல நேரங்களில், மதம் சார்ந்த மனிதன் வாக்களிக்கிறான். பல நேரங்களில் பேராசை வாக்களிக்கிறது, அல்லது வன்முறை வாக்களிக்கிறது.

இப்படி ஒளிந்து கொண்டிருக்கும் மனிதர்களிடையே இன்னொரு மனிதனும் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவன்தான் 'பொருளாதார மனிதன்.' தன்னுடைய பொருளாதாரம், தான் வாழ்கின்ற கிராமம்

அல்லது நகரத்தின் பொருளாதாரம், தன் நாட்டின் பொருளாதாரம் என்பதைப் பற்றிச் சிந்திக்கும் மனிதனை, வெளிக் கொண்டு வர வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். ஒளிந்து கொண்டிருக்கும் பல மனிதர்களைப் பின் தள்ளிவிட்டு, பொருளாதார மனிதன் முன் வந்து, வாக்களிக்க வேண்டும் என்பதே என்னுடைய அவா.

இந்தப் பொருளாதார மனிதன் வாக்களிப்பதற்கு முன், பல விஷயங்களைச் சிந்திக்க வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் இரண்டு பெரிய



பொருளாதார மனிதன்!

அணிகள் அமைந்துள்ளன. ஒன்று, மத்திய அரசில் இன்று ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி. மற்றொன்று, பல ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து, எட்டு ஆண்டுகளாக எதிர்க் கட்சியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி முன்னடைவு காட்டி உருவாகியுள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணி.

பா.ஜ.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை ஆராயும்போது, கீழ்க்கண்ட முக்கியத் தலைப்புகளில் அவை என்ன சொல்கின்றன என்று பாருங்கள்.

வேலை வாய்ப்பு :

வேலையில்லாமை என்பது பசியை விடக் கொடிய எதிரி. எந்தக் கட்சி வேலை வாய்ப்புகளை உருவாக்குவது பற்றித் தெளிவான சிந்தனையையும், நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டத்தையும் கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

முதலீடு :

இந்தியாவின் மொத்த வருமானத்தில் சுமார் 22% முதல் 24% வரை மட்டுமே மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது என்றால், இந்தியாவின் வளர்ச்சி ஆண்டுக்கு 5% முதல் 6% வரைதான் இருக்கும். 8% என்பதெல்லாம் பகற்கனவாகப் போய்விடும். ஆனும் கட்சி எப்படி புதிய முதலீட்டை ஊக்குவிக்கப் போகிறது, என்ற கேள்விக்குத் தேர்தல் அறிக்கையில் பதில் இருக்கிறதா என்று பாருங்கள்.

வேளாண்மை :

இரண்டு முக்கியக் கட்சிகளிலும் நகர்ப்புறவாசிகளே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இருந்த போதிலும், இரண்டு கட்சிகளிலும் வேளாண்மைத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1997 - 2002) மொத்தத் திட்ட முதலீடு 859,200 கோடி ரூபாய். இதில் வேளாண்மைக்கு ஒதுக்கியது 42,462 கோடி ரூபாய் மட்டுமே. அதாவது 4.9%. பா.ஜ.க அரசு வேளாண்மைக்குக் கொடுத்த முக்கியத்துவம் தெரிகிறதா? இன்னும் ஆராய்ந்து பார்த்தால், எல்லாக் கட்சிகளின் சாயமும் வெளுத்து விடும். 2002 2007 ஆம் ஆண்டுகளுக்கு பா.ஜ.க அரசு, வேளாண்மைக்கு ஒதுக்கியிருப்பது வெறும் 3.9%தான். 'வேளாண்மைத் துறைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று உரத்த குரலில் கேளுங்கள்.

பணவீக்கம் :

எந்தக் கட்சியால் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று கேளுங்கள். அரசினுடைய ஊதாரித்தனமான செலவுகளுக்கு, யார் முற்றுப் புள்ளி வைப்பார்கள் என்று கேளுங்கள். வருவாய்க் கணக்கிலுள்ள பற்றாக்குறையை அறவே நீக்குவீர்களா? அமைச்சரவையின் இலாகாக்களின் எண்ணிக்கையை ஐம்பதுக்குக் கீழ் குறைப்பீர்களா? பண வீக்கத்தை 3%க்குக் குறைவாக வைத்திருப்பீர்களா? என்று தைரியமாகக்

கேள்விகளை எழுப்புங்கள்.

பொதுத்துறைச் சீர்திருத்தம் :

பொதுத்துறைச் சீர்திருத்தத்தைப் பற்றி பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. பொதுத் துறையே சிறந்தது என்பது வறட்டுச் சித்தாந்தம். அதைப் போலவே, பொதுத் துறையை அறவே ஒழித்துவிட வேண்டும் என்று சொல்வதும் வறட்டுச் சித்தாந்தமே. பொதுத் துறையாகட்டும், தனியார் துறை யாகட்டும், எந்த ஒரு நிறுவனமும் போட்டிப் பொருளாதாரச் சூழலில் திறமையாகச் செயல்பட வேண்டும். உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் செல்வத்தைப் பெருக்க வேண்டும். புதிய பொருள்களைத் தயாரித்து, உலகச் சந்தையில் விற்க வேண்டும். உலகத் தரத்தை எட்ட வேண்டும். வேலை வாய்ப்பு களை அதிகரிக்க வேண்டும். அந்த நிறு வனம் விரிவாக்கப்பட வேண்டும். இவற்றை யெல்லாம் செய்யக்கூடிய ஒரு நிறுவனம் பொதுத் துறையில் இருந்தால், அது பொதுத் துறையிலேயே தொடர்ந்து இருக்க வேண் டும். அந்த நிறுவனத்தைத் தனியார் மய மாக்குவது என்பது மடமை. உதாரணமாக, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தை, ஏன் தனியார் மயமாக்க வேண்டும்? இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனை, ஏன் தனியார் மயமாக்க வேண்டும்?

அதே நேரத்தில், இந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாத நிறுவனங்களைப் பொதுத்துறையில் தொடர்ந்து வைத்திருப் பது, 'யானையைக் கட்டித் தீனி போடுவது போல' ஆகி விடும். அவை மக்களின் வரிப் பணத்தை உறிஞ்சும் நிறுவனங்கள். அவற் றைத் துணிச்சலாகத் தனியார் மயமாக்க வேண்டும். உதாரணம்: பால் கோ. தனியார் மயமாக்கப்பட்ட பிறகு அந்த நிறுவனம் பிர மிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்திருக்கிறது. புதிய முதலீடுகள், புதிய வேலை வாய்ப்புகள் என்று அமர்க்களப்படுத்துகிறது.

பொதுத் துறையைப் பற்றி எந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை, தெளிவாக ஒரு கொள்கையை அறிவிக்கிறது என்பதை கவன மாகப் படித்துப் பாருங்கள்.

உங்களுக்குள் புதைந்து இருக்கும் பொருளாதார மனிதனை வெளியே கொண்டு வாருங்கள். அந்தப் பொருளாதார மனிதன் சொல்கிறபடி வாக்களியுங்கள்.

(தொடரும்)

மாண்புமிகு டாப் டென் - 8 போட்டி முடிவு



* சங்கர்

நல்லகண்ணு பெற்ற மார்க்

65/100

தோழர் நல்லகண்ணு வுக்கு 'மார்க் போடுங்க'ன்னு கேட்டாலும் கேட்டோம். அவரது சிந்தனைகளுக்கு உண்டான மதிப்பா, சிறப்பான அவரது செயல்பாடுகளுக்கு உண்டான மதிப்பா தெரியலீங்க. கூப்பன் களை அள்ளிக் குவிச்சிட்டீங்க. பத்திரிகையாளர் சங்கர்கிட்ட நடுநிலையோடு தோழருக்கு மார்க் போடச் சொன்னோம். அவர் போட்ட அதே மார்க்கைப் போட்டு இந்த வாரம் பரிசு பெறும் வாசகர் :

குவளை எழில், பிளாட்-73, கதவு எண் 20, எஸ்.பி.ஐ. காலனி 3வது தெரு, விருகம்பாக்கம், சென்னை - 92

பரிசு பெற்ற வாசகருக்கு நான்கு பேருக்கான சினிமா டிக்கெட்டுக்காக ரூ.250 அனுப்பி வைக்கப்படும்.

பத்திரிகையாளர் சங்கர் போட்ட மார்க்

	தகுதி	முழு மதிப்பெண்	நல்ல கண்ணு பெற்றது
1.	தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்)	10	6
2.	முடிவெடுக்கும் திறன்	10	4
3.	கறைபடாத கரங்கள்	10	8
4.	அரசியல் சாணக்கியம்	10	4
5.	மனித நேயம்	10	8
6.	தொண்டர்களோடு தோழமை	10	10
7.	மேடைப் பேச்சு	10	5
8.	மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு	10	8
9.	தனிமனித ஒழுக்கம்	10	10
10.	நிர்வாகத் திறமை	10	2
	மொத்தம்	100	65

ஜகத்குரு அவர்கள் டாக்டர் சாமிகிரி சித்தருக்கு பாராட்டு பத்திரம் வழங்குகிறார்



சென்னையில், காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பீடாரோஹணப் பொன்விழா கமிட்டி சார்பில், சித்த மருத்துவர்களுக்கு பாராட்டு விழா நடந்தது. இதில் கோவை சாமிகிரி சித்தருக்கு பாராட்டு பத்திரம் வழங்கி, சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் ஆசி வழங்கியபோது எடுத்த படம்.



காது கேளாதவர்களையும், ஊமைத் தன்மை உள்ளவர்களையும் குணப்படுத்துகின்றார்

டாக்டர் சாமிகிரி சித்தர்

காது கேளாதவர்களே! வாருங்கள்!
உங்கள் நலனில் அக்கறை கொண்டோருடன் வாருங்கள்!

காதில் வலியா? இரைச்சலா? சீழ் வடிகிறதா? சரியாக காது கேட்கவில்லையா?

* 2 வேளை கிசிச்சை பெற்று 3 மணி நேரத்தில் சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள்
* அறுவை சிகிச்சை செய்தும் குணமாகாதவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்
* காது கருவி உபயோகித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில்லை.

ஊமைத்தன்மையுள்ள 7 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 3½ வருட சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்.

பரிசோதனை நேரம் : மதியம் 2.30 மணி முதல் 4 மணி வரை

Dr. சாமிகிரி சித்தர்


(தமிழக அரசு பதிவு பெற்ற ஹோமியோபதி சித்த மருத்துவர்)

காதொலி நிலைய சித்த மருத்துவமனை


Dr.S. கிரிவாசன்

383, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம்,
கோயமுத்தூர் - 641 012.
மருத்துவமனை ✆ : (0422) 2234215, வீடு: (0422) 2473291

சித்த மருத்துவர்கள்


Dr.S. கிரிராஜன்

தமிழன் T.V.யில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.55 முதல் 9 மணி வரை பேசுகிறார்.

செல்வ சுபிச்சத்தையும் தேக ஆரோக்கிய நலத்தையும் தரும்

ஆழ்நிலை தியானம்

(தபால் வழி போதனா முறை)

எவ்வித இடர்பாடுகளிலிருந்தும் ஈடேறி நிச்சய வெற்றி காணும் வழிமுறைகள் அன்றைய சித்தர்கள் ஆக்கி வைத்த அரிதான வழிமுறைகள் மிக எளிதான வழிமுறை பயிற்சிகளால் எல்லையில்லா நலன்களை அடைகின்ற அபூர்வ சித்துமுறைகள். மிக சிறிய வயதினர் முதலாய் வயோதிக பெரியவர் வரையில் செய்யக்கூடிய மிக எளிய பயிற்சிகள். அவற்றை செய்திடில் சற்றும் தவறாது நினைத்த நலன்களை அடைந்தே தீரும் சித்துக்கள். சிறிய மூச்சுப்பயிற்சிகள் வழியாக உடலில் என்ன வலியோ, நோயோ, ஜலதோஷமோ கூட பிடிக்காத நிலை ஏற்படும் அபூர்வ ஆரோக்கியம் வளரும். என்ன நோய் நொடி நெடுநாட்களாய் இருப்பினும் அது தொடர்ந்து 90 நாட்கள் செய்யின் குணமாகி ஆரோக்கிய மேன்மை ஏற்படும்.

நான்கு வித யோகங்கள் 3 வித சரீரங்கள் இவற்றின் இயக்கங்கள் இவற்றை பூரணமாய் அறிந்து கொண்டால், ஞான திருஷ்டி, மெய்ஞானம் என்ற வழியில் தனக்கு வரும் நல்லவை கெட்டவை அனைத்தையும் முன் கூட்டியே தெரிந்துகொள்ளலாம். பிறருக்கு வருவதையும் அறிந்து விடலாம்.இது பேச்சுக்காக கூறவில்லை. முற்றிலும் உண்மை.

ஒரு நிமிடத்திற்கு மனிதன் 16 மூச்சுக்கள் சுவாசம் செய்கின்றான். இவற்றை சிறிது குறைத்து பயிற்சி செய்யும் முறைகளால் நோய் நீங்குவதும் ஆயுள் கூடுவதும் எண்ணிய காரியம் ஈடேறும் சித்துக்களும் வளரும். விரைவான விவாக நிலையும், குழந்தையில்லா நிலை நீங்கி வாரிசு பெறுகின்ற நிலையும், எவராலும் தனக்கு தீங்கு இழைக்கா நிலையும், தெய்வ கடாட்சத்தால் அனைத்து ஏற்படும் சித்துக்களும் கிட்டும். மிக எளிதாக பெரிய நலன்களை அடைகின்ற மிக அரிதான வழிமுறைகள இதில் விளக்கி இருப்பதால் இதில் சிறிய ஒரு பயிற்சியை செய்தால்கூட நிச்சய மேன்மை உறுதியாக கிட்டும்.

இதையே மிகவும் அதிகமாக செய்யும் ஆர்வம் இருந்து செய்யின் அஷ்டமா சித்துக்களை அடையலாம். கூடு விட்டு கூடு பாயும் வழிமுறைகளையும் கையாண்டு உலக அதிசயங்களையும் செய்யலாம். சாதாரணமாக தொழில் வழி வாழ்வில் அதிலாபம் பெற்றிட உரிய சிறிய பயிற்சிகளை கையாண்டால் பெரிய தனவந்தராகி மாட மாளிகை கூட கோபுரம் கட்டலாம். கடனாளியாக இருப்பவர்கள் மனதை கட்டுப்படுத்தி நிலைநிறுத்தும் பயிற்சி செய்யின் பூரண லக்ஷ்மிகடாக்ஷத்தை முழுமையாக அடைந்து பெரும் கோடீஸ்வரனாகவும் ஆகலாம்.

இவற்றிற்க்கெல்லாம் அருள் நிலை வர தடைசெய்யும்

மதுபானம் செய்வதோ, புகைபிடிப்பதோ, பொடி, புகையிலை போடுவதோ போன்ற தீய பழக்கங்கள் மட்டும் இல்லாதிருக்க வேண்டும்.அப்பழக்கங்கள் அருள் நிலையை வரவிடாது. இத்தீயபழக்கங்கள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம். எனவே இத்தீயபழக்கம் இல்லாதவர்கள் காலை, மாலை தவறாது பூஜை செய்யும் உறுதியுடன் இதனை செய்யின் நிச்சயமாக பெரிய நிலைமைக்கும் சுக ஆரோக்கிய தீரேகத்திற்க்கும் உடையோகராகலாம்.

பெண் இனத்தாரும் இதனை செய்து மி பெரிய நலன்களை பெற்றிடலாம். அவ்வழியில் பலப்பல பெரிய சாதனைகளையும் செய்திருக்கின்றனர். எனவே பெண் இனத்தாரும் இதனை கைக்கொண்டு நலன் காணலாம். ஆகவே அவர்களும் ஜாதக நகலுடன்விண்ணப்பம் செய்யலாம்.

எனவே உங்கள் ஜாதக நகலுடன் *15-05-2004* தேதி மாலைக்குள் 'ஆழ்நிலை தியானம் கற்றிட விரும்புகின்றேன்' என எழுதி அனுப்புங்கள். கிடைத்தவுடன் உரிய படிவம் அனுப்புகின்றோம். பாடம் அனுப்பும் போது உங்கள் ஜாதகப்படி எப்படி பயிற்சிகளை துவங்கிடலாமென்பதையும் எழுதுகின்றோம். நிச்சயமாக இதன் வழியாக உயர்வு அடைகின்ற விதி அமைப்பு உடையவர்கள் கண்ணில்தான் இந்த விளம்பரம்படும். உரிய நாளில் மனுச்செய்து உரிய பயிற்சிகளை பெற்று நிச்சய உயர்வு அடைவார் என்பது விதியின் தீர்ப்பு.எமது பூரண நல்லாசிகள்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர், இராஜயோக பயிற்சியாளர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி


தபால் பெட்டி எண்: 55

பிளாட்எண்:204,அண்ணாநகர் மதுரை-625 020 தமிழ்நாடு


(0452)
2533412
2650576

ஸ்ரீதாரண வருஷ பலன்கள்


அக்னிசர்மா பக்கம்




மேஷம்: முதல் ஐந்தரை மாதங்களுக்குச் சுபப் பலன்களும், பின்வரும் காலங்களுக்குச் சாதாரண பலன்களும் ஏற்படும். 5ரு 5ல், சனி 3ல் என்பது சிறப்பு. எடுக்கும் ரந்த முயற்சியிலும் அனுகூலம் உண்டு. ஆகஸ்ட் - ஜனவரி பிரயாணங்களில் கவனம் தேவை. பெண்களுக்கு செப்டம்பர் வரை யோக காலம். அக்டோபருக்குப் பிறகு உடல் நலம் பாதிக்கப்படும். குல தெய்வப் பிரார்த்தனை நன்மை தரும். தேவி வழிபாடு செய்யவும், 2005 ஜனவரியில் இனிய திருப்பங்கள் நிகழும்.




ரிஷபம்: வருட முற்பகுதியில் நான்காம் இடத்திலிருக்கும் குரு பகவான், ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் இடத்துக்கு மாறுகிறார். இதனால் முதல் ஐந்து மாதங்கள் எந்த விசேஷமும் இல்லாமல் நகரும். பின்பு பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டு, சௌக்கியமாக இருப்பீர்கள். சனி பகவான் அதிசாரமாக 3ம் இடத்தில் இருப்பது செப்டம்பரில் நல்ல திருப்பங்களுக்கு ஆதாரமாக அமையும். பெண்களுக்கு எல்லாம் நல்ல பலன்களே! ஸ்ரீ விநாயகருக்கு அருகம்புல் சார்த்தி வழிபடவும்.




மிதுனம்: பொதுவான பலன்களைச் சொல்ல நேர்ந்தால், அத்தனை சிலாக்கியம் இல்லைதான். உங்கள் ஜாதக யோக பாவங்கள் சாதகமாக இருந்தால், தடைகள் விலகி நன்மை ஏற்படலாம். ராகு 11ல் சஞ்சரிப்பது கொஞ்சம் ஆறுதலான சமாசாரம். தெய்வ பலத்தை அபிவிருத்தி செய்து கொள்வது நல்லது. அவசரம், வீண் பதற்றம் கூடாது. இரண்டாவது சுற்று ஏழரைச் சனி என்பதால் கவலைப்படத் தேவை இல்லை. ஓரளவு நல்ல பலன்களே ஏற்படும்.



கடகம்: முதல் நான்கு மாதம் உத்தியோகஸ்தர்களுக்குப் பிரச்னை இருக்காது. ஆகஸ்டுக்கு மேல் அதிருப்தி, எதிர்பாராத இடமாற்றம் போன்ற சிறு சிறு அசௌகரியங்கள் ஏற்படலாம். மருத்துவம் சார்ந்த துறையினருக்கு யோக காலம். குரு பலம் நிறைந்து இருப்பதால், சுப காரிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அக்டோபர் முதல் பிப்ரவரி வரை புதிய முயற்சிகள் வேண்டாம். ஜனவரி 2005க்கு மேல் மகிழ்ச்சியான பலன்கள் ஏற்படும். வாழ்க்கைத் தரம் உயரும்.



சிம்மம்: உங்கள் ராசிநாதன் சூரியன், இந்த ஆண்டின் மகாராஜா! எனவே மிகவும் அதிர்ஷ்டமான வருஷமாக அமையும். குறிப்பாக அரசு காரியங்களில் அனுகூலமான பலன்களே உண்டாகும். ஆகஸ்ட் - செப்டெம்பர் மாதங்களில் ஆரோக்கிய மேன்மையும் புத்திரர்களால் தாய் தந்தைக்கு நன்மையும் உண்டாகும். இந்த ராசிக்காரர்களுக்கு வருஷ ஆரம்பத்தில் குரு ஜென்ம ராசியில் சஞ்சாரம் என்பதால் குரு கிரக ப்ரீதி, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வழிபாடு, சூரிய நமஸ்காரம் போன்றவை செய்வது நலம் பயக்கும்.




கன்னி: இந்த வருஷம் ரொம்ப சுமாராகத்தான் இருக்கப் போகுது. குரு பகவான் பன்னிரண்டிலும், சனிபகவான் பத்திலும், ராகு எட்டிலும், கேது இரண்டிலும் சஞ்சாரம் என்பதால் தொழில், உத்தியோக ரீதியாக உற்சாகப் பலன்களை எதிர்பார்க்க வேண்டாம். செப்டம்பருக்குப்


கல்யாணத்துக்குப் பிறகு நடிப்புக்கு 'குட்பை' சொல்லிவிட்ட சிம்ரனுக்கு (சிம்மம்) இந்த வருடம் அதிர்ஷ்டம் நிறைந்ததாம்!




பிறகு மெள்ள சூழ்நிலை மாறும். ஜனவரி 2005ல் பிரகாசமான வாய்ப்புகள் தோன்றும். தெய்வீக ஈடுபாடு கொண்டு, சிரத்தையாக உழைக்கவும். வீண் செலவுகளைத் தவிர்க்கவும். ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி வழிபாடு நன்மை தரும்.



துலாம்: வருஷ ஆரம்பம் ரொம்ப நிறைவா இருக்கும். பொருளாதார ரீதியா மேன்மை, நினைத்த காரியங்களில் வெற்றி என ஆதாயம் குவியும். ஆனால் செப்டம்பர் மாதம் முதல் சிறு சிறு சிக்கல்கள் ஏற்படும். செலவினங்கள் ஏற்படும். அக்டோபர் - ஜனவரி 2005, ஆரோக்கிய விஷயத்தில் கவனம் தேவை. குரு, கன்னிராசிக்குப் பிரவேச காலத்தில் குரு கிரகப் ப்ரீதி, ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிக்கு அர்ச்சனை செய்வதால் கஷ்டங்கள் குறையும்.



விருச்சிகம்: சென்ற ஆண்டில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் யாவும் விலகும். வருஷ ஆரம்பத்தில் ராகு 6ல், சனி 8ல், குரு 10ல், கேது 12ல் சஞ்சரிப்பதால் பொன்னான பலன்களை எதிர்பார்க்க முடியாது. ஆகஸ்ட் மாதம் குரு 11ல் சஞ்சாரம் ஆனதும், உங்கள் காட்டில் அதிர்ஷ்டமழை கொட்டும். மக்கள் நலம் நன்று. பிரபு தனவான்கள் உதவ முன்வருவார்கள். பெண்கள் நினைத்தது நிறைவேறும்.




தனுசு: சனி பகவான் வருஷம் பூராவும் 7ம் இடத்தில் சஞ்சாரம். ஆனால் ஆவணி மாதம் முதல் மார்கழி மாதம் வரை அதிசாரமாக கடக ராசியில் இருப்பார். நல்லதும் அல்லாததுமான பலன்கள் கலந்தே வரும். குரு/கேது பலம் கூடி இருப்பதால் தொழில் வகையில் அனுகூலம் ஏற்படும். பண விஷயத்தில் கவனம் தேவை. வயதான தாயார் இருப்பின், மருத்துவச் செலவுகள் கட்டுக்கடங்காது. சனி பகவான் 7ல் சஞ்சாரம் என்பதால், அன்னதானம் செய்து வரவும். சனிப்ரீதி நன்மை தரும்.



மகரம்: வருஷம் முழுக்க குரு பகவான் கை கொடுத்து உங்களை உயர்த்துவார். சனி பகவான் 6ம் இடத்தில் இருப்பதால் எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் மறைவாங்க. கலைத் துறையைச் சார்ந்தவர்கள் முன்னணிக்கு உயர்வார்கள். சனி/கேது சஞ்சாரம் மிக அனுகூலம் என்பதால், எடுத்த காரியங்களில் படு வெற்றி. குரு கிரகப் ப்ரீதி, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அர்ச்சனை செய்ய, சிறு சிறு பிரச்னைகள் விலகும். சிவ தரிசனம் கோடி புண்ணியம் தரும்.



கும்பம்: சனி பகவான் சுக ஸ்தானமான 4ம் இடத்திலும் ராகு 2ல் கேது, 8ல் சஞ்சாரம் செய்வதால், முன்பகுதியில் அளவோடு நன்மையும் பிற்பகுதியில் அபார நன்மையும் ஏற்படும். குடும்ப ஸ்தானத்தில் ராகு 2ல் இருப்பதால் அதிக செலவுகள் ஏற்படும். பண நெருக்கடி ஏற்படும். புத்திரர்கள் மூலம் சௌக்கியம் ஏற்படும். பொருளாதார நிலையில் மேன்மை கிட்டும். வருஷ பிற்பகுதியில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.



மீனம்: ஆவணி முதல் அட்டகாசமான பலன்களை அனுபவிக்கப் போகிறீர்கள். சனி பகவான் அதிசாரமாக கடக ராசிக்குப் போனதும், உங்களுக்கு எல்லா வகையிலும் ஏற்றம் உண்டாக்கும். சனி பகவான் சுகஸ்தானமான 4ம் இடத்திலும் ராகு 2ல் கேது 8ல் சஞ்சாரம் செய்வதால், முன் பகுதியில் அளவான நன்மைகளே எதிர்பாருங்க. செப்டம்பர்வரை மாணவர்களுக்கு எச்சரிக்கைக் காலம். ஜாதகத்தில் தசா புத்தி யோகங்கள் சிறப்பாக இருந்தால் கவலைப் படத் தேவையில்லை.



''என் மாப்பிள்ளை கோவிச்சுக்கிட்டு, இனிமேல் வாசல் மிதிக்க மாட்டேன்னு போனார்.''

''அடடே... அப்புறம்?''

''கொல்லைப்புறமா வந்து போயிக்கிட்டிருக்கார்!''

- எம். அசோக்ராஜா

அசுத்தமான நீருக்கு முற்றுப்புள்ளி!
தூய குடிநீர் பருக இன்றே ஆரம்பியுங்கள்!

உங்கள் தேடுதலுக்கு வையுங்கள் ஒரு முற்றுப்புள்ளி. குடிநீர் சேமிப்பு தொழில்நுட்பத்தில் ஒரு புதிய புரட்சி வழங்குகிறோம். அனைத்திலும் சிறந்த சாய் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் குடிநீர் சேமிப்பு தொட்டிகள் மூலம் பல்லாண்டு காலத்திற்கு நீங்கள் சுகாதாரமான குடிநீர் பெறமுடியும். உங்கள் குடும்ப ஆரோக்கியம் குறையின்றி காக்கப்படுகிறது.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
குடிநீர் சேமிப்பு தொட்டிகள்

Sai
Saves

- 100% கிருமிகளற்ற பாதுகாப்பான குடிநீர்.
- துளிநீர் கூட தொட்டிகளில் தங்காது.
- அதிவேகத்தில் நீர் வெளிவரும் ஆற்றல்.
- வழவழப்பாவது தடுக்கப்படுகிறது.
- பூச்சி மற்றும் தூசி தொட்டியினுள் நுழையாத வடிவமைப்பு.
- தானாகவே சுத்தம் செய்துகொள்ளும் எளியமுறை.
- வெப்பத்தை தாங்கவல்லது.
- நீர்கசிவில்லை. சுற்றுசூழலுக்கு ஏற்றது.
- பாசி படர வாய்ப்பே இல்லை.
- நச்சுத்தன்மையற்றது.
- துர்நாற்றமடிக்காது.
- துரு பிடிக்காது.
- ஒருமுறை முதலீடு.



ஆயுள்முழுக்க
ஆரோக்கியம்

SATHYASAI TRADERS

320-D, PVG Towers, Avinashi Road, COIMBATORE - 641 004

Ph : 0422 - 2595427 Mobile : 0422 - 3141468

Retire in


peaceful luxury

Soundaryam. A "beautiful" and exclusive residential enclave with basic amenities, clean environment and total security. Set amidst a coconut grove and landscaped greenery, it is located on **Siruvani Road, 2 kms** from **Perur Temple** at **Coimbatore**, Tamilnadu.

A Comfort Home for people above 50 years of age, at Soundaryam you get to enjoy :

- Independence to continue with your lifestyle
- An ideal family atmosphere
- Total Security (24 x 7)
- Best of comforts at an affordable cost
- A **Medical Centre** with ambulance for emergencies
- Centralised services of maid, gardener, electrician, plumber and carpenter etc
- A **Recreation Centre** with facilities for a **restaurant**, library, internet facilities, card room etc
- Complete infrastructure to include black-topped roads, clean water, drainage, street lights, walkers' pathway etc

Excellent comfort at affordable cost : Rs. 7.75 - 9.25 lakhs.



Project Highlights

- Single and Double bedroom villas with attached toilets, from 710 to 900 sq ft plinth area on a 4 cent plot (Five designs)
- Free-hold Property
- Individuals below 50 years can also invest (Conditions apply)
- Superior specifications to include **Somany Tiles, Finolex Cables,** MCBs & Phase Changers from **GEM,** Switches from **Toyama,** Sanitary ware from **Hindware, Jaquar** Bathroom Fittings, **Asian Paint, Ultra Designer Tiles, UPS, Tata BP Solar Cooker** etc
- Central water supply
- Sewage treatment plant for recycling water

BOOKINGS OPEN

50% sold out

Project Developers :

COVAI PROPERTY CENTRE (INDIA) PRIVATE LIMITED

Consulting Architect :
Ms. Mini M Fowler
Coimbatore

C-601, Pioneer Apartments, 1075, Avinashi Road, Coimbatore - 641 018. Ph : 91-422-2216867, 2217625. Fax : 91-422-2216867 Contact : **Ms Gita Ramesh, Chennai - Ph : 044 - 52115268**
www.covaiprop.com E-mail : covaiprop@vsnl.net

AN EX-SERVICEMAN'S ENTERPRISE

BuLLs eYe/CPC/FP/0-

செய்திகள் திரிப்பது செம்பியன்

புது தில்லி. பிரதமர் இல்லத்தின் குளியல் அறையிலிருந்து, "ஏப்ரல் ஃபூல்! கோ டு ஸ்கூல்..." என்று பாட்டு பிரமாதப் பட்டுக் கொண்டிருந்தது! வாஜ்பாயி குளித்து விட்டு வரும் வரை காத்திருந்து, "அபாரமா பாடறீங்களே" என்றேன்.

"பின்னே... ஷரத் பவாரும், சோனியாவும் சேர்ந்து ஒரே மேடையில் ஏப்ரல் முதல் தேதி தோன்றினால், எனக்குப் பள்ளிக்கூட நாட்கள் ஞாபகம் வராதா? உருளைக் கிழங்கை இரண்டாவெட்டி AF என்ற எழுத்துக்களை அதில் வலம் இடமாகச் செதுக்கி, ஸ்டாம்ப் பாடில் அழுத்தி..."

'நில்லுங்க! என் முதுகில் AF குத்திடப் போறீங்க...! சோனியாவும் பவாரும் ஏப்ரல் முதல் தேதி மட்டும்தான் ஜனங்களை ஏப்ரல் ஃபூல் ஆக்கப் பார்க்கிறாங்க, ஆனா, பி.ஜே.பி. வருஷம் 365 நாளுமே... ஹிந்துத்வா பேசி..."

"மக்களை முட்டாளாக் கறோம்னு சொல்றியா... உன்னை... உன்னை...'' என்னைத் தாக்குவதற்கு என்ன அகப்படும் என்று தேடினார்.

"தேவையில்லைங்க, இதோ நான் கிளம்பறேன்; புறப்படறதுக்கு முன்னாடி ஒரே ஒரு விஷயம். இந்திய அணியின் இன்னிங்ஸ் வெற்றியைப் பாராட்டின நீங்க, பாகிஸ்தான் அணிக்கு "பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்"னு ஒரு சின்ன வாழ்த்து தெரிவிச்சிருக்கலாம், அதுக்குப் பேருதான் டிப்ளமஸி...!"

"என்னப்பா பௌன்ஸர் போடறே!"

"பாவம், அவங்களும் ஜெயிக்கணும்னு ஆசைப்பட்டுத்தானே ஆடினாங்க... பாகிஸ்தான் முதல்ல பாட் பண்ணியிருந்தா, கதை வேறுவிதமா கூட முடிஞ்சிருக்கலாம்... பிட்ச் அப்படி!"

அவர் பதிலுக்குக் காத்திராமல் நேரே குஜராத் வந்து சேர்ந்தேன். மோடி பிரசாரத்தில் தீவிரமாயிருந்தார். 'நீங்க அடிச்ச ஸ்டண்ட்டுகளிலேயே பிரமாத ஸ்டண்ட், அத்வானியுடன் காந்தி பிறந்த இல்லத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தி விட்டு, இரண்டாம் கட்ட பிரசாரத்தை ஆரம்பிச்சதுதான்'' என்றேன்.

"காந்தி என்ன, காங்கிரஸின் தனிச் சொத்தா?" என்று கேட்டார் மோடி.

'அவர் உங்களுக்கும் தேசப் பிதாதான். ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் தந்தைதான். நீங்க அவரை வேண்டாம்னு ஒதுக்கக் கூட முடியாது. ஆனா அவருக்கு அஞ்சலி செலுத்திய கையோட உங்க பிரசாரம் சூடு பிடிக்க, 'சோனியா, பலகாரக் கடையில் பணியாற்றக் கூட லாயக்கில்லை, ராகுல் கார் டிரைவர் வேலைக்குக் கூட பிரயோஜனமில்லை' என்றெல்லாம் பேசினீங்க பாருங்க... காந்திஜியின் ஆத்மா பரம சாந்தி அடைஞ்சிருக்கும்."

"அப்படிச் சொல்லு! என்ன ஸூப்பர் ஐடியா பார்த்தியா! அயல்நாட்டவர் சமாசாரமெல்லாம் பழசாகி, அலுத்துப் போச்சு!"

"ஆமாங்க, எங்க ஊருல உடான்ஸ்



* ராகுல்

* மோடி

* பவார்

உடற வெற்றி கொண்டான், சி.ஆர். சரஸ்வதி எல்லாம் இனிமே உங்ககிட்ட வந்து பாடம் படிக்கணும்'' என்று கூறிவிட்டு, மறுபடி டில்லி வந்து சேர்ந்தேன்.

ராகுல் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டார். "கன்னிப் பேச்சு, எப்படி!" என்றார்.

"கொன்னுப்புட்டீங்க! என்னைத் தூற்றுங்கள்; என் தாயாரை, என் குடும்பத்தைத் தூற்றுங்கள்; கவலை இல்லை! எங்கள் இதயம் எப்போதும் இந்தியாவுக்காகவே துடிக்கும்... ஆஹா! கருணாநிதியிடமே கண்ணீர் வரவழைச்ச பேச்சுன்னா சும்மாவா!"

"தாங்க்யூ" என்றார் ராகுல்.

இளம் முகத்தில் இனிய புன்னகை தவழ, 'வசீகரா' பாடலாம் போல இருந்தது!

"ஒரே ஒரு ரிக்வஸ்ட்" என்றேன்.

"என்ன?"

"இந்தத் தேர்தல் ரிஸல்ட் எப்படியானாலும் சரி, நீங்க ஒரு காரியம் பண்ணணும். உ.பி.ல ஒரு குக்கிராமத்துல ஒரு சின்ன வீட்டை வாடகைக்கு எடுத்துக்கிட்டு, அதில் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளாமல் ஒரு வருஷம் வாழணும். அப்பத்தான் உங்களுக்கு இந்தியாவின் இதயம் எப்படித் துடிக்குதுன்னு புரியும்!"

"யோசிக்கிறேன்" என்றார்.

"இன்னொண்ணு-- அந்த கொலம்பியா கேர்ல்ஃபிரண்ட் உங்களைப் பார்க்க அந்தக் கிராமத்துக்கு அந்த ஒரு வருஷம் வரக் கூடாது!"

"அது ரொம்பக் கஷ்டம்" என்றார்.

"கஷ்டப் படணும்னு தான் சொல்றேன். அந்த ஒரு வருஷ அனுபவம் உங்களைப் பண்படுத்தும். இந்த நாட்டை நாளைக்கு வழி நடத்திச் செல்ல உங்களுக்கு உதவும்!"

"பயமுறுத்தாதேப்பா!" என்றார் ராகுல்.

விமானமேறி சென்னைக்கு வந்து சேர்ந்தேன். நேரே கோபாலபுரம் போய், "இல.கணேசன் தன் மூக்கிலே போட்டுக் கொண்ட பிளாஸ்திரியை இன்னும் எடுக்கலைங்க" என்றேன்.

கலைஞர் முரசொலியைத் தாழ்த்தி தலையை உயர்த்தினார். "என்னப்பா புதுசா சிண்டு முடியறே?" என்றார்.

"கணேசனுக்கு என்னைவிடவும் ராமாயணம் நன்றாகத் தெரியும்; சாதாரணமாக ராம-லக்ஷ்மணர்கள் போல என்றுதான் சொல்வோம்; கணேசனோ, வாஜ்பாயியையும் அத்வானியையும், ராமருக்கும் பரதனுக்கும் ஒப்பிடுகிறார்! அப்படின்னா என்ன அர்த்தம்னு கேட்டீங்க, பாருங்க..."

"என்ன அர்த்தம்? நீயே சொல்லு!"

"ஒருத்தர் காட்டுக்குப் போகணும்; இன்னொருத்தர் நாடாளணும்..."

"இதைத்தான் நோஸ் கட்னு குறிப்பிட்டியா?-- நான் சூர்ப்பனகையை நினைச்சுக்கிட்டு..."

"யாரை சூர்ப்பனகைன்னு குறிப்பிட நீங்க...?"

"வம்பு பண்ணாதே, கிளம்பு!"

"இதோ கிளம்பிட்டேன்... ராகுல் காந்தியின் கன்னிப் பேச்சைக் கேட்டு நீங்க கண்ணீர் விட்டதை அம்மா கிண்டல் பண்ணினது தெரியுமில்லே... நாடகமாட நீங்களாம்... நல்லா நடிப்பீங்களாம்!"

"உண்மைதான். நான் பல நாடகங்களில் நடிச்சவன்தான். நன்றாக நடிப்பேன் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. ஆனா அதே பாராட்டை எத்தனையோ சினிமாக்களில் நடிச்சிருக்கிற அந்த அம்மாவுக்கு என்னால வழங்க முடியலை. அதனாலதான், அவருக்கு நடிப்புக்கும் நிஜத்துக்கும் வித்தியாசம் தெரிய மாட்டேங்குது!" என்றார் மு.க.

"STOP PRESS! STOP PRESS!" என்று அலறிக் கொண்டு அவசரம் அவசரமாக கல்கி காரியாலயம் திரும்பினேன்.

"அந்தக் கூட்டணியினர், எலக்‌ஷனுக்கு முந்தியே பட்டாசு வெடிச்சு, கொண்டாடறாங்களே? ஏன்?"

"எந்தச் சிக்கலும் இல்லாமல் 'தொகுதி உடன்பாடு' ஏற்பட்டுடுச்சாம்!"

- அப்துல்



புதிய வெளியீடுகள் - **தெய்வீகக் குரல்**

ஸ்ரீ. அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார், ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாஸ அய்யர் இருவரும் அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்வரப்படுத்தியது. கிரவுன் ¼ அளவில் சுமார் 700 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த ஆண்டிக் பேப்பர், முழு வண்ண முகப்பு கா்லிகோ பவுண்டு, ஒரே வால்யூமாக ஸ்வர ஸாஹித்யங்களுடன் விலை ரூ. **450/-** (பொருளடக்கம்)

1. ச்யாமா சாஸ்திரிகள் - கீர்த்தனங்கள் (முழுதும் ஸ்வரத்துடன்)
2. ஸ்வாதித் திருநாள் - கீர்த்தனங்கள் (")
3. சதாசிவ ப்ரும்மேந்திரர் - கீர்த்தனங்கள் (")
4. பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் - கீர்த்தனங்கள் (")
5. தியாகராஜ கீர்த்தனைகள் பஞ்சரத்ன கீர்த்தனைகள் உள்பட - ஸங்கீத வித்வான் ஸ்ரீ T.S. பார்த்தசாரதி அவர்கள் (")
6. அருணாசலக் கவிராயர் - ராம நாடகக் கீர்த்தனைகள் (")
7. ஆண்டாள் பாசுரங்கள் - ஸ்வரத்துடன் (")
8. ஸ்ரீ ராமானுஜர் நூற்றந்தாதி - ஸ்வரத்துடன் (")
9. ஸ்ரீ மகாகவி பாரதியார் பாடல்கள்- ஸ்வரத்துடன் (")
10. பங்கிம் சந்த் ஸ்ரீ சடோபாத்யாய மங்கள கீதம் ஸ்வரத்துடன் (")

வால்மீகி ராமயாணம்

11. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஸுந்தர காண்டம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழில் மூலமும் வரிக்குவரி விளக்க உரையும் ரூ. 270.00
12. ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் அவர்களின் அபூர்வ ராகக் கீர்த்தனைகள் ஸ்வர ஸாஹித்யத்துடன் 5 தொகுதிகளாக ரூ. 470.00
13. அன்னமாச்சாரியர் - கீர்த்தனைகள் ரூ. 80.00
14. ப்ராசீனஸம்ப்ரதாய ஹரி ஹர குஹ, பஜனாம்ருதம் புதிய பதிப்பு ரூ. 190.00
15. ஜயதேவர் அஷ்டபதி (ஸ்வரத்துடனும் அர்த்தத்துடனும் ராதாகல்யாணத்துடன் மூன்று புத்தகங்கள் ரூ. 24/-24/-15/-
16. மஹாராஷ்ட்ர ஹிந்தி பஜனைகள் (புதிய பதிப்பு) - ரூ. 35.00
17. ஸத்குரு ஸ்ரீ தியாகராஜரின் 700 கீர்த்தனங்கள் ரூ. 175.00
18. மகாகவி பாரதியார் - எழுத்துகள் முழுவதும் அடங்கிய ஒரே நூல், கவிதைகள், கட்டுரைகள், கதைகள், பகவத் கீதை (விளக்கவுரை) நான்கும் சேர்ந்து ஒரே தொகுதி (Foure in one) 900 பக்கம் விலை ரூ. 125/-
19. ப்ராசீன ஸம்ப்ரதாய ஸ்ரீசிவ பஜன மாலா (சிவாஷ்டபதி, திவ்யநாமம், டோலோத்ஸவம் உள்பட விலை ரூ. 30/-
20. மனுதர்ம சாஸ்திரம் விலை (புதிய பதிப்பு) ரூ. 90/-
21. கிருஷ்ண லீலா தரங்கிணி விலை (புதிய பதிப்பு) ரூ. 45/-
22. ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம் - ஆதிசங்கரர் உரையுடன் ஸமஸ்கிருத மூலம் தமிழில் (விளக்க உரையுடன்) விலை ரூ. 51/-

நேரில் வந்து வாங்குபவர்களுக்கு விசேஷச் சலுகை உண்டு.

பாகவத சிரோமணி, பாகவத சூடாமணி,
பாகவத ரத்னம், பஜனபூஷணம், கோடையிடி
ரத்னம் ஏ. கே. கோபாலன் பப்ளிஷர்,
நெ. 9/2, சேது தெரு, நேரு நகர், சாலிக்கிராமம், சென்னை 600 093.
போன் 23763055, 24451673



• லிட்டில் இதாலி



• சாலைகள்

‘எங்கள் ஊரைக் கண்டு நீங்கள் காதல் கொள்ளாமல் இருக்க முடியாது’ என்கிறார்கள் ஸாண்டியாகோவாசிகள். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது போல, எல்லா ஊர்க்காரர்களுக்கும் அவரவரது ஊர், எல்லாராலும் காதலிக்கப்பட வேண்டிய தகுதி பெற்றது. நான் பெங்களூரைப் பற்றி பெருமை அடித்துக் கொள்வது போல என்றுதான் ஸாண்டியாகோவைப் பற்றி நினைத்தேன். ஆனால் அது வெற்றுப் பீற்றல் இல்லை என்பது, அங்கு கால் வைத்ததுமே உணர முடிந்தது. இருபதாயிரம் ஆண்டுகளாக மனிதன் வாழ்ந்து வரும் கடற்கரைப் பிரதேசமாக நினைக்கப்படுகிற ஸாண்டியாகோ கரைக்கு, 16ம் நூற்றாண்டில் முதலில் ஒரு ஸ்பானியர் வந்து இடம் பதித்ததும், அடுத்ததாக வந்த மற்றொரு ஸ்பானியர் புனித ஸாண்டியாகோ திருநாளன்று கரையைத் தொட்டதால், பிறகு அந்த ஊருக்கு ஸாண்டியாகோ என்று பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. மெக்ஸிகோ நாட்டு விளிம்பை ஸாண்டியாகோ தொடுவதால், நிறைய மெக்ஸிகர்களும் இங்கு உண்டு. தங்கச் சுரங்கங்களின் கண்டுபிடிப்பு பல இனத்து மக்களை இங்கு ஈர்த்தது. தங்கம் இப்போது வறண்டு விட்டது. ஆனால் தங்கத்துக்கு மேற்பட்ட வரும்படியை சுற்றுலாத்துறை அளிக்கும் என்று நினைக்கிறேன். மனத்தைக் கவரும் கடற்கரைகள், வருடம் முழுவதும் மிதமான சீதோஷ்ணம் (பெங்களூரைப்போல), பழமை எழில் மாறாத/, அதாவது பழசை மாற்றாமல் புதுப்பிக்கப்பட்ட, சரித்திரம் பேசும் காஸ் லாம்ப் குவார்ட்டர் என்னும் பகுதி, இத்தாலியர்கள் அதிக பட்சம் வாழும் லிட்டில் இத்தாலி, பிரபல இத்தாலியர்களின் பெயர் கொண்ட அதன் தெருக்கள், ஐரோப்பாவை ஞாபகப்படுத்தும் நடைபாதையில் விரியும் ரெஸ்டாரண்டுகள், கலகலவென்று உற்சாகத்துடன் சிரித்துப் பேசும் (அதிக பட்சம் ஸ்பானிய மொழி) ஹிஸ்பானிய, அமெரிக்க, மெக்ஸிக இனத்து மக்கள், அதிகாலையில் காலார நடக்க கொள்ளை அழகு கொண்ட சாலைகள், சுலபமாகப் பயணிக்க டிராம் போன்ற டிராலி ரயில்கள்... சுற்றுலாப் பயணிகளின் மனத்தைக்



"ஐயையோ... தமிழ்ப் பையனா?"









அமெரிக்க டயரிக் குறிப்பு 5

* ஜூவில்

கொள்ளை கொள்ள, இன்னும் ஏராளமான விஷயங்கள்... காரொனாடோ என்று ஒரு இடம்.

அதில் மன்னர் காலத்து ஐரோப்பிய கோட்டை - அரண்மனை பாணியில் 'டெல் கா ரொனாடோ' என்று பிரமிப்பூட்டும் ஒரு ஹோட்டல் இருக்கிறது. அதுவே ஒரு சுற்றுலாக் கவர்ச்சியாக, மியூசியத்தைப் பார்வையிடுவது போல, சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும் டூர்கள் தங்களது அட்டவணையில் டெல் காரொனாடோவை சேர்த்து அழைத்துச் செல்கின்றன. (பணமுள்ளவர்கள் அடுத்த டிரிப் அங்கு தங்குவார்கள் என்ற வியாபார நோக்கில்). எனக்கு அங்கு தங்க வசதி இல்லாவிட்டாலும், அதைக் காண்பதே ஒரு பரவச அனுபவம் என்று நான் சமாதானமானேன். காரொனாடோ மொத்த இடமே, செல்வத்தின் இருப்பிடமாகத் தோன்றுகிறது.

இனம் இனத்தோடு

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து சேர்ந்திருக்கும், பல்வேறு தட்பவெப்பத்துக்குப் பழகிய விலங்குகளும், பறவைகளும் ஸாண்டியாகோ ஜூவில், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கிற சித்தாந்தத்துடன் இசைந்து வாழ்ந்துவருவதைப் பார்த்து சிலிர்த்து நான் நின்ற வேளையில், தமிழ் ஓசை கேட்டு தன்னிச்சையாக மேனி சிலிர்த்தது. அது வெட்கப்பட வேண்டிய விஷயமா, பெருமை கொள்ள வேண்டியதா என்று புரியவில்லை. பறவைகள் பிரிவில் ஆஸ்திரேலிய பஞ்ச வர்ணக் கிளிகளின் காதல் சல்லாபத்தை ரசித்தபடி நான் நிற்கையில், எனக்குச் சற்றுத் தள்ளி ஒரு இளம் இந்திய ஜோடி நின்றிருந்தார்கள். மெல்லிய கிளுகிளுத்த குரலில் காதில் விழுந்த மிகச் சில சொற்கள் தமிழ்ச் சொற்கள். அந்தப் பெண் திரும்பினாள். ஜீன்ஸும் குட்டை முடியுமாக இருந்தாலும், முகம் தமிழ் என்று சொன்னது. என்னைப் பார்த்துப் புன்னகைத்து அமெரிக்க பாணியில் 'ஹை!' என்றபடி நகர்ந்து சென்றாள். கூட வந்திருந்த ஒரு அமெரிக்கருடன் அவள் பேசும் ஆங்கில உச்சரிப்பைக் கேட்டபோது, அவள் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவள் என்று புரிந்தது. அவளுடைய கணவனாகத் தோன்றிய இளைஞன், தமிழ்நாட்டுச் சிறிய ஊரிலிருந்து வந்தவன் போல் சாதுவாக, கூச்சத்துடன் புன்னகை செய்யாமல் (தெரிந்தவர், தெரியாதவர், முதியவர், இளையவர் என்று தெருவில் யாரைப் பார்த்தாலும் அமெரிக்கர்கள் புன்னகையுடன் 'ஹை' என்பார்கள்) பின் தொடர்ந்தான். இந்திய வளர்ப்பின் இறுக்கத்திலிருந்து விடுபட, அவனுக்கு சிறிது அவகாசம் தேவை என்று நான் கணக்குப் போட்டேன். அந்தப் பெண் இங்கு வாழும் இந்தியர்களின் இரண்டாம் தலைமுறையாக இருக்கும் என்று அனுமானித்தேன்.

அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த, அதிக பட்சம் அமெரிக்க ஆங்கிலமே பேசும் தமிழ்ப் பெண், அவளுக்கு நேரடிப் பரிச்சியமில்லாத இந்தியச் சூழலில் வளர்ந்து, ரத்தத்தில் ஊறிப் போன கலாசாரப் பதிவுகளுடன் அமெரிக்காவில் வேலை பார்க்கவும், தங்கவும் வந்திறங்கும் வாலிபனோடு ஒத்துப்போவது, சாத்தியமா என்று

எனக்குக் கவலையேற்பட்டது.

ஒரே இனம், என்றாலும் முரண்பாடுகள் உண்டு

இருவரையும் இணைத்தது, காதலோ, பெற்றோரின் ஏற்பாடோ, என்றாலும், பிறப்பும் வளர்ப்பும் மிக வித்தியாசமான கலாசாரங்களில் என்பதால், முரண்பாடு இல்லாமற் போகாது என்று தோன்றியது. இங்கு பிறந்து வளரும் இரண்டாம் தலைமுறைப் பெண்களுக்கு, இந்தியாவிலிருந்து படிக்க வரும் வாலிபர்களைக் கண்டாலே அலர்ஜி என்றான் என் மகன். அவர்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் இல்லை. இந்தியாவில் கட்டுப்பாடான குடும்பச் சூழலிலிருந்து வரும் பையன்கள் அமெரிக்காவுக்கு வந்ததும், செக்ஸ் சுதந்திரம் கிடைத்ததாக நினைக்கிறார்கள். அமெரிக்காவில் பிறந்து வளர்ந்ததாலேயே, இந்தியப் பெண்கள் கூப்பிட்டவுடன் இணங்குவார்கள் என்று நினைத்துத் தவறாக நடக்க முயல்வதாகவும், அதனாலேயே, அவர்களை ஒதுங்கி விடுவதாகவும், ஓர் அமெரிக்கா வாழ் குஜராத்திப் பெண் தன்னிடம் சொன்னதாகச் சொன்னான். இந்த விவரம் என்னைச் சங்கடப்படுத்தியது. உண்மையில் அனுபவித்த சில சம்பவங்களே, இத்தகைய பொதுவான அபிப்பிராயம் உருவாகக் காரணமாகியிருக்க வேண்டும். இது மட்டும் அவர்களது வெறுப்புக்குக் காரணமில்லை. அப்படி ஒரு பெண்ணுடன் சில காலம் வாழ்ந்த பிறகு, அந்த வாலிபர்கள் இந்தியாவுக்குத் திரும்பி, பெற்றோர்கள் பார்த்து வைக்கும் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விடும் உதாரணங்கள் நிறைய என்று, இங்கு பிறந்த என் உறவினரின் மகள் சொன்னாள். அதனாலேயே, தன் தந்தை சுட்டிக்காட்டும் எந்தத் தமிழ்ப் பையனையும் திருமணம் செய்து கொள்ள தனக்குச் சம்மதமில்லை என்றும் சொன்னாள். தமிழ் நாட்டிலேயே வசிப்பவன்? ஓ, வேண்டவே வேண்டாம். அது மிகப் பெரிய முரண்பாடாகிவிடும். "யூ நோ, ஸம் திங் இந்தியாவில் இருப்பவர்களைவிட, நாங்கள் இங்கு அதிக இந்தியத் தனத்துடன் இருக்கிறோம்!"

(தொடரும்)

பாதி மதிச் சடையும் பைம்
பொற்கிரீடமும் பொன்
தாதவிழ்ந்த கொன்றையும் பூந் தண்
துளவும் - சோதிதரும்
சங்கக்குழையும் தனி
மகரகுண்டலமும்
செங்கைப் பணிலமொடு திமழுவும் -
தங்குமணிக்
கண்டிகையும் பாம்பும் கவுத்துவமும்
பொன்னணியும்
புண்டரிக வீருரியும் பொன் துகிலும்
- கண்டு கண்டு
கார் ஏறுவானில் கவின் இந்திரசாபம்
நேரே நிமிர்ந்தெழுந்து நின்றதென்ன
- வாராத
இச்சைதரும் பவள மென்மலையும்
பொன்மலையும்
பச்சை மலையும் ஒருப்பட்டதென்ன
- அச்சுதனோர்
பாகமுறலால் பசுமையொடு
செம்மையிரண்டு
ஆகமுறும் சங்கர நாராயணனே!

கன்றாப்பூர் கவிராயர் என்ற புலவர் தம்மை ஆதரித்த மருதப்பதேவர் மீது எழுதிய கவிதை இது. சங்கர நாயனார் கோவிலில் குடிகொண்டுள்ள இரண்டுருவும் ஒன்றாய் இசைந்த பகவானை வர்போகலாம்.

சங்கன், பதுமன் என்று இரண்டு நாகர்கள். சங்கனுக்கு சிவபெருமான்தான் இஷ்டதெய்வம். பதுமனுக்கு மகாவிஷ்ணு மீது பக்தி. இரண்டு பேரும் தங்கள் தெய்வம்தான் முழுமுதற்கடவுள் என்று வாதம் செய்தார்கள். முடிவில்லாத இந்த வாதத்தில் தீர்ப்புக் கூற, பிருஹஸ்பதியிடம் சென்றார்கள். தேவகுருவான அவர் சிரித்தார்.

"ஒரு காலத்தில் வெள்ளி மலையில் மலை மகளான பார்வதி, பரமனிடம் நீங்களும் நாராயணனும், இணைந்திருக்கும் கோலத்தைக் காண ஆசைப்படுகிறேன்' என்று சொன்னார். ஈசன் 'கடுமையாகத் தவம் செய்த யோகியர்க்கே அந்தத் தரிசனம் கிடைக்கும்' என்று சொல்லிவிட்டார். பிறகு 'அகத்திய முனிவர் தவம் செய்த புன்னைவனக் காட்டுக்குப் போய் தவம் செய்தால், நாங்கள் ஈருருவும் ஒருருவாய் உனக்குச் காட்சி தருவோம்' என்று சொல்லியருளினார்.

தேவி உடனே புறப்பட்டாள். தேவரும் தேவியரும் கூடவே கிளம்பினார்கள். அன்னை பார்வதி, தேவர்களை புன்னை மரங்களாகித் தவம் செய்யப் பணித்தாள்.

இரண்டுருவும் ஒன்றாய் இசைந்த பிரான்!


ஆனந்தி

ணித்திருக்கிறார்.

என்ன அழகான கற்பனை வளம்! சங்கர நாராயணனின் தோற்றத்தைக் கண்முன் நிறுத்துகிறது.

சங்கர நாராயணர் கோவில் மருவி, சங்கரநயினார் கோவில் ஆகிவிட்டது. பெரிய கோவில். விருதுநகரிலிருந்து

யோகிகளை அர்ச்சகராகிச் சிவபூஜை செய்யச் சொன்னாள். தேவகன்னியரைப் பசுக்களாக வந்து, பால் சொரிந்து தரக் கட்டளை இட்டாள். இப்படிப் பசுக்களால் சூழப்பட்டு ஈசனை வழிபட்டதால், ஆவுடையாள் என்று பெயர் பெற்றாள். கோமதித்தாய் என்றும் பெயரடைந்தாள். பல காலம் பூஜித்து சங்கர நாராயணரைத் தரிசித்தாள். நீங்கள்



24

இருவரும் அந்தப் புன்னை வனத்துக்குப் போய் தவம் செய்யுங்கள். உங்கள் மயக்கம் திரும்" என்று சொன்னார் வியாழ பகவான்.


சங்கனும் பதுமனும் பல ஆண்டுகள் தவம் செய்து, அந்த அரிய காட்சியைக் கண்டு "அரியும் அரனும் ஒன்று" என்று அறிந்தார்கள்.

இங்கு மூன்று கோவில்கள். முதலில் சங்கரலிங்கர் சந்நிதிக்குச் சென்று வலம் வந்து அர்ச்சனை செய்கிறோம்.

சங்கரலிங்கர் சக்தி வாய்ந்தவர். பிருத்விலிங்கம் என்று சொல்கிறார்கள். புற்றிடம் கொண்டார். நாகங்களுக்காக புற்றில் தங்கினாரோ என்னமோ! வைத்தீச்வரன் கோவில் போல, இங்கும் மண்ணே மருந்தாகிறது. வைத்தியலிங்கர் என்றும் இவருக்குப் பெயர். புன்னைவன நாதன், கூழையாண்டி, வரராசைநாதன் என்றெல்லாம் தலபுராணத்தில் இவரைக் குறிப்பிடுகிறார்கள். கூழை நதி பாயும் பிரதேசம் ஆதலால், கூழை நாதன். இந்தப் பிரதேசத்துக்கு வரராசதானி என்று ஒரு பெயர் இருப்பதால், வரராசைநாதன்.

பதினோராம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோவில். உக்கிரப் பாண்டிய மன்னர் கட்டிய கோவில் என்பது கல்வெட்டுச் செய்தி.

சங்கரலிங்கர் கோபுரம் மிக உயரமாக இருக்கிறது. உள்ளுக்குள்ளே தனித்தனியாகக் கோவில்கள். இந்த ஊரில் இரண்டு நாட்கள் தங்கி நிதானமாகத் தரிசனம் செய்தால், கோவிலின் அழகான அமைப்பைத் தெரிந்து கொண்டு அனுபவிக்கலாம். வேலைப்பாடுகள் அமைந்த மண்டபங்களைப் பகலில் நிதானமாகப் பார்க்க வேண்டும். பிறகு ஆவுடை நாயகிக்குக் காட்சி தந்த கோலத்தில் தரிசிக்கிறோம். அபூர்வமான தெய்வம். துவைதமும் அத்வைதமும் ஒன்று கலந்த திருவுருவம். சங்கனும் பதுமனும் "நாங்கள் அமைத்த இந்த நாகசுனை என்ற திருக்குளத்தில் நீராடி, உங்களை வணங்குவோருக்குத் தாங்கள் மோக்ஷமருள வேண்டும். இந்தப் புன்னை மர நிழலில் என்றும் நிலைத்திருக்க வேண்டும்" என்று வரம் கேட்டார்கள். "எப்போதும் உங்களோடு நாங்கள் இருக்க வேண்டும்" என்றார்கள். அந்த வரத்தினால் இன்று சங்கர நாராயணரை நாம் தரிசனம் செய்கிறோம்.



கோமதி அம்மன் சந்நிதியில் நிற்கு போது பரவசம் உண்டாகிறது. மிகவு சக்தி வாய்ந்தவள். அழகு வடிவம். ஆ றல் வடிவம். கருணை வடிவம். அம்மையின் சந்நிதிக்கு எதிரே சக்கரஸ்தாபன செய்திருக்கிறார்களாம். யந்திரங்க தெய்வ சாந்நித்தியத்தை இழுத்து நம குத் தரவல்லவை. அதனாலேயே கோ தித் தாய்க்கு, யம பயத்தைப் போக்கு சக்தி உண்டு.

அழகிய சொக்கநாதப் பிள்ளை என் புலவர், கோமதித் தாயிடம் ஒரு ம னைப் போல உரிமையுடன் பேசுகிறா

கேடா வரும் நமனைக்
கிட்ட வராதே தூரப்
போடா என்றோட்டி உத்தன்
பொற்கமலத் தாள் நிழற்கீழ்
வாடா என அழைத்து
வாழ்வித்தால் அம்ம! உனைச்
கூடாதென் றார் தடுப்பார்
கோமதித்தாய் ஈச்வரியே!

பாடலும் மிக எளிமை! நம்மைக் காப்பது அவளுக்கு எளிது தானே!


பிராகாரத்தில் வலம் வரும்போ புற்று மண் இருப்பதைப் பார்க்கிறோ எல்லாரும் தீபாராதனை முடிந்த பிற வலம் வரும்போது, மண்ணை அள்ளி கொள்கிறார்கள். "என்ன செய்வார்கள் என்ற கேள்விக்கு, உடலில் பூசிக் குளி தால் தீராத வியாதியும் தீரும்" என் பதில் சொன்னார்கள்.

நம்பிக்கை என்பது வியாதிகளை கூடப் போக்கி விடும்தான்.

கோமதித் தாயின் அல காரமும், தீபச் சுடர் ஆபரணங்களின் ஜொல் பும், சந்தியாகால தீபா தனையின் விமரிசையு வாத்திய கோஷங்களு மந்திரங்களின் சக் வாய்ந்த ஒலிகளும் எழு பிய உணர்ச்சி அலைக நெடு நேரம் மனத்தி நின்று நிலைத்தன.

(முற்று

தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு உதவி செய்யுங்கள்



கோயமுத்தூர் – குரும்பபாளையத்தில் இயங்கி வருகிறது 'தி யுனைடெட் ஊனமுற்றோர் பள்ளி'. எழுந்து நிற்கமுடியாத, நடக்கமுடியாத, பேசும் சக்தியற்ற, மனவளர்ச்சி குன்றிய 110 ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்களை இந்தப்பள்ளியில் நாம் அரவணைத்துப் பராமரித்து வருகிறோம். இந்த இல்ல 110 ஊனமுற்ற, அனாதை குழந்தைகளுக்கு தங்களால் இயன்ற உதவியினை பொருளாகவோ, டிராப்ட் / மணியார்டர் மூலமாக இப்பள்ளியின் பெயரில் அனுப்பி உதவி செய்யலாம். கோயம்புத்தூர்–சத்தி மெயின்ரோட்டில் குரும்பபாளையத்தில் தி யுனைடெட் பள்ளி 11 ஆண்டுகளாக செயல்படுகிறது. பள்ளியினை நேரிலும் பார்வையிடலாம்.




The United Physically Handicapped School

(an Institution for orphaned disabled children)

96, Sathy Main Road, Kurumbapalayam, Coimbatore - 641 107,
Tamil Nadu, INDIA. Phone : 91-0422-2667578, 2667636

*Donations are Tax exempt





குத்து

ஊரே நடுங்கும் ரவுடியின் மகள் என்று தெரிந்தும், தில்லாகக் காதலிக்கும் ஒரு துடிப்பான கல்லூரி மாணவனின் கதை. கேழ்வரகுக் கூழ் போன்ற பழம் பெரும் கதைதான். ஆனால் முதல் காட்சியில் ஆரம்பித்து முடிவுவரை, சுறுசுறுவென்று உள்ளே இறங்கும் பெப்சி கோலா மாதிரி, ஓரிடத்திலும் விக்காமல் ஏக் தம்மில் விரையும் ஹூடி...பாபா திரைக்கதை, புதிய கதை போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது.

ஹீரோ சிம்புவிடமிருந்து, மகளை மீட்க, ரவுடி கலாபவன் மணியின் ஆட்கள், சிம்புவின் அப்பா, அம்மாவை பிணயக் கைதிகளாக கடத்தி வரப் போகிறார்கள். ஆனால் கலாபவனின் மனைவியின் உதவியோடு, அவரது வீட்டிலேயே தங்க வைத்து விடுகிறார் ஹீரோ. அங்கே டென்ஷனோடு உலவும் ரவுடி கலாபவன் முன்பு, தயிர்சாதமும், அப்பளமும் சாப்பிட்டு, சிம்புவின் பெற்றோர் அவரை வெறுப்பேற்றும்போது வயிறு புண்ணாகிறது. இப்படி காட்சிகள் ஒவ்வொன்றும் திரைக்கதையின் எதிர்பாராத வளைவுகளில், ப்ரெஷ் வெள்ளரிக்காய்கள் போல, மொறுக் மொறுக் சுவை.

வசதியிலே ஏழையா இருக்கலாம், வாழ்க்கையிலே கோழையா இருக்கக் கூடாது என்பது போன்ற 'ஜிகிர்தண்டா' பன்ச் வசனங்கள் எழுதியிருக்கும், வீ. பிரபாகரன் நொடிக் கொரு தரம் கைதட்டல் பெற்று விடுகிறார்

ஃபாஸ்ட் பீட் நடனமாகட்டும் கல்லூரிக்குள் புகுந்த ரவுடிகளைப் ப தாடுகிற சண்டைக் காட்சி ஆகட்டும் வில்லாதி வில்லன் கலாபவன் மணியோ(கைகலக்காமல், நடிப்பில் மோதுப போதாகட்டும், சிம்புவின் மொத் பர்ஃபாமென்ஸும் லைம் சோடா மாதி செம விறுவிறுப்பு.

பார்வையிலேயே ஐஸ் க்ரீமைத் தேக் வைத்திருக்கும் அறிமுக நாயகி ரம்யா பார்டர் மார்க்கில் தேறிவிடுகிறார் கதையோடு ஒன்றி கருணாஸ் உதிர்க்கும ஒவ்வொரு நகைச் சுவையும், ஒ(ஹைப்ரீட் தர்பூசணிக் கீற்று.

பல பாடல்களின் பல்லவிகள் யாவும வரம்பு மீறிய, வறட்டுக் கற்பனைகள், ஆனால் ஸ்ரீகாந்த் தேவாவின் இளநீ இசையில் உருவான துள்ளல் ட்யூன்கள் இளைஞர்களைத் தாளம் போட வைக்கும்


என்னதான் விறுவிறுப்பான பட என்றாலும், லாஜிக் பற்றி கவலை கொள் ளாத சில காட்சிகளில், கண்டக் கஞ் குடித்த மாதிரி புளிக்கிறது. என்றாலு குத்துவில் இளமையின் சத்து.

விஷுவல்தாசன்

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 703 - 05 * [redacted]

11.4.2004 இதழுடன்
இலவச இணைப்பு

கல்கி



அரசியல் நாயகர்கள்!

ஞானக் குழந்தை!

ஆட்சியில் இருப்பவர்கள், சன்யாசிகளின் அட்வைஸ் கேட்டு ஆட்சி செய்ததெல்லாம் பழைய கதை. சன்யாசிகளே நேரடியாக அரசியலில் ஈடுபடுவது சமீப கால எபிசோட்! அந்த வகையில் காவியுடை தரித்த உமாபாரதி, முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் மத்தியப் பிரதேசத்தில்.



1959ல் மத்தியப் பிரதேசத்தில் திகம்கர் என்கிற குக்கிராமத்தில் பிறந்தவர் உமா பாரதி.

படித்தது ஆறாவது வகுப்புவரைதான். ஆனால், ஏழாவது வயதிலேயே ஆறாம் கிளாஸ் முடித்தவர்! இவரை, சின்ன வயதில் 'ஞானக் குழந்தை' என்று எல்லோரும் போற்றினார்கள்.

காரணம், அப்போதே ராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை என்று எல்லா

வற்றையும கரைத்துக் குடித்திருந்தார்.

குவாலியர் மகாராணி விஜயராஜே சிந்தியாவினால் திறமை அறியப்பட்டு, போஷிக்கப்பட்டவர். பதினாறு வயதில், இந்தியா முழுவதும் மதப் பிரசாரத்துக்காக பயணம் செய்தவர்.


இவர் மீது அரசியல் வெளிச்சம் பட்டது அயோத்தி பிரச்னை விச்வரூபம் எடுத்த பின்னர் தான்.

மத்திய அமைச்சராக இருந்தவர். பந்தா இல்லாத எளிமை இவரது குணம்.



அமைச்சரவையிலிருந்து விடுவிக்கப்பட்டு, ம.பி. சட்டமன்றத் தேர்தலுக்கு முன் மாநில அரசியலுக்கு அனுப்பிவைக்கப்பட்டவர் கடுமையான பிரசாரம், இவரை சி.எம். ஆக்கியது.

இன்று, இவர் முதலமைச்சர் உமாபாரதி என்றாலும், ஆர்.எஸ்.எஸ்.காரரான கோலங்கிதான் ம.பி.யின் சூப்பர் சீஃப் மினிஸ்டர்.



ஒரு ஜப்பான் காரர், "பீகாரை என்னிடம் கொடு. மூன்று வருடங்களில் ஜப்பான் ஆக்கிவிடுகிறேன்'' என்றாராம். அதற்கு லாலு சொன்னாராம்: "ஜப்பானை என்னிடம் கொடு. மூணே மாதத்தில் பீகார் ஆக்கிக் காட்டுகிறேன்.'' இது போல நிறைய லாலு ஜோக்ஸ் உண்டு.

''சமோசாவில் ஆலூ (உருளைக் கிழங்கு) இருக்கிற வரை (பீகார்) அரசியலில் லாலுவும் இருந்தே தீருவார்'' இது தம்மைப் பற்றி லாலு பிரசாத் யாதவ் சொல்லிக் கொண்ட மிகப் பிரபலமான வாசகம்.

அண்மையில் லாலூ, கொல்கத்தாவுக்குச் சென்றார். வீட்டை விட்டுப் புறப்பட்ட பின்னரே, அவர் செருப்பு அணிந்து கொண்டு போக

ஆலுவும் லாலுவும்!

வில்லை என்பதைக் கவனித்தார், அவரது மனைவியும் பீகார் முதலமைச்சருமான ராப்ரிதேவி. உடனே முதல்வர் அலுவலகத்திலிருந்து, மே. வங்காள முதலமைச்சர் அலுவலகத்துக்குத் தகவல் பறந்தது. அதிகாரி ஒருவர் கடைத்தெருவுக்குச் சென்று, புதுஜோடி செருப்பு ஒன்று வாங்கினார். அதை கொல்கத்தா விமான நிலையத்துக்குக் கொண்டு போய், லாலு விமானத்தைவிட்டு இறங்கியதும் ஒரு மாலையைப் போட்டு விட்டு, அவரது மனைவியின் உத்தரவின் பேரில் வாங்கி வரப்பட்ட செருப்பையும் கொடுத்தார்!

ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகி, பீகார் முதலமைச்சர் பதவியிலிருந்து விலக நேர்ந்த போது, நாலாம் வகுப்பு வரை படித்த, அரசியல் அரிச்சுவடி அறியாத தம் மனைவியை முதலமைச்சராக்கியது, இந்திய ஜனநாயகத்துக்கே லாலு கொடுத்த ஷாக் டிரீட்மெண்ட். இன்று, அதுவே பூமாராங்காகி உள்ளது.

பீகார் அமைச்சரவையில் உள்ள அறுபது மந்திரிகளும், தங்களுக்கு எம்.பி சீட் தர வேண்டும் என்றும், தங்கள் எம்.எல்.ஏ தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வரும்போது, தங்கள் மனைவி



மார்களுக்கே சீட் தர வேண்டும் என்றும் நெருக்குகிறார்கள்! இது தவிர லாலுவின் மைத்துனர்கள் தரும் தலைவலி வேறு.



இந்திராவின் மூன்றாவது மகன்!



ராஜீவ்காந்தியும், சஞ்சய் காந்தியும் டூன் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தபோது, சஞ்சய் காந்தியின் நண்பர் கமல்நாத். அப்புறம் கல்கத்தாவில் கல்லூரிப் படிப்பு. குடும்ப பிசினஸில் ஈடு பட்டுக் கொண்டிருந்த கமல்நாத்தை எமர்ஜென்ஸி கால கட்டத்தில், அரசியலுக்கு இழுத்தவர் சஞ்சய்காந்தி. இன்றைக்கும்கூட எமர்ஜென்ஸி காலத்தை ஆதரித்துப் பேசுபவர் கமல்நாத். "எமர்ஜென்ஸி காலத்தில் பல நல்ல விஷயங்கள் நிகழ்ந்தன. ஆனால் காவல்துறையும், ஒரு சில உயரதிகாரிகளும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதால், மக்களுக்கு எமர்ஜென்ஸி மீதே வெறுப்பு ஏற்பட்டு விட்டது' என்பது அவர் தரப்பு வாதம்.

எமர்ஜென்ஸியின் போது, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு, தண்ணீர் மற்றும் கரண்ட் சப்ளையை கட் பண்ணச் செய்தவர் கமல்நாத் என்பார்கள். 'பணம் கட்டாமல், சப்ளை கட் பண்ணினால் நான் எப்படிப் பொறுப்பாவேன்?' என்று விளக்கம் கொடுத்தார் கமல்நாத்.

1980ல், மத்தியப் பிரதேசம் சிந்த்வாரா தொகுதியில் 'எனது மூன்றாவது மகன் கமல்நாத்' என்ற அறிமுகத்துடன் இவரைத் தேர்தல் களத்தில் இறக்கினார் இந்திராகாந்தி. அதன்பின் ஏழு தடவை அதே தொகுதியில் நின்று ஜெயித்து எம்.பி ஆனவர் கமல்நாத்.

ஸ்ட்ராங்க் மேன்!

'நெஞ்சம் மறப்பதில்லை' எம்.என். நம்பியார் மாதிரி, தலைமுறை தலைமுறையாக நேருவிலிருந்து ஆரம்பித்து ப்ரியங்கா வரை, அந்தப் பரம்பரையை எதிர்க்கிறவர் ஒருவர் உண்டென்றால், அது சரத் தான். அட, நம்ம 'கம்பீரம்' சரத் இல்லிங்க, 'மராத்தா பவர்' சரத் பவார். பழைய காங். தலைவர் எஸ்.பி. சவானின் நேரடி சிஷ்யர். எமர்ஜென்ஸிக்குப் பிறகு இந்திரா காந்தியை எதிர்த்து, காங்கிரஸ் அவிழ்த்துக் கொட்டிய நெல்லி மூட்டையாகச் சிதறியது. சிதறலில் ஒரு நெல்லிக்காய் பவார் பிரிவு!

சோனியா பிரதமராவதை எதிர்த்து முதல் வரிசையில நின்று குரல் கொடுத்தவர்தான். ஆனால் மகாராஷ்டிராவில் ஆட்சி நீடிக்க, காங். கூட்டணி தேவைன்னு காலம் செய்த கோலம், இப்போ கூட்டணியில இருக்கார். ஆகாத மாமியாரோடு குப்பை கொட்ட விதி எழுதி வைத்தாலும், சங்மாவுடைய கோரிக்கையைத் தேர்தல் கமிஷன் நிராகரித்து, இவரோட கட்சி தான் உண்மையான தேசியவாத காங்கிரஸ் என்று சொல்லிவிட்டது!



கப்சிப் கோக்!

அன்று (1977) கோககோலாவை இந்தியாவிலிருந்து விரட்டிய வீரர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், இன்று பெப்ஸி கோக் வருகையை கப்சிப் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்! கோக்கை விரட்டியபோது அவர் மத்திய தொழிலமைச்சர். அதற்கும் முன்பு தொழிற்சங்கவாதி! 1974ல் இவர் தலைமை ஏற்று நடத்திய ரயில்வே வேலை நிறுத்தம்தான், இந்திய ரயில்வே வரலாற்றில் மிக நீண்ட ஸ்டிரைக்.

ராம் மனோகர் லோகியா, ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆகியோரை ஆதர்சத் தலைவர்களாக ஏற்று, சோஷலிஸப் பாதையில் அரசியலைத் துவங்கினார் ஃபெர்னாண்டஸ். எமர்ஜென்ஸி கால கட்டத்தில் பரோடா வெடிகுண்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார். கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டதும் தலைமறைவாகி விட்டார். தமிழ்நாட்டில்கூட சிறிது காலம் மறைந்து வாழ்ந்தார்.



'பிரதிபாக்ஷா' என்ற பத்திரிகையை நடத்தினார். 1974ல் எழுதிய ஒரு கவர் ஸ்டோரி காரணமாக, நாடாளுமன்றமே கிடுகிடுத்தது. இன்று இவரே கவர் ஸ்டோரியாகியிருக்கிறார்! டெகல்கா இணைய பத்திரிகை அம்பலப்படுத்திய



ஊழல் காரணமாக, மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டிய கட்டாயம். வாஜ்பாய் இவரை மீண்டும் அமைச்சராக்கியிருக்கிறார். பாதுகாப்பு அமைச்சர் பெர்னாண்டஸ், சியாசின் எல்லையில் நிற்கும் நமது ராணுவத்தினரைச் சந்திக்க நேர்த்திக் கடன்போல் சென்று வந்தவண்ணமிருப்பவர். கார்கில் போரில் மரணமடைந்த வீரர்களுக்குச்

சவப்பெட்டி வாங்குவதில் ஊழல் செய்ததாக, பாதுகாப்பு அமைச்சர் பேரில் குற்றம் சுமத்தியுள்ளன எதிர்க்கட்சிகள்.




போராளி!



அம்பேத்கர் பேசவிருந்த பொதுக் கூட்டம் அது. பேச்சைக் கேட்பதற்காக இரு இளைஞர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். மேடைக்குச் சென்று கொண்டிருந்த அம்பேத்கர் அவ்விரு இளைஞர்களையும் அழைத்தார். "உங்களுக்கு ஜாதிகள் மீது நம்பிக்கை உண்டா?" "இல்லவே இல்லை" என்றார்கள். "கடவுள்மீது நம்பிக்கை உண்டா?" என்று கேட்டார். அதற்கும் "கிடையவே கிடையாது" என்றார்கள். மேடையில் பேசும்போது "இங்கே இரண்டு இளைஞர்களிடம் கேள்விகள் கேட்டேன். அவர்கள் சொன்ன பதில் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க இவர்களைப் போன்று பலர் வர வேண்டும்" என்றார் அம்பேத்கர். அந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான ஏ.பி.பரதன்!

இன்று சங் பரிவார் அமைப்பை பலமாகச் சாடும் ஏ.பி. பரதன் பிறந்தது, நாக்பூர் அருகில் உள்ள கிராமத்தில். சமூக மாறுதலுக்காக பல போராட்டங்களில் கலந்து கொண்டு, சிறை சென்றிருக்கும் இந்தச் சமரசமற்றப் போராளி, ஏ.ஐ.டி.யு.சி.யில் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர். மலைவாழ் மக்களின் வாழ்க்கை பற்றிய இவரது ஆராய்ச்சி நூல் பரவலாகப் பேசப் பேசப்படுகிறது. எழுபத்தொன்பது வயதாகும் பரதன், ஒரு அரசியல்வாதியாக இருந்தாலும், மிகுந்த நகைச் சுவை உணர்வு கொண்டவர்!



பாலம் அமைத்த பள்ளித் தோழர்!

பா.ஜ.க.வை விட்டு தி.மு.க. விலகியதும், அ.தி.மு.க.வை எப்படி அணுகுவது என்று பா.ஜ.க. ஏங்கித் தவித்த சமயத்தில், ஜெயலலிதாவோடு பாலம் அமைத்துக் கொடுத்தவர் சுகுமாரன் நம்பியார்! ஜெ.வுடைய பள்ளித் தோழர். 1998லும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக்கு வித்திட்டவர் இவர்தான்.

நடிகர் எம்.என். நம்பியாரின் மகன். இவருக்குப் பல முகங்கள். கிறிஸ்துவக் கல்லூரியில் இளங்கலை முடித்து, கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் சர்வதேச உறவுகள் பற்றிய உயர் படிப்புப் படித்தவர். இடையில் வர்த்தக ரீதியான படிப்புகளையும் முடித்திருக்கிறார். கோவையில் நண்பர்களோடு இணைந்து மோட்டார், பம்புகள் தயாரிக்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

விளையாட்டுகளில் நிறைய ஆர்வம். நீச்சல், ஜாவ்லின் வீச்சு, போலோ, துப்பாக்கி சுடுதல் என்ற பல விளையாட்டுகளில் பங்கெடுத்துக் கொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறார். 1990ல் பா.ஜ.க.வில் இணைந் தார். ஜனா கிருஷ்ணமூர்த்தி பா.ஜ.க. தலைவராக இருந்தபோது, கட்சியின் அகில இந்தியப் பொருளாள ராக உயர்ந்தார். 1998ல் திருச்சி தொகுதியில் நின்று தோல்வியைத் தழுவியவர். இப்போது தி.மு.க.வின் கோட்டையான வட சென்னையை அசைத்துப் பார்க்கப் போகிறார்.

மேடம் ராஜகுமாரி!

ராஜஸ்தான் மாநிலத்தின் முதல் பெண் முதலமைச்சர் வசுந்தரா ராஜே சிந்தியா. குவாலியர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அம்மா



விஜய ராஜே சிந்தியா பா.ஜ.க, சகோதரர் மாதவ ராவ் சிந்தியா காங்கிரஸ் என்று அரசியல் ரீதியாக குடும்பம் பிரிந்தபோது, வசுந்தரா தாய்வழியில் தாமரையைத் தழுவியவர்.

மத்திய மந்திரியாக இருந்த வரை, மாநிலத்தில் கட்சித் தலைமை பொறுப்பைக் கொடுத்து, ராஜஸ்தானுக்கு, சட்டசபைத் தேர்தலுக்கு முன் அனுப்பி வைத்தது பா.ஜ.க. புயலாய் நுழைந்தவர், வியூகம் வகுத்தார். 200 உறுப்பினர் கொண்ட ராஜஸ்தான் சட்டசபையில் 33 இடங்கள் மட்டுமே வென்றிருந்த பா.ஜ.க.வை, தமது அதிரடிப் பிரசாரம் மூலம் ஆட்சியில் அமர்த்திவிட்டார்.

''ராஜகுடும்பத்தில் பிறந்து ஜனநாயக அரசியல் நடத்துவது சாதகமானதா? பாதகமானதா?'' என்றால், 'நிச்சயம் சாதகம்தான். மக்கள் மரியாதை தருகிறார்கள். நாம் நெருங்கி செல்கிறபோது, எளிமையைப் புரிந்துகொண்டு, சந்தோஷமாய் ஆதரவு தருகிறார்கள்.

"மக்களுடன் பழகி, அவர்களில் ஒருவராக இருந்து சேவை செய்கிறபோது, இரட்டிப்பு மகிழ்ச்சி கிடைக்கிறது.

"அரசியல் ரீதியாக வேறுபட்டாலும், எனக்கும் மாதராவ் சிந்தியாவுக்கும் இடையில் பாசம் உண்டு. என் சகோதரரின் மரணம் எங்களுக்குப் பேரிழப்பு" என்கிறார்.

ஊட்டியில் கான்வென்ட் படிப்பு, மும்பையில் கல்லூரிப் படிப்பு, (கிளாஸ் கட் பண்ணினால், பிரின்ஸ்பாலிடமிருந்து, நேரே அரண்மனைக்குத் தகவல் போய்விடும்) ராஜஸ்தானின் தோல்பூர் மகாராஜாவுடன் திருமணம், பிரிவு என்று இந்த ராஜகுமாரிக்குச் சோகங்களும் உண்டு.

அரசு அதிகாரிகள் 'மகாராணி' என்று இவரை பவ்யமாய் அழைக்க, "அப்படியெல்லாம் அழைக்காதீங்க. எனக்குப் பிடிக்காது. மேடம்னு சொன்னா போதும்" என்று உத்தரவு போட்டிருக்கிறார்.



பாபு காரு!!

அதென்ன சொக்குப் பொடி போட்டாரோ தெரியலை, ஆனானப்பட்ட பில்கேட்ஸே இந்தியாவில, காலை வைச்சதும் சந்திரபாபு நாயுடுவைத்தான் பார்க்க விரும்பறார். இந்தியாவின் ஹை-டெக் முதலமைச்சர் ஆச்சே!

எப்போதும் லாப்டேப்பும் கையுமாகக் கொளுத்திப் போட்ட தௌஸன்ட் வாலா மாதிரி, பரபரன்னு இருந்தாலும், பாபு காருவுக்குச் சாமி, கோயில்னா ரொம்ப பக்தி.

ஆரம்பக் காலத்தில் காங்கிரஸ் காரர். அவரது சொந்த ஊரான சந்திரகிரியில் (அடடா! ஊரும் பேரும் என்ன பொருத்தம்!) தேர்தல் நடந்தபோது, காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு, மந்திரி ஆனவர். பிறகு என்.டி. ராமராவ் தெலுங்கு தேசம் கட்சி தொடங்கியதும், அதில் சேர்ந்தார் நாயுடு.

''நான் பக்கா அரசியல் வாதிதான். ஆனால் என் மாமனாரிடமிருந்து முதல்வர் பதவியைப் பறித்துக் கொள்வேன்னு கனவுல கூட நினைச்சதில்லே'' என்பார் நாயுடு. யாராவது தம்மை சி.எம். என்று சொல்லிவிட்டால், எரிச்சல் வருமாம்! "நான் சி.எம் இல்லை. சீஃப் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்- அவ்வளவுதான்" என்பாராம்!



பிரகாஷ் கரத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ 'உறுப்பினராக இருப்பது, கட்சிக்கு 'இளமை' முகத்தைக் கொடுத்திருக்கிறது.

கட்சியின் இந்தச் செல்லப் பிள்ளைக்குப் பூர்வீகம் கேரளா என்றாலும், பள்ளி, கல்லூரி படிப் பெல்லாம் சென்னையில்தான். படிக்கும்போது கம்யூனிஸ்ட் தலைவர் வி.பி. சிந்தனின் பேச்சு களால் கவரப்பட்டார் பிரகாஷ். பிறகு சிந்தனை தனிப்பட்ட முறையில் பல முறை சந்தித்து, எண்ண ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டு, முழு மனத்தோடு தம்மை இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டார்.

உயர் படிப்பு கேம்பிரிட்ஜில் முடித்த பின்னர் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர, தில்லி ஜே.என்.யூ. பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். ஆனால் அங்கு மாணவர்கள் பிரச்னை, போராட் டம், சிறை என்று இழுத்துக்

செல்லப்பிள்ளை!



கொண்டு போய் முழு நேர அரசியலில் தள்ளிவிட, ஆராய்ச்சி தடைப்பட்டது.

அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பின் பொதுச் செய லாளராகவும் இருந்திருக்கிறார். அதன்பின் தில்லி மாநிலக் கட்சியின் நிர்வாகத்தில் பொறுப்பு களை ஏற்றுக் கொண்டார்.

"பிரகாஷ் கரத் போன்றோர், கட்சியின் குறுகிய கால லாபங் களைப் பற்றிக் கவலைப்படாமல், நிரந்தரமான, நீண்ட கால யுக்தி களை வகுக்கும் உரத்த சிந் தனைக்காரர்கள்" என்கிறார்கள்.


கேரளா, மே.வங்கம், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களில் சி.பி.எம்.மின் கட்டுமானங்களை வலுப் படுத்துவதில் முழு மூச்சில் இருக்கிறார் பிரகாஷ் கரத்.

ஹாட் தாக்கரே

சிவசேனா தலைவரான பால்தாக்கரே ஃப்ரீ பிரஸ் ஜர்னலில் கார்ட்டூனிஸ்டாகப் பணி புரிந்திருக்கிறார். இவர் போட்ட சில கார்ட்டூன்கள், உலக அளவில் பத்திரிகைகளால் பேசப்பட்டு இருக்கின்றன.

1965ல் சிவசேனாவை ஆரம்பித்தார் தாக்கரே. ஒரு சமூக சேவை அமைப்பு என்கிற முகத்தைக் கொண்டிருந்த சிவசேனாவைத் துவக்கி வைத்து, வாழ்த்திப் பேசியவர் அன்றைய மராட்டிய காங்கிரஸ் முதல்வர்!

மண்ணின் மைந்தர்களுக்கே முன்னுரிமை என்று கூறி, மும்பைக்குப் பிழைக்க வந்த தென்னிந்தியர்களைக் குறி வைத்துத் தாக்கிய



சிவசேனாவை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட முடியாது. 1971ல் மும்பை கார்ப்பரேஷனைக் கைப்பற்றியது, சிவசேனாவின் வரலாற்றில் ஒரு மைல் கல்.

இன்று பா.ஜ.க கூட்டணியில் இருக்கும் இந்தப் புலி, எமர்ஜென்ஸி காலத்தில் இந்திராகாந்தியை ஆதரித்தது!

சட்டசபைத் தேர்தலில் போட்டி, எதிர்க்கட்சி, ஆளும் கட்சி, மத்திய அரசில் பங்கேற்பு என்று எல்லாமே கிடுகிடுவென்று நடந்துவிட்டது சிவசேனாவுக்கு. தாக்கரேவின் பேச்சு எப்போதுமே சூடாக இருக்குமென்பதால் 'ஹாட் ஜி' என்கிறார்கள் இவரை.

கட்சியில் பால்தாக்கரேவின் மகன் உதவ் இருந்தாலும், தம்பி மகன் ராஜ் தாக்கரேவுக்குத்தான் அதிக வாய்ஸ்!

பைலட் கனவு!



ஒரு பைலட்டாகி வானில் வலம் வர வேண்டிய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், இப்போது அர சியல் வானில்!

கண்ணாடி போட வேண்டிய அவசியம் வந்ததால் பைலட் கனவு பாதியிலேயே புஸ்ஸாக, அய்யா இறங்கிவிட்டார் அர சியலில்!

காங்கிரசில் இருந்து இரண்டு முறை சிவாஜி கட்சி, திவாரி காங்கிரஸ் என்று தடுமாறிவிட்டு, இப்போது மீண்டும் காங்கிரசில்!

அம்மா சுலோசனா சம்பத், அ.தி.மு.க. வில் இருப்பதால், பேச்சு வார்த்தை கூட நஹியாம்! (அவ்வப்போது அறிக்கையில் திட்டிக் கொள் கிறார்கள்!)

பல ஊர்களில் படிப்பைத் தொடர்ந்தவரென்றாலும், சர்ச் பார்க் கான்வென்டில் முதல்வர் ஜெ.க்கு சீனியராம்!

இவரது நெடுநாளைய கனவு நாடாளுமன்ற உறுப்பினராவது. இப்போதுதான் கோபிசெட்டிப் பாளையத்தில் சீட் கிடைத்திருக்கிறது!

எதற்கும் ரெடி!

அதிகாரத்தைக் காட்டாத இந்தியக் குடும்பப் பாங்கான பர்ஸனாலிடி. வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுங்கற கலாசாரக் கண்டிப்பான பெண்மணி. கலாசாரத்தைப் பற்றி அநியாயத்துக்குக் கவலை இவருக்கு. ஆனா கட்சியில என்ன சொன்னாலும் கட்டுப்படுவார். கட்சி இமேஜுக்காக சோனியாவை எதிர்த்து பெல்லாரியில நிக்கணுமா, டெல்லி சட்டசபைத் தேர்தலுக்குப் பொறுப்பேற்கணுமா, எதுவானாலும் ரெடி என்றவர்.

பஞ்சாப் பல்கலையில் படிச்சது சட்டம். அப்பா ஆயுர்வேத வைத்தியர். சட்டம் படிக்கும்போது வழக்கமா வர்ற காதல் இவருக்கும் வந்து, ஸ்வராஜைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். எமர்ஜென்ஸியின் எதிரி. அப்போ கைது பண்ணப்பட்டவங்களுக்காக மட்டுமில்லாம, பரோடா வெடிகுண்டு வழக்கில் ஜார்ஜ் பெர்னாண்டஸுக்காகவும் வாதாடி ஜெயிச்சவர்.

இருபத்தைந்து வயதிலேயே தேவிலால் அரசில் அமைச்சர் பதவி பெற்றவர். ஸ்வராஜுக்கு கவர்னர் பதவி கிடைத்தது.

தெளிவு, ஆழம், அழுத்தம் எல்லாம் ஒண்ணாச் சேர்ந்த பெண்மணி.




‘வாயுள்ள பிள்ளை எப்படியும் பிழைத்துக் கொள்ளும். வாயில்லா ஜீவன்கள், பாவம், என்ன பண்ணும்?’ அப்படிங்கற இரக்கத்தாலோ, அல்லது எமர்ஜென்ஸி மாமியாரிடம் தாமே வாயில்லாப் பூச்சியாகக் கொஞ்சகாலம் வாழ்க்கை நடத்திய தாலோ, பிராணிகள் பறவைகள் மேல இவருக்குத் தனிப் பாசம். சர்க்கஸ்காரங்க, வித்தை காட்டற வங்க மட்டுமில்லாம, தேர்தல் சின்னமாக்கூட பிராணிகளைப் பயன்படுத்தி வதைக்கக் கூடாதுன்னு குரல் கொடுத்தவர்.

பிராணிகள் எல்லாம் வோட்டுப் போட லாம்னா, பிரதமராகவே ஆயிட்டிருப்பார். அப்படி இல்லைன்னாலும், உ.பி.யில் பிலிபெட் தொகுதி யில் நான்கு முறை ஜெயிச்சவர். போன தேர்தலில் இவரோட ஆதரவாளர்கள் தோற்றுப் போனதைக் கண்டு, குடையைப் பார்த்த பசு மாதிரி மிரண்டு, இப்போது மகன் வருண் காந்தியுடன் பா.ஜ.க.வில் ஐக்கியமாகிவிட்டார்.

பழைய குஷ்வந்த் சிங் ஆதரவோட ‘சூர்யா’ன்னு பத்திரிகை ஒன்றும் நடத்தினார்.

பிராணிகளின்



ஆரம்பத்தில் ரொம்ப தைரிய சாலி. 1984ல் அமேதியில் ராஜீவ் காந்தியையே எதிர்த்தார். ‘ராஷ்ட்ரிய சஞ்சய் மஞ்ச்’ கட்சியையும் ஆரம்பித்தார். 89ல் ஜெயிச்சு வி.பி.சிங், சந்திரசேகர் அமைச்சரவைகளிலும், இரண்டு முறை வாஜ்பாய் அவையிலும்



அமைச்சராக இருந்தார்.

பதன்கோட்டில் பிறந்து பத்திரிகையாளரா இருந்தபோதுதான், சஞ்சய் காந்தியைக் காதலித்து மணந்தார். ‘இந்திய தாவரங்களின் புராணம், ‘விலங்குகள் குவிஸ்’ன்னு புத்தகங்கள் எழுதியுள்ள எழுத்தாளரும் கூட.

‘சத்தம் போட்டா பெஞ்ச் மேல ஏத்தி நிக்க வெச்சுடு வேன்’ங்கற லெவல்ல பாராளுமன்ற உறுப்பினர்களை மிரட்டி, ‘பாராளுமன்ற ஹெட்மாஸ்டர்’ பட்டம் வாங்கிய சபாநாயகர். லா படித்து பிராக்டீஸ் பண்ணச் சொன்னால், சீனியரின் பெண்ணை லவ் பண்ணி அவரை ‘ஃபாதர் இன் லா’ வாக ஆக்கியவர். மேகாலயாவின் பழங்குடி இனம். இன்னும் கூட ‘சங்மாவா, எங்கமா’ என்று ஓடி வரும்



ஹெட்மாஸ்டர்!

ஆதரவாளர்கள் வட கிழக்கு பார்டர் ஏரியாக்களில் அதிகம். மேகாலயாவின் முதலமைச்சராகவும், மத்திய அரசில் பல பொறுப்புகளிலும் இருந்தவர்.




‘சோனியாவைப் பிரதமராக்குவதா? கூடவே கூடாது’ என்று சரத் பவாருடன் சேர்ந்து வெளியேறி, சரத் இப்போது காங் உடன் கூட்டணி வைத்துக் கொண்டதால் தனியே ‘மக்கள் தேசியக் கட்சி’ தொடங்கி தேர்தல் கமிஷனின் அங்கீகாரத்திற்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.


அக்கா!

டெல்லியில் தபால் தந்தித் துறையில் சூப்பர்வைசராக வேலை பார்த்த பிரபு தயாள் என்பவரின் மகள் மாயாவதி. பள்ளிப் படிப்பு, அதன்பின் பி.ஏ, எல்.எல்.பி, பி.எட் எல்லாம் டெல்லியில்தான்.

கன்ஷிராம்தான் இவருடைய அரசியல் குரு. அவர் நடத்திய பிற்படுத்தப்பட்ட சமுதாயச் சங்கங்களில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த மாயாவதிக்கு, ஐ.ஏ.எஸ் பரீட்சை எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. பரீட்சைக்கு சீரியஸாகத் தயார் செய்து கொண்டிருந்தபோது, "உனக்கு ஏன் ஐ.ஏ.எஸ் பரீட்சை எல்லாம். பேசாமல் தீவிரமாய் அரசியலில் இறங்கு. ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் உன் முன்னால், கை கட்டி நிற்கும் நாள் வரும்" என்று சொன்னார் கன்ஷிராம். ஐ.ஏ.எஸ் கனவுகளுக்கு குட்பை சொன்ன மாயாவதி, பின்னர், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைச் சாட்டை வைத்து விரட்டுமளவுக்கு வளர்ந்தது சரித்திரம்.

கன்ஷிராமுக்குப் பின், இவர்தான் பி.எஸ்.பி கட்சியின் சூத்திரதாரி. தமது கட்சிக் காரர்களுக்கு மரியாதையுடன் 'அக்கா'!





தோழர் சி.எம்!

சி.மகேந்திரனின் தந்தை நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் பணிபுரிந்தவர். அவர் சிங்கப்பூரில் இருந்தபோது இவர் பிறந்தாலும், பூர்வீகம் ஒரத்தநாடு அருகிலுள்ள வன்னிப்பட்டு கிராமம்.

பள்ளியில் படித்த காலத்திலிருந்தே பொதுச் சேவையில் ஈடுபட்டவர். மன்னார்குடி மற்றும் திருவாரூர் கல்லூரிகளில் படித்து, சரித்திரத்தில் பட்ட மேற்படிப்பு முடித்திருக்கிறார். இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் 1980களில் 'தமிழகத்தைப் பாலை வனமாக்காதே' என்ற இயக்கம் நடந்தது. அதில் பங்கு கொண்டு சுறுசுறுப்பாக இயங்கியவர் மகேந்திரன். தைல மரங்கள் பயிரிடுவதால் ஏற்படும் பாதகங்களை, மக்களிடம் எடுத்துச் சொன்னது இந்த இயக்கம்.

கிராமப்புற மெட்டில் 'தன்னானே பாடல்கள்' என்ற இயக்கப் பாடல்கள் கொண்ட காஸெட்டையும் வெளியிட்டிருக்கிறார்.



பல்வேறு தினசரிப் பத்திரிகைகளில் அரசியல், சமூகக் கேடுகளைப் பற்றிய கட்டுரைகளை எழுதி வருகிறார். அவ்வப்போது சிறுகதைகளும் எழுதுவதுண்டு. 'தீக்குள் விரலை வைத்தால்' என்ற இவரது புத்தகம், இலங்கையைப் பற்றி - குறிப்பாக அங்குள்ள தமிழ் இனத்தைப் பற்றிய ஆராய்ச்சிப் புத்தகம். இவரது மனைவி பங்கஜம் ஆசிரியை மட்டுமல்ல, கவிஞரும் கூட.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர். இலக்கியத்திலும் இவருக்கு முக்கிய இடம் உண்டு. இவரது தெளிவான அரசியல் பேச்சில் பல இளைஞர்கள் மயங்கிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். கட்சியில் சி.எம். என்றே அழைக்கிறார்கள்.

குட்டிக் கதை மன்னர்!

நெருக்கடி நிலை அமலில் இருந்த காலம். சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தார் அவர். எதிர் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தவரிடம், தாம் யார் என்று அறிமுகப் படுத்திக் கொள்ளாமலேயே உரையாடிக் கொண்டு வந்தார். விடைபெறும் நேரத்தில், எமர்ஜென்ஸி எதிர்ப்பு ரகசிய வெளியீடுகளை ஒரு கவரில் போட்டு, எதிர்சீட்டுக்காரரிடம் கொடுத்தார். ''நேரம் கிடைக்கிறபோது படித்துப் பாருங்கள்'' என்று சொல்லி விட்டு, ரயிலிலிருந்து இறங்கி நடையைக் கட்டினார். அந்தப் பயணி : இல. கணேசன். அவரது எதிர்சீட் பயணி, எமர்ஜென்ஸியின்போது அவரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்த நீதிபதி!



இந்த நிகழ்ச்சியை நினைவு கூறும்போது, "என் வாழ்க்கையில் மிகவும் திரில்லிங்கான தருணம் அது" என்கிறார் கணேசன். பா.ஜ.க. தமிழ்நாட்டில் வேரூன்றும் முன்னரே, கணேசன் அக்கட்சியில் வேரூன்றி விட்டார்.

புராண, இதிகாசங்களுடன், தமிழ் இலக்கியங்களையும் ஆழமாய் படித்தவர். உதாரண, உவமானங்களுடன், குட்டிக்கதை சொல்வதில் எக்ஸ்பர்ட்.

"எங்களுக்குச் சுய கௌரவம் தான் பெரிசு! நீங்களுமாச்சு! உங்கள் கூட்டணியுமாச்சு!" என்று அ.தி.மு.க.விடம் சொன்னவர். இன்று அந்தத் துணிச்சல் எங்கே போச்சோ?





பின்னால் இவர் இருக்கறதாக, சந்தேகம் இன்னிக்கும் உண்டு. தீவிரமான ஆர்.எஸ்.எஸ். காரர்.

பதினேழு வயதில் வீட்டை விட்டு ஓடிவந்து, அகமதாபாத்தில் நாதலால் ஜட்கே, லட்சுமண் ராவ், இனாம்தாஸ் மாதிரி தீவிர ஆர்.எஸ்.எஸ். காரர்களால் ஆளாக்கப்பட்டவர். இவங்க வேற யாருமில்ல, காந்தியைக் கொன்ற வழக்கில் கோட்ஸே சார்பா வாதாடினவங்க.

பொலிடிகல் சயின்ஸ் படித்தவர், அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தில் ஈடுபட்டவர். குஜராத்தில் பி.ஜே.பி.க்குப் பிரச்னை ஏற்பட்டபோது, இவரை அனுப்பியது கட்சி. குஜராத்

'நமோ'ஜி!

குஜராத்தில சுருக்கமா, செல்லமா, 'நமோ'ன்னா மண்டியிடுன்னு அர்த்தம். இந்த 'நமோ' மோடியின் செல்லப் பெயர்.

மறக்கவோ, ஒதுக்கவோ முடியாத குஜராத் படுகொலைகளின் படுகொலையை அரங்கேற்றி பிரச்னையை மாற்றினார்.

இவர் ஆரம்பித்த 'நர்மதா பூஜன் யாத்ரா' முறைமுக தேர்தல் விதிமீறல் என்பதால், தேர்தல் கமிஷன் அதைத் தடை செய்து ஆணை போட்டது. அதற்குள் யாத்திரை 90 சதவிகிதம் முடிந்து விட்டது.



டெல்லியை 'வாடிகன்' நகரம்போல ஆக்க வேண்டும் என்பது ஷீலா தீட்சித்தின் விருப்பம்! ஆரம்பக் காலம் தொட்டே பெண்கள் பிரச்னைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார். ஒருமுறை பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து இவர் போராட, உ.பி. அரசு கைது செய்து உள்ளே தள்ளிவிட்டது. இந்தச் சிறைவாசத்துக்குப் பிறகு, அரசியல் அரங்கில் இவருக்கு ஏறுமுகம்! ஐ.நா. பெண்கள் கமிஷனில் ஐந்து ஆண்டுகள் இந்தியப் பிரதிநிதியாக இருந்திருக்கிறார்.

1938ல் பிறந்த ஷீலா, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான உமாசங்கர் தீட்சித்தின் மகன் வினோத் தீட்சித்தை மணந்து கொண்டார். ஒரு மகன், மகள் உண்டு.




சின்னம்மா

சோனியாவின் உள்வட்டாரத்தில் இவருக்கும் முக்கிய இடம் உண்டு என்பதால், காங்கிரஸ்காரர்களுக்கு இவர் இன்னொரு சின்னம்மா!

வெள்ளைத் தாடிக்குள்

அதிகாலை நேரம் அது. பாரா போலீஸ்காரர் ஒருவர் துப்பாக்கியோடு தூக்கக் கலக்கத்தில் இருந்தார். ஏதோ சலசலப்புச் சத்தம். "ஏய்... யார் அது?" பதற்றத்தில் கத்தினார் போலீஸ்காரர்! அந்தக் கத்தலைப் பற்றிக் கவலைப்படாமல் ஓர் உருவம், சர சரவென்று, ஸ்டேஷனுக்கு முன்பிருந்த கொடிமரத்தில் ஏறிக் கொண்டிருந்தது. அதற்குள் ஸ்டேஷனுக்குள்ளிருந்த ஒன்றிரண்டு போலீஸ்காரர்களும் வாசலுக்கு வந்துவிட்டார்கள். கொடிமரத்தில் ஏறிய அந்த உருவம், பறந்துகொண்டிருந்த யூனியன் ஜாக் கொடியை கம்பத்திலிருந்து பிய்த்து எடுத்தது. விறு, விறுவென்று கீழே இறங்கி ஓட, டுமீல், டுமீல் என அந்த உருவத்தை நோக்கி போலீஸ் சுட, மயிரிழையில் தப்பி ஓடிவிட்டது அந்த உருவம்!



தமது பதினான்கு வயதில் போலீஸ் துப்பாக்கித் தோட்டாவிலிருந்து தப்பிய அந்த உருவம்தான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான ஹர்கிஷன் சிங் சுர்ஜித்.

தொண்ணூறு வயதாகும் சுர்ஜித்தின் வெள்ளை தாடிக்குப் பின்னால், இப்படி ஒரு வீர வரலாறு உண்டு.

பலமுறை சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்

அதன் பிறகு தலை மறைவு வாழ்க்கை, எமர்ஜென்ஸி சிறை வாசம், என்று பல அனுபவங்கள்.

குடும்பச் சொத்தாக சுர்ஜித்துக்கு இருபது லட்ச ரூபாய் இருந்தது. அதில் பத்து லட்சத்தை கட்சிக்கும், பத்து லட்சத்தை சுதந்திரப் போராட்ட வீரர் நிதிக்கும் கொடுத்து விட்டார். 1960களில் கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்த போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை வளர்க்கப் பாடுபட்டவர்களில் சுர்ஜித்தும் ஒருவர்.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக, தில்லி அரசியலில் ஒரு சூத்திரதாரியாக சுர்ஜித்



ர வரலாறு!

விளங்கி வருகிறார். பா.ஜ.க அல்லாத, காங்கிரஸ் அல்லாத, மத்திய அரசை அமைப்பதுதான் சுர்ஜித்தின் நோக்கம். அது சாத்தியமில்லாத நிலையில், அவ்வப்போது பா.ஜ.க.வின் வேகத்தைத் தடுக்க, காங்கிரஸுடன் 'டச்' வைத்துக் கொள்ளுவதை விரும்புவார் சுர்ஜித்.

உ.பி.யின் முதலமைச்சராக இரண்டு முறை, விதான் சபாவின் தேர்தல்களில் ஏழு முறைகளுக்கு மேல் வெற்றி, பாராளுமன்றத் தேர்தலில் இரண்டு முறை வெற்றி என்று வெற்றிகள் இவருக்குத் தண்ணீர் பட்ட பாடு. சமாஜ்வாடி கட்சி ஆரம்பித்து தமது வெற்றிக் கொடியோடு இணைத்துக் கொண்டவர்.

நாற்பது ஆண்டுகளாக உ.பி.யின் விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், சிறுபான்மையினர், தலித்துகள், பின் தங்கிய வகுப்பினர் என்று அத்தனை பேரின் ஆதரவையும் பெற்ற ஒரே அரசியல் தலைவர். விவசாயக் குடும்பத்தில் 1939ல் பிறந்து ஆசிரியர் வேலைக்காகப் படித்தாலும், பின் தங்கிய மக்களின் துன்பங்கள் இவரை அரசியலுக்கு இழுத்துவிட்டன.

*1961 - 62*ல் எட்டாவா கல்லூரியில், மாணவர் யூனியன் தலைவ



உ.பியின் சூப்பர் ஸ்டார்!

ராகத் தமது வெற்றிப் பயணத்தைத் தொடங்கினார். விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களின் வட்டியை வெகுவாகக் குறைத்து, இப்போதைய, வருடத்திற்கு 12% என்ற அளவுக்குக் குறைத்ததிலும், இந்தியை ஆட்சி மொழியாக்க சட்டம் போட்டதிலும் இவரது பங்கு பெரிது.

உள்ளே வெளியே!

ஐம்பது வயதை எட்டிப் பிடிக்கப் போகிற மம்தா பானர்ஜி, தமது பதினைந்தாம் வயதில் தந்தையை இழந்தவர். தந்தையின் மரணத்தையடுத்து குடும்பச் சுமையை ஏற்றுக் கொண்டது, மம்தாவும் அவரது அண்ணனும் தான்.

அதிகாலையில் எழுந்து, வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, பள்ளிக்கூடம் போய்விட்டு வந்தால், றுபடி வீட்டு வேலை, படிப்பு. டிக்கிற காலத்தில் கவலையை றக்க, அவர் ஓவியங்கள் ட்டுவார். அவ்வப்போது மது எண்ண ஓட்டங் ளுக்கு, எழுத்து வடிவம் காடுத்ததும் உண்டு.

எம்.ஏ, எம்.எட், சட்டம் ன்று அடுத்தடுத்து படித் துக்கொண்டே இருந் ாலும், மாணவர் காங்கிர பில் தம்மைத் தீவிரமாக டுபடுத்திக் கொண்டார். 977ல் கம்யூனிஸ்ட் ஆட் ிக்கு வந்ததும், பல சங் டங்களைச் சந்திக்க நேர்ந்தது. இவரைக் கொலை செய்யவும் முயற்சிகள் நடந்தன. 984ல் மூத்த மார்க்சிஸ்ட் தலைவ ான சோம்நாத் சாட்டர்ஜியை திர்த்துப் போட்டியிட்டு, தோல்வி அடைந்தார். அதனை டுத்து, அவரது அரசியல் ாழ்க்கை ஏறுமுகம்தான்.

காங்கிரஸிலிருந்து விலகி, ரிணாமூல் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்து, பரபரப்பூட்டினார். இவரது தீப்பொறி பறக்கும் பச்சுக்கு ஏராளமான ரசிகர்கள் ண்டு. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 'உள்ளே வெளியே' ஆட்டம் ஆடியது, இவரது அரசியல் முதிர்ச்சியின்மைக்கு உதாரணம் என்பது ஒரு விமர்சனம்!



கட்சியின் எல்லையைக் கடந்து அரசியல்வாதிகள் இருக்க வேண்டும் என்பது இவரது பாலிஸி. அதன்படி ஜோதிபாசு முதல்வராக இருந்தபோது, அவரது பிறந்த நாளன்று பூங்கொத்துடன் வீடு தேடி வாழ்த்தப் போனார் மம்தா. ஆனால் மம்தாவைச் சந்திக்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டார் பாசு!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 /03-5 * Licensed to post-without prepayment under PMG's Licence No. WPP 358/03-05 * Registered as a Newspaper in Srilanka.

(Supplement to the Kalki issue Dated 11.4.2004)

சுப்ரமணியன் சுவாமி, ஆரம்பத்தில் ஜனசங்கத்தில் இருந்தவர்! அதன் சார்பில் ராஜ்யசபா உறுப்பினர் ஆனவர். ராஜ்யசபாவில் இவரது அட்டகாசமான பேச்சுகளைக் கேட்டு, அகமகிழ்ந்தவர்களும் உண்டு, ஆடிப் போனவர்களும் உண்டு.



நெருக்கடி நிலை காலத்தில் இந்திராகாந்தி இவரைக் குறி வைக்க, பாராளுமன்ற மண்டபத்தில் நின்று அனைவரையும் ஆச்சர்யத்திலாழ்த்தினார். அலர்ட் ஆன அரசு இவரைக் கைது செய்ய முயன்றபோது, பாராளுமன்றத்திலிருந்து எப்படி மாயமானார் என்பது சி.பி.ஐயாலும் விடுவிக்க முடியாத புதிர். அதேபோல, ஜெ. அரசு இவரைக் கைது செய்ய முற்பட்டபோது, ஜேம்ஸ் பாண்டு கணக்காய் சென்னையிலிருந்து தப்பித்து, மாறுவேடத்தில் மறுபடி தமிழகத்தில் வலம் வந்து பரபரப்பூட்டியதை, அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியுமா என்ன? ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் படித்து, அங்கே ஆசிரியர் பணி புரிந்திருக்கிறார். ஒருவிதத்தில், இன்றைய தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் இவற்றுக்கெல்லாம் பிள்ளையார் சுழி போட்டவர் இவர்தான்!

தொகுப்பு : **மௌலி, ப்ரியன், விஷ்வக்**

அட்டை : **ஸ்யாம்**

கார்ட்டூன்கள் : **ராமு, ராஜு, அமர்நாத், சேகர், பிள்ளை**

ஜேம்ஸ்பாண்டு